உள்நாடுவருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு „ ரூ. 5-0-0
R. No. M. 3066 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

# பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

| மாலை 1. | ஈரோடு, பவ-வரு புரட்டாசி-மீ 15-உ (30—9—1934) | மலர் 6. |
|---|---|---|

## சுயமரியாதை இயக்கம் செய்ததென்ன?

(காரைக்கால் தோழர் சொ. சிதம்பரம்)

நொண்டிச்சிந்து.

இருளடர்ந்த கானகத்தில்—பளீரென
மருள்நீங்கக் கதிரொளி பட்டகதைபோல்
பாரில்மக்கள் அறிவிழந்து—அடிமையில்
ஊறிமிக வாடிநின்று தத்தளிக்கையில்
சுயமரி யாதையெனும்—சுடரொளி
பயன்தரும் பாதைகளைப் பாமரருமே
அறிந்திடும் தன்மையதாய்—ஆரியரின்
குறுகிய நோக்கமாம்பே ரிருளறுத்தே
பெண்டிர்க் குரிமைநல்கிப்—பேருலகில்
அன்பு மணங்கள் தழைத் தோங்கச்செய்தே
விதவையர் மணம்ஆற்றி—என்றும்
சதமென வேநினைத்த சாஸ்திரமெல்லாம்
முழுப்புரட் டாமென்றே—முரசொலி
முழக்கிக்குப் பையில்தள்ளி மூடிமண்ணிட்டே
ஆரிய ராதிக்கத்தின்—அகந்தையை
பாரினில் தலையெடுக் காமலோட்டியே
தேனெனப் போற்றிவந்த—மேலுலக
நான்முகனு லேபடைத்த இந்துமதத்தை
சிந்தைகலங் காதெதிர்த்து—வீணில்
மந்தைமந்தை யாய்மடியும் பாமரர்கட்கு
மதம்கடவுள் மறுஜன்மத்தின்—புரட்டினை
இதமுட னேஎடுத்துக் காட்டியேபின்பு
காந்தீயம் கதர்ப்புரட்டைக்—கண்டித்து
மாந்தர்க்குப் பகுத்தறி வோங்கச் செய்தே
கலப்புமணம் மறுமணங்கள்—பணக்காரர்
இலத்திலும் நடைபெறக் கிளர்ச்சிசெய்தே
தொழிலாளர் உழைப்பதனை—உறிஞ்சியுண்ணும்
பழிகாரப்பணக்காரர் சூழ்ச்சியதனை
வரிவரி யாய்வரைந்து—தோழர்கட்கு
விரிவுரை நிகழ்த்தியே வீரர்களாக்கி
கன்னெஞ்சம் கொண்ட கசடர்—கூட்டத்தில்
தென்படும் பொருளையார்க்கும் சொந்தமதாக்க
சமதர்ம திட்டமதை—வகுத்துமே
அமர்க்களம் ஏகுதற்கு அணிவகுத்தே
வீரவாண் மைஅளித்து—திடமுடன்
மார்தட்டிச் சுதந்திரப் போரினிலே
வீறுகொள்ளும் வழிக்கேநம்மைப்—பழக்கி
யாருக்கும் அஞ்சாத தீரரெனவே
குன்றென நிமிர்ந்துநிற்க—நமது
தன்மதிப் பியக்கம்செய்த தொண்டினைக்கண்டீர்
இதனை யறிந்தெல்லோரும்—இதம்பெறச்
சிதம்பரன் செந்தமிழைச் செப்பிமகிழ
வருவீர் தோழர்களே.

---

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 | ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 | உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 | சாமிகளின் அடிமை | 0-12-0 |
| விவாக விடுதலை | 0-4-0 | லோகல்போர்டு ஆக்ட் (சென்னை) | 2-0-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 | பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| The Right of Temple Entry (English) | 1-0-0 | நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை | 0-8-0 |
| The Crux of the Indian Problem (English) | 1-0-0 | | |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## பகுத்தறிவுக்கழக வெளியீடுகள்.

### பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு

ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M. A.

இந் நூல் இங்கிலாந்து தேசத்திலுள்ள டர்ஹாம் நகரத்துப் பாதிரியார் ரெவரெண்ட் ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் எம். ஏ. அவர்கள் பிரமச்சரியம் என்னும் பெயரால் பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணு 4.

### மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

இந்நூலில் மரணத்திற்குப் பிறகு ஜீவன் உண்டா? என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணு 4.

### மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். இதில் பல அரிய ஆராய்ச்சியும், சிறந்த அபிப்பிராயங்களும் அடங்கி இருக்கின்றன. விலை அணு 4

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், ஈரோடு.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக 3-ம் வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகங்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0

ரிவோல்ட்டு 1 வருஷமாலை பைண்ட் செய்ததுகிரயம் ரூ. 3—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

### "வெற்றி முரசு"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

கௌரவ ஆசிரியர்:—

S. லக்ஷ்மிகாந்தம் B. A. B. L.

ஆசிரியர்:—

சி. நடராஜன், மாயவரம்.

பழய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நவீன இந்திய பிரஜைகளாகவும், அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலையைக்கோரி ஆண்மையோடு போராடும் சுதந்திர வீரர்களாகவும் சமதர்ம உணர்ச்சியுடையவர்களாகவும், நாட்டின் நலங்கருதும் நல்லோராகவும், வாழவிரும்பும் தோழர்களுக்கு நமது "வெற்றிமுரசு" தக்கதொரு வழிகாட்டியாகும். உயர்ந்தபதிப்பு.

வருட சந்தா ரூ. 3—0—0

தனிப்பிரதி விலை அணு ஒன்று.

விலாசம்:—

மானேஜர்,

"வெற்றி முரசு" மாயவரம்.

### "சமதர்மம்."

ஆசிரியர்:—

வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.

தனிப்பிரதி விலை 6 பை.

விலாசம்:- மானேஜர்,

"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை

ஆசிரியர்:—

மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடுபடுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0

விலாசம்:—

மானேஜர்,

"நகர தூதன்"

உறையூர், திருச்சி.

# கர்ப்பத்தடையும், முசோலினி அழுகையும்.

## வெள்ளையர் அழிகின்றனராம்.

## இந்தியர் பெருகுகின்றனராம்.

இத்தாலி சர்வாதிகாரியான முசோலினி கர்ப்பத்தடையைக் கண்டு அஞ்சி அழுதுகொண்டு பேசியதாவது:—

வெள்ளைச்சாதியார்கள் நசித்துக்கொண்டு வருகிறார்கள் என 1926ம் வருஷத்திலேயே எச்சரிக்கை செய்திருக்கிறேன். 8 வருஷங்களாயின. வெள்ளைச்சாதியார்கள் நாளுக்குநாள் தொகையில் குறைந்துகொண்டே வருகிறார்கள். உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் இதே கூக்குரலாகவே இருந்து வருகிறது.

ஹங்கேரியில் ஒரு குடும்பத்திற்கு ஒரு குழந்தை வீதந்தான் இருந்து வருகிறது. 8 முதல் 10 கோடி ஜனங்கள் குடியிருந்து வாழக்கூடிய அர்ஜண்டைன் நாட்டில் 1939ம் வருஷத்தில் இந்நாட்டில் 1 கோடியே 20 லட்சம் ஜனங்கள்தான் இருப்பார்கள். பிறப்பிற்கும், இறப்பிற்கும் சரியாகவிருக்கும். ஆண் பிள்ளைகள் கிழவர்களாகவிருப்பார்கள்.

ஃ ஃ

பிரான்ஸ் தேசத்திலுள்ள 20 பிரபல அரசியல் வாதிகள், ராஜதந்திரிகள், சாத்திர விற்பன்னர்கள் ஆகியோர் இது விஷயமாய் அந்நாட்டு மகாஜனங்களுக்கு ஓர் விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதில் குறிப்பிட்டுள்ள விஷயங்களாவன:—1932-33ல் பிரான்ஸில் 40,000 ஜனனம் குறைவு. 1870ம் வருஷத்திற்கு முன் 10 லட்சம் ஜனனம் இருந்திருக்கையில் இப்பொழுது 682,000 ஜனனந்தானுண்டு.

இதன் காரணமாய் கலியாணங்கள் குறையும். பிரஜா உற்பத்தி குறையும். காலக்கிரமத்தில் ஜனன விகிதம் 80,000 வரையில் குறைவுபடும்.

பிரான்ஸ் தேச தம்பதிகளுக்குள்ள பிரஜோற்பத்தித் தத்துவம் இப்பொழுது உள்ளது போலிருந்தால் 10 வருஷ காலத்தில் 550,000 ஜனனந்தான் பிரான்ஸில் ஏற்படும் எனல் வேண்டும். அச்சமயம் பிறப்பைவிட இறப்பு அதிகமாயிருக்கும்.

ஜனங்கள் குறைந்து வருங்காரணத்தால் கிராமங்கள் பாழாயின. விவசாயம் குறைந்தது. பிறப்புக் குறையுமானால் பிரான்ஸ் தேசத்தில் வயோதிகர்கள் அதிகப்பட்டு நாடு ஒன்றுக்கும் பலன் இல்லாமற் போகும். இதன் காரணமாய் விவசாயம், கைத்தொழில் வியாபாரங்கள் நசிக்கத்தலைப்படும்.

வரி கொடுப்போரில்லாமல் அரசாங்கம் கடனாளியாகும். தன்னைப் பாதுகாத்துக்கொள்ள பிரான்ஸ் சக்தியற்றுப் போய்விடும்.

இவ்விதமான ஆபத்துக்கள் வெகு நாட்களுக்குப் பின் வரப்போகிறது என்றெண்ணவேண்டாம். அது கூடிய சீக்கிரம் வரும் என்பதற்கையமில்லை.

இந்த வெளியீட்டிற்குக் கையொப்ப மிட்டுள்ளவர்களில் பாயிங்கரே, மில்லராந்த், ஹெரியத், கார்டினவர்த்தியர், மார்ஷல் பாஷ் முதலியவர்களுமுண்டு.

ஃ ஃ

பிரான்ஸிய ஜனத்தொகையைப்பெருக்கும் சங்கம் என்ற ஓர் ஸ்தாபனத்தினின்றும் வெளியான பிரசுரத்தின் சாரம் வருமாறு:—

சென்ற 50 வருஷ காலங்களுக்குள்ளாக பிரான்ஸ் தேசத்தில் ஜனனம் 100க்கு 33 விகிதம் குறைந்து விட்டது.

பிரான்ஸ் தேசம் மற்றெல்லாத் தேசங்களையும்விட அதிகக் கிழவர்கள் கொண்டநாடு. பிரான்ஸில் 100க்கு 14 பேர் கிழவர்கள்; ஜெர்மனியில் 9 பேர். ருஷியாவில் 7 பேர் தான்.

பிறப்பு விகிதம் இங்கிலாந்திலும் குறைந்து வருகிறது. அது அந்நாட்டவர்களுக்குப் பெருங்கலக்கத்தையுண்டாக்கி வருகிறது.

தலைமை ஸ்தானத்தில் கிழவர்கள் அதிகப்பட்டால் பெரிய சாம்ராஜ்யத்தை எவ்விதம் கொண்டு நடத்த முடியும்?

ஜனன விகிதம் குறைந்த நாடுகளின் கதி என்னவாயிற்று என்ற விஷயத்தைச் சரித்திரங்கள் கூறுகின்றன.

மலடிகள் அதிகமாய் வாழ்ந்த கிரேக்க நகரங்கள் ரோமாபுரியின் வீரர்கள் வசம் சிக்குண்ட கதையைப் பாலிபியஸ் என்ற சரித்திரக்காரர் சொல்லுகிறார். தன் நாட்டில் ஜனங்கள் குறைந்து சம்பளத்துக்கு யுத்த வீரர்களைப் பிடிக்கவேண்டிய நிலைமை ரோம ராஜ்யத்திற்கு ஏற்பட்டதும் அந்த ராஜ்யம் வீழ்ந்துபட்டது.

தன்னுடைய சொந்த இராணுவ வீரரின் உயரத்தை அதிகப்படுத்த வேண்டியே ஜூலியஸ் சீசர் உலாந்தாவிலிருந்த "பட்டாவி" சாதியாரைத்தருவித்தார். ஜனசமூகத்திற்குக் கிழத்தன்மை ஏற்படுவதே மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும்.

பிரான்ஸ் தேசத்தில் பள்ளிக்கூடங்களில் போய் படிக்கக் குழந்தைகள் இல்லாமல் பல பள்ளிக்கூடங்கள் மூடப்பட வேறு சில பள்ளிக்கூடங்களில் இத்தாலியர் போல் ஸ்பானியர் போன்ற அந்நியர் குழந்தைகள் போய் படித்துக்கொண்டிருக்கிறார்கள்.

பலமற்ற இந்த சமூகத்தின் செலவுகள் நாளுக்குநாள் அதிகப்பட்டுக்கொண்டிருக்கின்றன. 50 வயதுள்ள பாலியர்கள் உள்ள சாதியார்களும் இருக்கிறார்கள்.

இதே நிலைமையில் பிரான்ஸ் போய்க்கொண்டிருந்தால் இந்த நூற்றாண்டின் இறுதியில் இதன் ஜனத்தொகை ஸ்பெயின் தேசத்தைவிடக் குறைந்ததாகவிருக்கும்.

ஃ ஃ

பிரான்ஸின் பிறப்பு விகிதத்தைவிடக் குறைந்த விகிதமுள்ள ஐரோப்பிய நாடுகளுமுண்டு.

பணம் அதிகப்படுவதோடு மலட்டுத்தனமும் அதிகப்படும் என்றுசொல்லுவது பொருந்தும். மலட்டுத்தனமில்லாதவர்கள் ஏழைகள் தான். அவர்களுடைய நடத்தையில் இன்னும் கெடுதி ஏற்படவில்லை.

ஜனத்தொகை அதிகப்படுவதால் தரித்திரம் அதிகப்படும் என்று மால்தூஸ் என்பவர் சென்ற நூற்றாண்டில் வெளியிட்ட அபிப்பிராயமே பொய்ப்பிக்கப்பட்டுப்போயிற்று. இப்பொழுதுள்ள ஜனத்தொகையைவிட 20 மடங்கு ஜனங்களை இவ்வுலகம் காப்பாற்ற முடியும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் இப்பொழுதுள்ள ஜனத்தொகையைவிட 5 மடங்கு ஜனத்தொகையைக் காப்பாற்ற முடியும். கானடா 20 மடங்கு ஜனங்களைக் காப்பாற்ற முடியும். தென் அமெரிக்கா முழுவதும் ஜனங்களில்லாமலிருக்கின்றது. ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஐரோப்பா முதலிய நாடுகளிலும் இன்னும் இடமிருக்கிறது ஆசியாவில் சொல்லத்தேவையில்லை

ஃ ஃ

நாம் இப்பொழுது அனுபவித்துவரும் கஷ்டம் பஞ்சத்தால் ஏற்பட்டதல்லவென்பதை எல்லோரும் உணரவேண்டும். அளவிற்கு அதிகமாய்ச் சாமான்களை உற்பத்தி செய்து அதனைச்செய்த நாடுகளில் அவற்றை உபயோகிக்க ஆட்கள் இல்லாமல் போனதே காரணமாகும்.

எல்லா ஜாதியாருள்ளும் புத்திசாலிகளாயிருப்பவர்களுக்குப் பிள்ளைகள் அதிகம் உண்டாவதாயில்லை. 1, 2 குழந்தைகளைப் பெற்றுவிட்டு அவர்கள் சும்மாயிருக்கிறார்கள். அல்லது பிள்ளைகளே தேவையில்லை யென எண்ணியிருக்கிறார்கள். நமது சர்வகலாசாலையில் பட்டம் பெற்றவர்களைக் கவனியுங்கள். அவர்கள் புதிய உற்பத்திகள் செய்து நாட்டின் அறிவை உயர்த்த முயற்சிப்பவர்களாகக் காணப்படவில்லை.

இதுதான் தற்காலம் நாம் காணும் காட்சி. என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும், முடிவென்ன வென்பதை 100 வருஷ காலம் வரையில் பேசிக்கொண்டே இருக்கலாம். நடக்கிறது நடக்கட்டும் என்று விட்டு விட்டுச் சும்மாவிருப்பதைப்போலுள்ள மடமை வேறில்லை.

ஃ ஃ

கவனிக்கப்போனால் பல அரசாங்கங்களும் ஜனத்தொகையை அதிகப்படுத்த முயற்சித்துக்கொண்டிருக்கின்றன.

இத்தாலியில் நாம் இதனை 1926ம் வருஷம் ஆரம்பித்தோம். இதன் பலனை நாம் அறியக்கூடிய காலம் இன்னும்வரவில்லை. "இருப்பதா இறப்பதா" என்ற நிலையில பல வெள்ளைச் சாதியாரும் கவலைபடைந்துகொண்டு வருகிறார்கள்.

கறுப்பு, மஞ்சள் சாதியார்கள் அளவுக்கதிகமாய் விருத்தியாய்க் கொண்டு வருகையில் வெள்ளையரும், அவர்களது நாகரீகமும் அழிந்து போக விட்டு விடுவதா?

(தி-ன்)

# Decameron by Boecaccio

# "டெக்கமாரன்"

## அல்லது

# விகடக்கதைகள்.

## வெங்காயப் பாதிரியார் கதை.

(மொழிபெயர்ப்பாளர் தோழர் உடுமலை கனகராஜன்)

3.

செர்டால்டோ என்னும் சிறுகிராமம் எல்ஸா பள்ளத்தாக்கில் உள்ளது. முற்காலத்தில் அங்கே பணக்காரர்கள் அதிகம். அந்த ஊருக்கு வெங்காய உபதேசி என்ற கிறிஸ்துவ உபதேசியார் ஒருவர் அடிக்கடி வந்து யாசகமும், காணிக்கையும் பெற்றுக்கொண்டு போவார். அவர் குள்ள வடிவமும், செம்பட்டை மயிரும், சிரித்த முகமும் கொண்டவர்; எவ்விஷயத்தைப் பற்றியும் விரிவாகப் பேசுவார். பெரிய பிரசங்கியைப்போல் பேசினாலும் வெறும் அரட்டை என்பது அப்பக்கத்தாருக்கு நன்றாய்த்தெரியும். ஆளுக்குத் தகுந்தபடி பேசும் சாமர்த்தியமும் இருந்ததனால் ஜனங்களுக்கு அவரிடம் அபிமானம் இருந்தது.

ஒருநாள் அவர் வழக்கப்படி அவ்வூருக்குச் சென்று காலையில் ஜெபத்திற்குக் கோயிலுக்கு வந்திருந்த ஜனங்களைப்பார்த்து "தோழர்களே! நீங்களெல்லோரும் வருஷா வருஷம் நம்முடைய அர்ச். அந்தோணியாரின் மடத்தைச் சேர்ந்த ஏழைச்சகோதரர்களுக்கு தானியமும், பண்டமும் அவரவர் சக்திக்கேற்க அனுப்புவது மிகவும் போற்றத்தக்கது. அதோடு நமது சகோதர சங்கத்தைச் சேர்ந்தவர்கள் காணிக்கையும் செலுத்துவது வழக்கம். அவைகளையெல்லாம் பெற்றுக்கொண்டு போகவே மடாதிபதி என்னை அனுப்பியிருக்கிறார். மத்தியானத்திற்குப் பிறகு மணியடித்தவுடன் நீங்களெல்லோரும் காணிக்கைகளையும், பண்டங்களையும் எடுத்துக்கொண்டு உபதேசத்திற்கு வந்து சேருங்கள். உபதேசம் முடிந்தவுடன் உங்களுக்கு, தேவதூதனான (Gabriel) கேப்ரியல் நாஸரத்தில் தேவமாதாவின் அறையில் விட்டுச்சென்ற இறகைக் காட்டுவேன். அது மிகவும் புனிதமானதும், தெய்வீகத்தன்மை பொருந்தியதுமாகும்." என்று சொன்னார்.

இப்பிரசங்கத்தைக் கேட்ட இரு வாலிபர்கள் அவ்விறகைத்திருடி அவ்வுபதேசியாரை ஏமாற்ற வேண்டுமென்று நினைத்து, அவர், நணபரொருவரின் வீட்டிற்குச் சாப்பாட்டிற்குச் சென்றவுடன், அவர் தங்கியிருந்த சத்திரத்தையடைந்தனர். அவ்வுபதேசியாரின் வேலைக்காரனான குயுக்லியோ பலீனா என்பவன் தன்னுடைய கறுத்த செழித்த தாடியைக்கண்டு எப்பெண்ணும் தன்னைக் காதலித்தே தீரவேண்டுமென்னும் நம்பிக்கை கொண்டவன். தான்செல்லுமிடங்களிலெல்லாம் தனக்கு ஒரு மனையாளும். தங்க இடமும் சம்பாதிக்க முயற்சிக்கும் இயல்புள்ளவன். ஆகவே இவ்விருவரும் சத்திரத்தை யடைந்த பொழுது அவன் உபதேசியாரின் அறையைத் திறந்தபடியே விட்டு அச்சத்திரத்திலிருந்த ஒரு வேலைக்காரப் பெண்ணிடம் சென்று காதலுரையாடிக் கொண்டிருந்ததில் அதிசயம் ஒன்றுமில்லை. இது இவர்களுக்கு மிகவும் சௌகர்யமாயிருந்தது. உடனே அவர்கள் உபதேசியாரின் அறையை யடைந்து அவருடைய பையில் தேடினர். பட்டுத்துணியில் மூடி வைக்கப்பட்டிருந்த ஒரு சிறு பெட்டியில் கிளியின் இறகு இருந்ததைக்கண்டு, அவ்விறகை யெடுத்துக் கொண்டு காலிப் பெட்டியில் அங்கே கிடந்த நிலக்கரித்துண்டுகளில் சிலவற்றைப் போட்டு எல்லாவற்றையும் முன்பு இருந்தபடியே வைத்து விட்டுத் திரும்பி விட்டனர். கேப்ரியல் தேவதூதனின் இறகைக்காட்டப் போவதாக அறிந்த ஜனங்களும் ஏராளமாக் கூடி விட்டனர்.

உபதேசியார் திருப்தியாக விருந்துண்டபின் சிறிது உறங்கி விட்டுக் கோயிலை யடைந்து தமது வேலையாளுக்குப் பையை எடுத்து வரும்படி சொல்லி அனுப்பினார். அவன் வந்து மணியடித்த பின் உபதேசியார் தன் பிரசங்கத்தை யாரம்பித்து பல விஷயங்களைச் சொல்லி முடித்து இறகைக் காட்ட வேண்டிய சமயமானவுடன் இரண்டு பந்தங்களைக் கொழுத்தச் செய்து தன்னுடைய குல்லாயைக் கழற்றி விட்டு மிகவும் வணக்கத்துடன் பெட்டியைக் கையில் எடுத்து கேப்ரியலையும், அத் தேவ தூதனுடைய இறகின் மகிமையையும் புகழ்ந்து கொண்டே அதைத் திறந்தார். அதில் இறகுக்குப் பதில் கரியிருந்ததைக் கண்டவுடன் அம்மூடன் வசத்தில் அறையை விட்டு வந்ததற்காகத்தன்னைத் தானே திட்டிக் கொண்டார். இருந்தாலும் இதைக் கொஞ்சமும் வெளிக்குக்காட்டிக் கொள்ளாமல் ஆகாயத்தை நோக்கிக் கடவுளைப் புகழ்ந்த வண்ணம் தன் பொய் மூட்டையை அவிழ்த்து பின்னும் பிரசங்கமாரி பொழிந்தார்.

சீமான்களே! சீமாட்டிகளே!! என்னுடைய சிறுவயதில் என்னை பீங்கானைப்பற்றி ஆராய்வதற்காக கிழக்கே யனுப்பினார்கள். அப்போது நான் வெனிஸ் துறைமுகத்திலிருந்து கிரீஸ் நகரின் வழியாகச்சென்று குதிரையின் பேரில் பால் டெக்காவையும், கார்போ நாட்டையும், பார்லோனையும் கடந்து (இவர்சொல்லும் இடங்கள் அனேகம் உலகிலேயே இல்லாதவைகள்) சர்டினியாவை அடைந்தேன். இன்னும் கரையோரமாகவே சென்று செயின்ட் ஜார்ஜ் வளைகுடாவைக் கடந்து பப்பியா, டிராப்பியா, பிரதேசங்களை அடைந்தேன். பிறகு மென்னாக்னாவிற்குச் சென்று அங்கு நம்மினத்தைச் சேர்ந்தவர்களில் அநேகம்பேர் ஒருவித கவலையுமின்றி மற்றவர்கள் கஷ்டப்படுவதையும் கவனியாமல் சுக ஜீவிகளாய் முத்திரையில்லாத நாணயங்களைச் செலவு செய்து கொண்டு ஜீவிக்கின்றனர். ஆப்ரஸ்ஸி நாட்டில் ஆண்களும், பெண்களும் மரச்சப்பாத்துகளை அணிந்து கொண்டு மலையின் மீது ஏறுவார்கள். அதற்கடுத்த நாட்டில் சிசாவில் ரொட்டியையும், பையில் சாராயத்தையும் எடுத்துச் செல்வர். அங்கேயிருந்து பேக்கல் மலையை அடைந்தேன். அங்கே தண்ணீரெல்லாம் மலையிலிருந்து கீழ் நோக்கியேசெல்லும். கடைசியாகநான் இண்டியா, பாஸ்டினாகாவிற்குச் சென்றேன். அங்கே நான் சத்தியமாய் பறக்கும் பாம்புகளைக் கண்டேன். அங்கேயும் நான் தேடிச்சென்றதை அடையாமல் திரும்பும் பொழுது நம் புனித நாட்டை யடைந்தேன். அங்கே வெய்யிற்காலத்தில் ஆறின ரொட்டி ஆறு அணாவும், சுடு ரொட்டி சும்மாவும் கிடைக்கும். அங்கே (Blame me not pray) குற்றஞ் சொல்லாமல் கும்பிடு என்னும் பெயர் கொண்டபோற்றத்தக்க பாதிரியார் அவர்களைக் கண்டேன். அவர் (St. Antony) அர்ச். அந்தோணியாரின் மடத்தைச் சார்ந்தவர்கள் பால் உள்ள அபிமானத்தால் என்னை வரவேற்று அழைத்துச் சென்று பக்தியோடு தாம் பத்திரமாய் வைத்திருந்த பூஜிக்கத்தக்க பொருள்களையெல்லாம் எனக்குக் காண்பித்தார். உங்களுடைய திருப்திக்காக அவைகளில் சிலவற்றை மட்டும் கூறுகிறேன். முதல் முதலில் ஹோலி கோஸ்ட் (Holy Ghost) இன் ஒரு விரல் அப்படியே உயிருடன் இருப்பது போலவே வைக்கப்பட்டிருந்தது; அர்ச். பிரான்ஸிஸுக்குத் தோற்றமளித்த தெய்வீகமான மிருகத்தின் முன் வாயும், மற்றொரு மிருகத்தின் நகமும் இருந்தன; வெர்பம்காரோவின் நெஞ்செலும்பு ஒன்று ஜன்னலில் பொருத்தி வைக்கப்பட்டிருந்தது; கத்தோலிக்க குருமார்களணியும் ஆடையின் சில பாகங்கள் இருந்தன; கிழக்கிலிருந்து வந்த மூன்று மன்னர்களுக்குக் காட்சியளித்த நக்ஷத்திரத்தின் ஒளியும் அங்கே வைக்கப்பட்டிருந்தது; அர்ச். லாசரஸின் தாடை எலும்பையும் அங்கே பார்த்தேன். அர்ச். மைக்கேல் பிசாசுடன் சண்டையிட்ட பொழுது வழிந்த வியர்வையை ஒரு சீசாவில் வைத்திருந்தனர்; இன்னும் அநேகம் பொருள்களுமிருந்தன. அப்பாதிரியார் பல நாளும் தேடி அகப்படாத புத்தகங்கள் இரண்டை நான் அவருக்குக்கொடுத்தேன். அதனால் அவர் என்மேல் பிரியப்பட்டு எனக்கு, புனிதச்சிலுவையின் பல் ஒன்றும், பெயர் பெற்ற சாலமோன் கோவிலிலுள்ள மணியின் ஓசை அடைக்கப்பெற்ற ஒரு சிறு சீசாவும் கேபீரியல் இறகொன்றும் நம்முடைய அர்ச். லாரென்ஸ் வைத்து எரிக்கப்பெற்ற நிலக்கரித்துண்டுகள் சிலவும் கொடுத்தார். அவைகளனைத்தையும் நான் இன்னும் பக்திபூர்வமாகக் காப்பாற்றி வருகிறேன். இதுவரையும் என்னுடைய தலைவர் அவற்றை வெளியில் காட்ட அநுமதிக்கவில்லை. பிறகு பல அதிசயமான தெய்வீகச் செயல்களால் அவற்றின் மகிமையை யுணர்ந்த பிறகே அவற்றை வெளியில் காட்ட அநுமதித்திருக்கிறார். நான் கேப்ரியேலின் இறகையும், லாரன்ஸ் எரிக்கப்பட்ட கரித்துண்டுகளையும் தனித்தனியே ஒவ்வொரு சிறு பெட்டியில்போட்டு வைத்திருந்தேன். அப்பெட்டிகள் இரண்டும் ஒரே மாதிரி யிருந்ததனால் நான் இன்று காப்ரியேலின் இறகுக்குப்பதிலாய் அர்ச். லாரன்ஸ் வைத்து எரிக்கப்பெற்ற கரித்துண்டுகளைக் கொண்டு வந்து விட்டேன். இது ஓர் தப்பிதமென்று நாம் கருதலாகாது. இரண்டு நாளைக்குப் பிறகு அர்ச். லாரன்ஸ் விரதம் வருவதால் அம்மகானின் பாடுகளை உங்களுக்கு ஞாபகப் படுத்தி அவ்விரதத்தைச் செவ்வையாய் அநுசரிக்கச் செய்யவே கடவுள் அவ்விதம் செய்திருக்கிறார். ஆதலால் மக்களே! பக்தியோடு அருகே வந்து இவற்றைப் பாருங்கள். இப்புனிதமான கரியினால் அடையாளமிடப்பட்டவர்களுக்கு ஒரு வருஷத்திற்கு உணரும் வரையில் நெருப்பினால் யாதொரு விபத்தும் ஏற்படாது என்று சொல்லி பிரசங்கத்தை முடித்தவுடன் அர்ச் லாரன்ஸின் புகழைப்பாடிக்கொண்டே பெட்டியை திறந்து பக்தியுடனும், ஆவலுடனும் பார்த்துக்கொண்டிருந்த பாமர ஜனங்களுக்கு, இவரை ஏமாற்றி இரு வாலிபர்கள் போட்ட கரித்துண்டுகளைக் காட்டினார். பிறகு அவர் அக்கரித்துண்டுகளினால் அங்கு கூடியிருந்த ஜனங்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க

# சாரதா சட்டமும், சர்க்கார் போக்கும்.

( திருச்சி தோழர் S. நீலாவதி. )

சாரதா சட்டமும், சர்க்கார் போக்கும் என்னும் விஷயத்தைப்பற்றி எழுத கோலைப்பிடித்து எழுத எண்ணும் போதே, ஒரு பக்கம் சிரிப்பும், மறு பக்கம் அடக்க முடியாத அளவு கடந்த வருத்தமும் பொங்கி வருகின்றது. மனித சமூக வளர்ச்சிக்கு இன்றியமையாத பகுத்தறிவுக்கேற்ற மிகச் சர்வ சாதாரணமான ஒரு சட்டம் கனம் பொருந்திய, கருணை நிரம்பிய சர்க்காரிடமும், வன்னெஞ்சமும் சுயநலமும் கொண்ட வைதீகரிடமும் என்ன பாடு படுகின்றதென்பதை ஊன்றி நோக்கும் ஒவ்வொரு சீர்திருத்தவாதியின் உள்ளமும், கொதிப்படையாமலிருக்க முடியாது.

இந்திய சமூகத்திற்கே, குறிப்பாக பெண் சமூகத்திற்கே ஒரு பெருத்த நன்மையைத் தரத்தக்க பாலிய விவாகத் தடைச் சட்டமானது இன்றும் சந்திக்கு வந்து சர்க்கார் சமாதானம் சொல்லக்கூடிய நிலையிலும், சட்ட சபை அங்கத்தினர்களான அண்ணாத்தைகள் சண்டித்தனம் செய்யக்கூடிய நிலையிலும் இருப்பதானது வெட்கக்கேட்டைத்தவிர வேறில்லை. மானக்கேட்டைத்தவிர மற்றொன்றும் சொல்ல வழியில்லை. இந்தச் சாரதா சட்டம்போல் வேறு எந்தச் சட்டமும் இவ்வளவு இழுபடவில்லையெனத் தெரிகின்றது.

சாரதா சட்டம் தோன்றியதிலிருந்து, சட்டம் நிறைவேறும் வரை பெண்களும், சீர்திருத்தக்காரர்களும், வைதீகர்களும், சர்க்காரும் அவரவர்கள் அபிப்பிராயங்களை எவ்வளவு பலமாக எடுத்துரைக்கக்கூடுமோ அவ்வளவும் எடுத்துரைத்தார்கள். சாரதா சட்டம் இந்திய சமூகத்திற்கு நன்மை பயக்கும் என்ற விஷயத்தில் சர்க்காருக்குச்சந்தேகமிருக்குமென்று எவரும் அபிப்பிராயப் பட்டு விட முடியாது. அரசாங்கத்தார் அவ்வளவு தெரியாதவர்களென்றும் கூறி விட முடியாது. அப்படியிருந்தும் சட்டத்தைப்பற்றிப் பொது ஜன வாக்கு என்ன என்று தெரிந்தே தீரவேண்டுமென்று கூறி அதையும் பார்த்து ஏதோ ஓர் விதமாய் சட்டம் நிறைவேறியதென்பெயர்தாங்கி நிற்கின்றது. உண்மையில் அரசாங்கத்தார் தங்களைப் பொறுத்த மட்டில் பாலிய விவாகத்தை ஆதரிக்க வில்லையென்பது எல்லோரும் அறிந்த விஷயம்.

இந்தியாவில் உள்ள குழந்தைக் கல்யாணங்களை எடுத்துக் கொண்டால் அத்தனையும் விளையாட்டுச் சங்கதி, வேடிக்கைச் செய்தி, பரிதாபத்திற்குரிய முறை என்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்லுவதற்கில்லை. பாழும் பாலிய விவாகம் ஒன்றினால் குறிப்பாக பெண் சமூகமும், பொதுவாக இந்திய சமூகமும் அனுபவிக்கும் இன்னல்களுக் கெல்லையில்லை. சகல கொடுமைகளுக்கும் ஆதிகாரணம் பாலியவிவாகம் ஒன்றேயென்பதை யாரும்மறுக்க முடியாது.

## சட்டம் தற்போதுள்ள நிலை.

வெகு பாடுபட்டு இவ்வளவு எதிர்ப்புகளுக்கிடையில் நிறைவேற்றப் பட்ட சாரதா சட்டம் தற்போதுள்ள நிலை மிக மிக மோசமானதென்பதை எவரும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். சட்டத்தின் விதிகள்வேண்டாவெறுப்பாய் சாதாரண முறையிலேயே அமைக்கப் பட்டு விட்டதானது ஓர் பெருங்குறையென்பதில் சந்தேகமில்லை. "நான் அடிக்கிறாப்போல் அடிக்கிறேன். நீ அழுகிறாப்போல் அழு" என்னும் பழமொழிக்கொப்பவே சாரதா சட்டம் இருந்து வருகின்றது. பாலியவிவாகத்தடைச் சட்டம் இந்தியாவிலும் இருக்கின்றதென்ற பெயரளவில் பெருமையைத் தவிர செயலளவில் எவ்வித நன்மையும் உண்டானதாகத் தெரியவில்லை.

சட்டம் சட்டமாகவே யுள்ளது. குழந்தைக்கல்யாணங்கள் நடந்த வண்ணமாகவே உள்ளன. சட்டத்தைப் பொருட்படுத்தாமல் இந்த பிரிட்டிஷ் எல்லையிலும், திருட்டுத் தனமாய் இதர எல்லைகளிலும் நடந்த குழந்தைக்கல்யாணங்கள் ஆயிரக்கணக்கிலாகும். அதிலும், பெண் வீடோ, மாப்பிள்ளை வீடோ பணக்காரர்களாயிருந்து விட்டால் சங்கதியே வெளிவராது. வந்தாலும், வெள்ளையப்பனை வீசி யெறிந்தால் அனைத்தும் அடங்கி விடும். இம்மாதிரி சத்தற்ற, சாரமற்ற ஒரு சட்டம் இருப்பதும் ஒன்றுதான்; அடியோடு இல்லாமல் ஒழிந்து போவதும் ஒன்றுதான். உயிரற்ற, உணர்ச்சியற்ற ஓர் சவம் போலவும், செத்தபாம்பைஜால வித்தைக்காரன் ஆட்டி வேடிக்கை காட்டும் தன்மைக்குமே இன்று சாரதா சட்டத்தை ஒப்பிடலாம்.

மதமும் சட்டமும், தங்களுக்கு அநுகூலமல்லாத விஷயங்களில் சர்க்கார் காட்டும மனப்பான்மையானது வெறுக்கத்தக்கதென்பதில் சந்தேகமில்லையன்றோ? ஒரு காலத்தில் சொல்லிய ஒரு வார்த்தையை வைத்துக்கொண்டு சர்க்கார் அதிலும், பெண்களின் துன்பங்களைப் போக்கவல்ல முக்கிய முதற்படியாயுள்ள சாரதா சட்டத்திற்கு நொண்டிச் சமாதானம் கூறி வைதீகர்களோடு சேர்ந்து சண்டித்தனம் செய்வது எவ்விதத்திலும் ஏற்கக்கூடியதல்ல. இன்று இந்தியாவில் உள்ள எல்லா விஷயங்களைக் காட்டிலும் கடவுள் விஷயமே பெரிதாய்க் கருதப்படுகின்றது. அப்பேர்க்கொத்த கடவுள் விஷயத்திலும் சர்க்கார் கை வைத்தாய் விட்டது. சாரதா சட்டத்தைப் பொறுத்த மட்டில் சர்க்காருக்கு ஏனோ துணிவில்லையென்பதுதான் விளங்கவில்லை.

ஒவ்வொரு வருடமும் கடவுளின் பெயரால் அநேக ஆஷாட பூதிகள் அலகுகள், செடில்கள் குத்திக்கொண்டு அட்டகாசம் செய்து வந்ததை இவ் வருஷம் எப்படித் தடுத்தார்கள். இது பற்றிப் பொதுஜன வாக்கு என்ற பேச்சு ஏதாவது வந்ததா? கொடிய, காட்டு மிராண்டித்தனமான "சதி" யென்னும் வழக்கத்தை ஒழித்த சர்க்காருக்கு சாரதா சட்டத்தை பூரண பலமுள்ள சட்டமாக்க எவ்வளவு நேரம் செல்லும்? வைதீகர்கள் தமக்கு அநுகூலமாயுள்ளவைகளுக்கு, சாஸ்திரத்தை ஏறிட்டும் பாராமல் காரியங்களை நடத்தி விட்டு மற்றவர்கள் என்றென்றைக்கும் அடிமைத்தனத்திலே ஆழ்ந்து கிடக்க சாஸ்திர பூச்சாண்டி காட்டும் தன்மையை ஒத்திருக்கின்றது சர்க்கார் சாரதா சட்ட விஷயத்தில் காட்டி வரும் மனப்பான்மை.

## சர்க்கார் போக்கு சரியல்ல.

இளம் பெண்களை இன்னலுக்குள்ளாக்கும் கொடுமையான பாலிய விவாகத்தை ஒழிக்க வேண்டியது சர்க்காரின் முதற்கடமையாகும். மற்றவிஷயங்களில் சர்க்கார் மதமென்றும், சாஸ்திரமென்றும், எழுதிக்கொடுத்த உறுதிமொழியென்றும் பார்க்கவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். மோட்டார் காரை வேகமாக ஓட்டுவதும், விளக்கின்றி ஓட்டுவதும் மனித சமூகத்திற்கு அபாயத்தை விளைவிக்கும் என்று கருதி சட்டங்களை நிரணயித்து, அச் சட்டத்தை மீறினால் தண்டனைக்கு உள்ளாக்கும் சர்க்காருக்கு சாரதாசட்டம் மனித சமூக முற்போக்கிற்கு; பெண்ணுலக விடுதலைக்கு, இந்தியாவின் நன்மைக்கு ஊறு விளைவிக்கும் என்ற எண்ணமும், அதற்கான வழியில் துணிந்து இறங்கத் தக்க மனமும் இல்லாமற்போனது ஆச்சரியமாகவே யுள்ளது. இரவில் மோட்டார் ஹாரன் கொடுப்பது மக்களின் தூக்கத்தைக் கெடுப்பதற்குக் காரணமாயிருக்கிறதென அதைத் தடுத்து வரும் இந்நாளில், அதற்கொரு சட்டம் போட்டு அமுலுக்கு வந்துவிட்ட இந் நாளில் எண்ணற்ற நன்மை புரியக்கூடிய இந்திய மக்களின் நலத்திற்கே ஆதி அடிப்படையான சாரதா சட்டம் அமுலுக்கு வர இவ்வளவு இழுப்பும், பதிப்புமாய் இருப்பதென்றால் துக்கப்படாமலிருக்க முடியுமாவென்பதை யோசித்துப் பாருங்கள்.

சுய நலம் படைத்த ஆண் மக்கள் சிலர் தாங்கள் எவ்வளவு அக்கிரமங்கள் செய்தாலும், இறுதியில் பழியெல்லாம், பெண் மக்கள் மீதே, சுமத்தும் சுபாவம் ஒன்றுண்டு. அதேபோல், நமது சர்க்காரும் ஆரம்பித்து விட்டார்கள்.

"இளிச்சவாயன் பெண்டாட்டி எல்லார்க்கும் மச்சினி" என்ற கதைபோல் சர்க்கார் தள்ளியதுமல்லாமல் பெருங்குழியையும் வெட்டி விட்டது எல்லாவற்றைக்காட்டிலும் பெரும்மோசம். சாரதா சட்டம் உருப்படாததற்குக் காரணம் பெண்களும், சீர்திருத்தக்காரர்களும் பாலிய விவாகத்தைக் கண்டித்து சரியாய் வேலை செய்யவில்லையென்று அவ் விரு சாரார் மீதும் குற்றஞ் சுமத்துகிறது. இதைப்பற்றி என்ன சொல்வதென்பதே எனக்கு தெரியவில்லை. சர்க்காருக்கு சாரதா சட்டம் உருப்பட வேண்டும் என்ற எண்ணம் உண்மையாய் இருக்கும் பட்சத்தில் இக் குறைக்கு இடமில்லையென்று துணிந்து கூறலாம். சாரதா சட்டம் சட்டசபையில் இருக்கும் போது எத்தனை பெண்கள், எத்தனைசீர்திருத்தக் கூட்டங்கள் மசோதாவை ஆதரித்து, வைதீகர்களைக் கண்டித்து, அதில் சில பெண்கள் மசோதாவில் உள்ள வயதும் போதாதென்று திருத்தமும் கொணர்ந்தனர் என்பதை சர்க்கார் இதற்குள்ளாக மறந்து விட்டது வருந்தத்தக்க விஷயமே யாகும். அதுதான் போகட்டுமென்றால், அதற்குப் பின் நடந்த எந்தக் கூட்டத்திலாவது, பெண்கள் சாரதா சட்டத்தை ஆதரித்தும், பாலிய விவாகத்தைக் கண்டித்தும் பேசாமல் விட்டதுண்டா? சாரதா சட்டக் கமிட்டி முன் பல பார்ப்பன நண்பர்கள் கூட ஆதரவாய் சாட்சியம் கொடுத்திருக்கின்றார்களன்றோ? எவ்வளவோ ஆராய்ந்து சட்டம் நிறைவேறியும் கூட, தற்போது சிலருக்கு நல்ல பிள்ளையாக இருக்கக் கருதி இவ்வாறு நடந்து கொள்ளுவது அரசாங்கத்தாருக்கு நீதியாகாது. எத்தனையோ பெண்கள் சாரதா சட்டம் மசோதாவாயிருக்கும் காலையில் கட்டாயம் சட்டமாகியே தீர வேண்டுமென்றும், எவர் வருத்தத்தையும், பொருட்படுத்தாமல், பெண்களின் முற்போக்கிற்கு அடிகோல வேண்டுமென்றும் கதறிக் கதறிக் கூறியிருக்கிறார்கள். தர்பங்கா மகாராஜர்போன்றார்களுக்கு சட்டம் தேவையில்லைதான். இறுதியாக சர்க்கார் இந்தியாவில் பெண்கள் படும் துன்பங்களைக் கவனித்து சட்டத்தை உறுதியாக்கி நாகரீக உலகின் நன் மதிப்பிற்குரியவர்களாய் விளங்க வேண்டுமென்ற என் வேண்டுகோளைத் தெரிவித்து இக் கட்டுரையை முடிக்கின்றேன்.

## பார்ப்பன பத்திரிகைககளும் சர். ஷண்முகமும்.

தோழர் ஆர். கே ஷண்முகம் இந்தியா முழுவதுக்கும் தெரிந்த ஒரு முக்கியஸ்தர். அவருடைய நடவடிக்கைகளும், பேச்சுக்களும் மக்கள் கவனிக்கப்படத்தக்கது என்பதில் யாருக்கும் ஆக்ஷேபனை இருக்காது. பலர் எதிர்பார்க்கவும் கூடும். இந் நிலையில் தேசியப் பத்திரிகைகள் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனப் பத்திரிகைகள் அவரது நடவடிக்கைகளை யோக்கியமாய் பிரசுரிக்காமலும், பிரசங்கங்களையும் கேள்விகளையும், பதில்களையும் சிறிது கூட பிரசுரிக்காமலும் இருந்துவருகின்றன சர் ஷண்முகம் அவர்கள் இந்தியசட்டசபையில் ராணுவ சம்மந்தமான பிரச்சினையில் கொடுத்த ஒரு தீர்ப்பு விஷயமாய் பார்ப்பனப்பத்திரிகைகள் பாராட்டாவிட்டாலும், விஷமத்தன மானபரிகாசங்கள் செய்தன.

தோழர்கள் ராஜகோபாலாச்சாரியார், சத்தியமூர்த்தி அய்யர், ஜம்பை வைத்தியனாத பாகவதர், ரமண ரிஷி போன்றவர்கள் விஷயங்களைப்பெருக்கி கண்ணு, மூக்கு வைத்து கலம் கலமாய் அலங்கரிக்கின்றன.

இந்த மாதிரியான காரியங்களால் பார்ப்பனர்களுக்குக் கீர்த்தியும், மேன்மையும் ஏற்பட்டு விட்டதாகவோ, பார்ப்பனரல்லாதாருக்கு அப கீர்த்தியும்; தாழ்மையும் ஏற்பட்டுவிட்டதாகவோ நாம் சொல்ல வரவில்லை. இந்த மாதிரியான நிலையில் பார்ப்பனர் இருக்கின்றவரையில் சித்திரத்தில் மாதிரி பார்த்து எழுதக்கூட ஒரு பார்ப்பனர் கிடைக்காமல் பூண்டற்றுப் போகக்கூடிய காலம் வரும் என்கின்ற தைரியம் நமக்கு உண்டு. அந்த தைரியம் இல்லாவிட்டால் இத் தொண்டை நாம் மேற்கொண்டிருக்க மாட்டோம்.

ஆனால் எதற்காக இதை எழுதுகிறோம் என்றால் பார்ப்பனப பத்திரிகைகள், தேசியப் பத்திரிகைகள் என்றும், பல பார்ப்பனர்கள் பார்ப்பனத் தன்மை இல்லாமல் நடு நிலைமை வாய்ந்தவர்கள் என்றும் கருதிக்கொண்டு பார்ப்பன சிஷ்யர்களாகவும், பார்ப்பன கூலிகளாகவும், பார்ப்பனர்களுக்கும், பார்ப்பன பத்திரிகைகளுக்கும் ஆதரவளிப்பவர்களாகவும இருக்கும் முட்டாள் தனத்தையும், சுயமரியாதை அற்றதன்மையையும் வெளிப்படுத்தவே இதை எழுதுகிறோம்.

விகடப்பத்திரிகை என்று வேஷம் போட்டுக்கொண்டு சில பத்திரிகைகள், பார்ப்பனீயத்தைப் பிரசாரம் செய்துகொண்டு பார்ப்பனரல்லாத பிரமுகர்களை இழிவுபடுத்திக்கொண்டு வருகின்றன. அவைகளுக்கும் சுத்த ரத்த ஓட்டமில்லாத- சுயமரியாதை அற்ற- பணமே பிரதானமே தவிர வேறொன்றும் இல்லை என்று கருதுகின்ற சில பார்ப்பனரல்லாதார் ஆதரவளிக்கின்றதையும் பார்த்து வெட்கப்படுகின்றோம் என்பதோடு "10 பணத்துக்கு மிஞ்சிய பதிவிரதை இல்லை" என்று கற்பின் பித்தலாட்டத்துக்கு ஒரு பழமொழி சொல்வதுபோல் பணத்தை விட தங்கள் சுய நல வாழ்க்கையைவிட மானம் பெரிதல்ல என்று எண்ணி வாழ்க்கை நடத்தும் பார்ப்பனரல்லாதாரைக் கண்டு இரங்குகின்றோம்.

பார்ப்பனரைப்பார்த்து பாரதியார் "நாயும் பிழைக்கு மிக்கப் பிழைப்பு" என்று சொன்னது போல் ஒரு மனிதனின் பிழைப்பிற்காக மானத்தை —தனது சமூகத்தை விற்று ஜீவிக்கவேண்டியதில்லை என்று தான் பரிதாபத்துடன் கண்ணீர் விட்டுக் கொண்டு இதை எழுதுகிறோம்

---

## சோவியத் மாளிகை உயரம் 1364 அடி.

### 260-அடி லெனின் சிலை.

ரஷ்யாவின் தலைநகராகிய மாஸ்கோவில் லெனின் ஞாபகார்த்தமாக உலகத்திலுள்ள மிகவுயரமுள்ள கட்டிடங்களிலும், மிக உயரமுள்ளதான ஓர் சோவியத்து மாளிகையை நிர்மாணிக்க 1931ம் வருடம் முதற்கொண்டு ஏற்பாடாகி வருகிறது. ஸ்டாலின் உள்ளிட்ட ஓர் ஜூரி சபையில் விஷேஷ விஷயமாக முழு நடவடிக்கை எடுத்துகொள்ளப்பட்டு வருகிறது. கட்டிடம் 1364 அடி உயரமுள்ளதாக இருக்கும். உச்சியில் 260 அடி உயரமுள்ள லெனின் உருவச் சிலையொன்று அமைக்கப்படும். அவ்வுருவச் சிலை சமீபத்திலுள்ள லெனின் கல்லரையை நோக்கும் பாவனையாக அமைக்கப்படும். அவ்வுருவம் அலுமினியத்தினாலாவது எஃகினாலாவது செய்யப்பட்டதாக இருக்கும்.

கட்டிடம் பல பாகங்களைஉடைத்தாயிருக்கும். மியூசியம், லைப்ரரி, ரெஸ்டுரண்டு, பல்லாயிர மக்கள் அமரக் கூடிய வசதியமைந்த மண்டபங்கள் முதலியவை யமைக்கப்பட்டிருக்கும். அரண்மனையின் தளம் சலவைக் கற்களினாலும், இதர பாகங்கள் காகஸஸ் பிரதேசத்தினின்று தருவிக்கப்படும் பற்பலநிறங்களுள்ள கிரானைட்டாலும் ஆக்கப்பட்டதாக இருக்கும். கட்டிடம் சிலிண்டர் வடிவமுள்ளதான அநேக அடுக்குகள் கொண்டு மிக அழகாக அமைக்கப்படும். 1937ம் வருஷத்தில் இம் மஹோன்னதமான கட்டிடம் பூர்த்தி செய்யப்படும். இது வரை நியூயார்க் நகரத்திலுள்ள எம்பயர் ஸ்டேட் பில்டிங்தான் அதிக உயரமுள்ளதாக இருக்கிறது. இதை விட இப்போது மாஸ்கோவில் நிர்மாணிக்கும் மாளிகை 113 அடி அதிக உயரமுள்ளதாக இருக்கும்.

(வெற்றி முரசு)

---

## மத ஆராய்ச்சி

("லீடர்" பத்திரிகையில்)மாலுக் என்பவர் எழுதுவதாவது.

### ஹிந்துக்கள்.

ஹிந்துக்களிடையில் கிஞ்சிற்றும் 'சகோதரத்துவம்' என்பது இல்லையென்று விளக்க இப்பொழுது நடந்துவரும் ஹரிஜன இயக்கமும், ஹிந்துக்களிடையில் முதன் முதலாக சகோதரத்துவத்தை உண்டாக்கப் பாடுபடும் காந்திஜியை ஹிந்துமதத் தூண்களாகிய சனாதன தர்மிகள் அடித்து உயிருடன் தோலை உரிக்க எண்ணுவதுமே போதிய சாட்சியாகும்.

### கிறிஸ்தவர்கள்.

கிறிஸ்தவ கோவில்களில் கருப்பு கிறிஸ்தவர்களிடையே, பறைக் கிறிஸ்தவன் என்றும், வேளாளக் கிறிஸ்தவனென்றும் வித்தியாசம் பாராட்டி, அவர்களுடைய கடவுள் சாட்சியமாக இருக்க, மண்டைகளை உடைத்துக் கொள்ளுவதும், கருப்புக் கிறிஸ்தவனை வெள்ளைக் கிறிஸ்தவன் நிறங் காரணம் பற்றி உயிருடன் தோலையுறிப்பதும் கிறிஸ்தவ சகோதரத்துவத்தின் அளவைக் காட்டிக்கொண்டிருக்கிறது.

### முஸ்லிம்கள்.

ஏனைய மதத்தினர்களைவிட முஸ்லிம்கள்தான் அகில உலக சகோதரத்துவ சம்பந்தமாக வெகு பெருமை பாராட்டிக் கொள்ளுகின்றார்கள். ஆனால் உண்மையில் இவர்கள் சகோதரத்துவமெல்லாம் இவர்களுடைய மஸ்ஜித்துக்குள்தான். வெளியே பரம விரோதிகளைப்போல ஷியாவும் ஸுன்னியும், வஹாபியும் அஹமதியுமென்ற சகோதரத்துவமே. சமீபத்தில் பாஞ்சால மாகாண கவர்னராகிய கேப்டன் ஹயாத்கான் பஹதூர் சென்ற முஸ்லிம் பக்ரீத் தொழுகையின் பொழுது ஏனைய முஸ்லிம்களுடன் கலந்து தொழுததை எடுத்துக்காட்டி ஏற்றத்தாழ்வற்ற முஸ்லிம் சகோதரத்துவத்தைப்பற்றி வானளவில் புகழ்ந்து கூறப்பட்டது. பிசாசுக்கும் அவன் கடனை, அதற்குச் சேரவேண்டியதைக் கொடுத்துவிடுவோம். உண்மையே; ஏனைய மதத்தினரைவிட ஒரு பங்கு முஸ்லிம்கள் இவ்விஷயத்தில் அதாவது தங்கள் சமுக சகோதரத்துவத்தில் மேம்பட்டவர்களே. என்றாலும் இது எல்லாவற்றுக்கும் போதுமானதாகிவிடாது. 192 தம்பிடிகள் கொண்ட ஒரு ரூபாய் வேண்டிய இடத்தில் ஒரு சில தம்பிடிகள் ஒரு ரூபாய் விலை பெற்றுவிடுமா? உள்ளதை உள்ளபடி வெளியிட உத்தேசித்திருக்கும் நாம் உண்மையை வெளியிட்டால் முஸ்லீம்கள் ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். இந்த மசூதிகளுக்குள்ளும் இவர்களிடையில் சகோதரத்துவம் கிடையாது என்று நிரூபிப்போம். ஷியா மஸ்ஜிதில் ஸுன்னிகள் போனால் மண்டை உடைந்து விடுகின்றது. ஸுன்னிகளிடையிலேயே ஷாபி மசூதியில் ஹனபிக்கு உரிமை கொடுக்கமாட்டார்கள் நல்ல அஹமதிக்கு எந்த இதர முஸ்லிம் மஸ்ஜிதிலும் அவமரியாதைதான். வஹாபி முஸ்லிமுக்கு ஒரு காபிருக்குள்ள சகோதர வாஞ்சைதான்!

சமதர்மத்துக் கடிப்படையாகிய சகோதரத்துவமே மதம் பிடித்தவர்களால் இவ்வாறு கையாளப்பட்டு வருமானால் எந்த மதம் சமதர்மத்தைப் போதிக்கின்றது என்று தெரிந்து கொள்ளுவது?

---

## 17 கோடி கெஜம் துணி இறக்குமதி.

### இந்தியா—ஜப்பான் வர்த்தக ஒப்பந்த அமுல்.

இந்தியா—ஜப்பான் வர்த்தக ஒப்பந்தத்தின்படி ஜப்பான் குறைந்த பக்ஷம் 15 லட்சம் மேல் இந்தியப் பருத்தியை வாங்கவேண்டும். அதற்குமேல் இந்தியப் பருத்தியை ஜப்பான் வாங்கிய போதிலும், செப்டம்பர் மாதம் முடிவுக்குள் ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருக்குமளவு (20 கோடி சதுர கெஜம்) துணியை அதனால் இந்தியாவில் இறக்குமதி செய்ய முடியாது. இதுவரையில் ஜப்பான் சுமார் 17 கோடி கெஜம் துணியைத்தான் இறக்குமதி செய்திருக்கிறது. பாக்கி மூன்று கோடி கெஜம் துணியை இம்மாத முடிவுக்குள் இறக்குமதி செய்ய அதனால் முடியாது.

---

# ஈரோடு அர்பன்பாங்கி தேர்தல்.

ஈரோடு அர்பன் பாங்கியைப் பற்றியும், அதன் நிர்வாகத்தைப் பற்றியும் "குடிஅரசு" பத்திரிகையில் ஒரு குறிப்பு வந்திருந்ததை வாசகர்கள் கவனித்திருக்கலாம்

ஈரோடு அர்பன் பாங்கி வெகு காலம் பார்ப்பனர் ஆதிக்கத்திலிருந்து வந்ததும், அது பார்ப்பனர் பாங்காகவே இருந்து வந்ததும் பார்ப்பனர்களுக்கும், பார்ப்பன சிஷ்யர்களுக்கும், அடிமைகளுக்கும் மாத்திரமல்லாமல் மற்றவர்களுக்கு அதில் இடம் கிடைப்பதே கஷ்டமாய் இருந்ததைப்பற்றி அவ்வப்போது பல குறிப்புகள் குடிஅரசில் வந்து கொண்டிருந்ததும் யாவருக்கும் தெரியும்.

இப்போது சுமார் 4, 5, வருஷ காலமாக சுயமரியாதை இயக்கத்தின் பயனாய் பார்ப்பனரல்லாத மக்கள் விழிப்பெய்தி பலதுறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வருவது போலவே இந்த அர்பன் பாங்கி விஷயத்திலும் கண் விழித்தும் முன்னேற்றமடைந்து பாங்கியின் பயனை பார்ப்பனரல்லாத மக்களும் பங்கு வீதம் இல்லாவிட்டாலும் ஒரு குறிப்பிடத்தகுந்த அளவுக்காவது அடைந்து வருகிறார்கள் என்பதைக் கேட்க பார்ப்பனரல்லாதார் எல்லோருமே மகிழ்ச்சி அடையக்கூடும். நிற்க

சமீபகாலமாய் அதாவது 2, 3வருஷகாலமாய் ஈரோடு அர்பன் பாங்கி டைரக்டரேடானது ஒரு பார்ப்பனரல்லாதாரை பிரசிடெண்டாககொண்டு நிர்வாகம் நடைபெற்று வந்ததைப்பற்றி அதன் எதிரிகள் பலவிதமாகக் குறைங்களைக்கூறி விஷமப்பிரசாரங்கள் செய்து வந்ததோடு சிவில் கிரிமினல் விவகாரங்களும், தொல்லைகளும் நடந்து வந்ததோடு அந்த டைரக்டர் சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் முதலியவைகள் கூட கொண்டு வர முயற்சிகள் நடந்து வந்ததும் யாவருக்கும் தெரிந்ததாகும்.

இதன் பயனாய் கடைசியில் ஏற்பட்டபலன் என்னவென்றால் டைரக்டர்களின் உத்தியோக ஆயுள் காலம் மறுபடியும் ஒரு வருஷம் வளர்ந்து வந்தது என்பதுடன் இம்மாதம் 22-ந்தேதி நடந்த அர்பன் பாங்கி தேர்தலில் பழைய டைரக்டர்களே அபரிமிதமான ஓட்டுகளுடன் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதுதான்.

22-9-34ந்தேதி காலைமுதல் மாலைவரை 400-பேர்கள்வரை ஓட்டர்கள் விஜயம் செய்து தங்கள் ஓட்டுகளைப்பதிவுசெய்தார்கள். 5-இடங்களில் போலிங் நடந்தது 11 பேர் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய 11ஸ்தானங்களுக்கு 24பேர்களுக்கு ஓட்டர்கள் ஓட்டுப்போட்டார்கள் கடைசியாக அடியில் கண்ட தோழர்களுக்கு அதிகமான ஓட்டுகள் விழுந்ததால் அவர்களே தெரிந்தெடுக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டது.

1. M. சிக்கையா 376.
2. E. S. கோவிந்தசாமி நாயுடு 373.
3. S. R. கண்ணம்மாள் 370.
4. நா. மு. ஷண்முக சுந்தர முதலியார் 367.
5. S. ராமசாமி நாயக்கர் 364.
6. V. V. C. V. பெரியசாமி முதலியார் 363.
7. E. Y. உமார் நவாஸ்கான் சாயபு 363.
8. K. M. சீனிவாசம் பிள்ளை 360.
9. K. காதர் சாயபு 359.
10. V. V. C. R. முருகேச முதலியார் 358.
11. V. வெங்கிடசாமி ரவுத்து 356.

இதில் பத்துதோழர்கள் முன்னமேயே டைரக்டராய் இருந்தவர்கள். தோழர் கண்ணம்மாள் மாத்திரம் புதிதாக தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்.

அடுத்த நாள் 23ந்தேதி காலையில் டைரக்டர்கள் கூட்டம் கூடி தோழர் M. சிக்கையா அவர்களையே மறுபடியும் பிரசிடெண்டாகவும் தோழர் V. V. C. பெரியசாமி முதலியார் அவர்களை மறுபடியும் வைஸ் பிரசிடெண்டாகவும் தெரிந்தெடுத்தார்கள். தோழர் உப்புமண்டி காதர்சாயபு அவர்கள் தனது மகன் தோழர் அப்துல் ரஜாக்சாயபுக்காக ராஜினாமா செய்ததால் அந்த ஸ்தானத்துக்கு தோழர் அப்துல் ரஜாக் சாயபு அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்.

வரப்போகும் 3-வருஷ காலமும் டைரக்டர்களும், பிரசிடெண்டும் ஒத்துழைத்து பாங்கியினை முற்போக்குக்கு உழைப்பதோடு மகாஜனங்களுக்கு நன்மை உண்டாகும் முறையில் தொண்டாற்றுவார்கள் என்று நம்புகிறோம். கடைசியாக அர்பன் பாங்கிடைரக்டரேட்டுக்கு பெண் டைரக்டரை தெரிந்தெடுத்த ஓட்டர்களை பாராட்டுவதுடன் அடுத்த எலக்ஷனிலாவது ஒரு தாழ்த்தப்பட்ட தோழரை தெரிந்தெடுக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

# கோவையில் சுயமரியாதைத் திருமணம்.

22-9-34த் தேதி கோவை சுயமரியாதைச் சங்கத்திறைவரில் தோழர் என்கிருஷ்ணசாமி அவர்களுக்கும், வி. லக்ஷ்மி அவர்களுக்கும் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் தலைமையில் கோவை முனிசிபல் ஹைஸ்கூல் கட்டிடத்தில் திருமணமென்னும் வாழ்க்கைதுணைஒப்பந்தம் நடைபெற்றது. மணமக்களை தோழர் கிஷன் அவர்கள் இல்லத்திலிருந்து மோட்டாரில் பாண்டுவாத்தியங்களுடன் ஊர்வலமாக மணம் நடைபெறும் இடமாகிய முனிசிபல் பள்ளிக்கூட மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டது.

திருமணத்திற்கு உள்ளூரிலிருந்தும், வெளியூரிலிருந்தும் சுமார் 3000 ஜனங்களுக்கு மேல் வந்திருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் வருமாறு;—

தோழர்கள் ஈ. வெ. இராமசாமி, டாக்டர் பி. வரதராஜுலு, திவான்பகதூர் சி. எஸ் இரத்தினசபாபதிமுதலியார் முனிசிபல் சேர்மன், எல். ஆர். வெங்கடராமன் முனிசிபல் கமிஷனர், ஆர். கே. வெங்கிடாசலம் வைஸ் சேர்மன், எம். பரமேஸ்வரன் முனிசிபல் கௌன்சிலர். ஜி. துரைசாமிநாயுடு யுனைடெட் மோட்டார் சர்வீஸ் சொந்தக்காரர், ஆர். நஞ்சையா, முனிசிபல் சவுன்சிலர், வி. கோவிந்தன் ஹெட்மாஸ்டர் முனிசிபல் ஹைஸ்கூல், கே. மாயண்ணகவுண்டர், அர்பன் பாங்கு ஜி. வி. கிருஷ்ணமூர்த்தி அர்பன் பாங்கு மானேஜர், வி. என். ரங்கநாதம், சி. பி. விஸ்வநாதன், கே. பி. சேஷாத்திரி, சி. என். நாராயணன் தமிழ் நாடு ஏஜண்ட், செயிலாணி, அப்துல்லா, கபூர், ஷரீப் டி. எம். ஜங்கமையா, எ. பொன்னுசாமி, கே. சுப்பரமணியம், சி. கே. சுப்பிரமண்யம், ஆர். கே. வேலாசாமி வி. சுப்பிரமண்யம், என். வீரபத்திரன், எஸ். செல்வராஜ், சி. சீனிவாசன், வீரபத்திரன், வி. வெங்கடேசலு, சி. எம். சேகரன், ஆர். சுந்தரம், எல். ராஜகோபால் நியூஸ் ஏஜண்ட், என். கே. கஸ்தூரி, சி. எஸ். குப்புசாமி, வெள்ளியங்கிரி, நாராயணசாமி, பி. ரங்கசாமி, ஆர். ரங்கப்பன், ஜி. கோனையர், சொக்கையா, சின்னக்குட்டி, எஸ். மாரியப்பா, என். புருஷோத்தமன், சீதாலக்ஷ்மி, சுப்பராயலு, எஸ். பீமையா செட்டியார், சி. டி. ஷண்முக சுந்தரம், வக்கீல், தனராஜுலு, முனிசிபல் இஞ்சினியர் சுடலை முத்து, சிட்டி பாங்கு செக்ரெட்ரி, பத்மநாப நாயுடு, பெரியண்ண செட்டியார், சி. டி. சுப்பையா, ஆர். நஞ்லசயா, எம். சின்னசாமி, என். லக்ஷ்மணன், "கூட்டுறவு" மானேஜர் எஸ். திருநாவுக்கரசு, ஸ்டாண்டர்ட் பாங்கு செக்ரெட்ரி வி. ஆர். பொன்னம்பலம், வக்கீல் எஸ். சதாசிவம், வக்கீல் சொக்கலிங்கம்பிள்ளை, முனிசிபல் ஹைஸ்கூல் தமிழ்பண்டிகர், லிங்கேகவுண்டர், கற்பக நிதி பாங்கு செக்ரெட்ரி எம், சங்கரலிங்கம், ஆர். லோகநாதன், ஆர், கிஷன், டி. ஆர். மஞ்சுளாபாய், ஆறுமுகம், அனுப்பர்பாளையம் சி. பி. முத்துசாமி, கே. பொன்னுசாமி முதலியார், எஸ். ஆர். சுப்பிரமண்யம், திருபூர். சி. கே. சந்தானம், மணியழகு மாணிக்க சுந்தரம், எஸ். எ. மாணிக்கம், கே. கிருஷ்ணன், சூலூர் பேச்சிமுத்து, இருகூர் மற்றும், இருகூர் குனியமுத்தூர், குரிச்சி, சூலூர், அனுப்பர்பாளையம், பீளமேடு, காளப்பட்டி முதலிய ஊர்களிலிருந்தும், ஏராளமான தோழர்கள் விஜயம் செய்திருந்தார்கள். பெண்களும் 100 பேர் வரை வந்திருந்தார்கள். மண்டபத்தில் இடம் போராமல்பலர் திரும்பிவிட்டார்கள்.

பின் தலைவர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் தலைமை வகித்து மண மக்களை சபையோருக்கு அறிமுகப்படுத்தி "சுயமரியாதைத் திருமணம் என்பது பற்றி பேசினர். (அது அடுத்த வாரம் வெளிவரும்.)

பின் திருமணத்திற்கு வரமுடியாமைக்கு வருந்தியும், மணமக்களை வாழ்த்தியும் கீழ்க்கண்ட தோழர்களிடமிருந்து வந்த கடிதங்களை வாசிக்கப்பட்டது அவர்கள் பெயர் வருமாறு:—

தோழர்கள் சமதர்மம் ஆசிரியர் வி. பார்த்தசாரதி, ப. ஜீவானந்தம், இ. வி. கிருஷ்ணசாமி, பகுத்தறிவு ஆபீஸ் மானேஜர் எ. நல்லசாமி, தி. அ. வெங்கடசாமிப் பாவலர், எ. சங்கரய்யா—கனகாபாய், டி. பி. ராமசாமி திருப்பூர், புத்தூர் குப்புசாமி, சி. கோவிந்தராஜன் வாணியம்பாடி, அனுப்பர் பாளையம் சமதர்மசங்க பிரசிடெண்ட், எ. பி. ராயப்பன், தையூர் சீ. குளந்தை வேலு, பி. சுந்தரம், விருதுநகர், எ. ஆர். சிவானந்தம், வள்ளியம்மாள் டி. என். ராமச்சந்திரன், நாகை கே. வைத்தியலிங்கம் உதக மண்டலம் முதலியவர்கள்.

பின் மணமக்களிருவரும் தங்கள் ஒப்பந்தங்களைப்படித்தார்கள் தலைவர் முடிவுரைக்குப் பிறகு. தோழர் ராமகிருஷ்ணன் அவர்கள் வந்தனோபசாரங்கூறினர். வந்திருந்தவர்களுக்கெல்லாம் இலங்கை சொற்பொழிவு, பெண்ணுரிமைக்கீதம், தேசிய சங்கநாதம் ஆகிய புத்தகங்கள் இனமாகக்கொடுக்கப்பட்ட பின் திருமணம் இனிது முடிந்தது. இரவு தோழர் வி. ரங்கராஜ் அவர்கள் வீட்டில் ஓர் சமபந்தி விருந்து நடந்தது.

## சேலத்தில் தோழர்கள்

# ஷண்முகம்-வரதராஜுலு.

சர். ஷண்முகம் அவர்களுக்கும், டாக்டர். பி. வரதராஜுலு அவர்களுக்கும், 25-9-34ந் தேதி சேலம் காலேஜில் மாலையில் தேநீர் விருந்து நடந்தபின் மாலை 6-மணிக்கு, சேலம் கல்லூரியில் நகரவாசிகள் கூட்டம் நடைபெற்றது.

### ஷண்முகம் பேச்சு தலைவருக்கு போட்டியேன்?

சிற்றுண்டி உபசாரத்திற்குப்பின் ஓர் கூட்டம் நடந்தது. அதற்கு டாக்டர் வரதராஜுலு அவர்கள் தலைமைவகித்தார். சர். ஷண்முகம் அவர்கள் தேர்தல் இயக்கத்தைப் பற்றிப் பேசியதாவது:-சாதாரணமாக இந்தியா சட்டசபைத் தலைவர் என்ற ஹோதாவில் நான் தேர்தல் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டிய அவசியமே ஏற்பட்டிராது. உலகத்திலுள்ள பெரும்பாலான தேசங்களிலுல் பார்லிமெண்டு சபைகளின் தலைவருக்குப்போட்டியாக நிற்கக் கூடாதென்பது ஓர் ஊர்ஜிதமான சம்பிரதாயமாகும். தகுந்த காரணங்களை ஆதாரமாகக் கொண்டே அத்தகைய சம்பிரதாயத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அத்தகைய தலைவர்களின் தீர்ப்புகள் இறுதியானவை அவர்களுடைய தீர்ப்பிற்கு விரோதமாக அப்பீல் கிடையாது. பற்பல அரசியல் கட்சிகளடங்கிய சட்டசபையானது சேர்மையுடனும், பாரபட்சமின்றியும் நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். எனவே பாரபட்சமற்ற சுயேச்சையான நிலைமையில் சட்டசபைத் தலைவரை வைக்கவேண்டுமாயின், கட்சித் தகராறுகளோ, சூழ்ச்சிகளோ எவ்வளவு இருந்தாலும், தமது பதவிக்கு ஏத்தகைய ஹானியும் ஏற்படாதென அவர் உணர்ந்துகொள்ளும்படி செய்யவேணடும. பிரிட்டிஷ் பார்லிமெண்டு தலைவருக்கும், மற்றும் பல பார்லிமெண்டின் தலைவர்களுக்கும் போட்டி அபேட்சகர்களை நிறுத்தாமலிருப்பதற்கு அதுதான் காரணம். சகல கட்சிகளும் ஒப்புக்கொண்டே அவ்விதம் அனுமதிக்கிறர்கள்.

### காங்கிரஸ் போக்கு

காங்கிரஸ் தான் இத்தேசத்தின் மகத்தான அரசியல் ஸ்தாபனமென காங்கிரஸ் வாதிகள் கூறுகிறார்கள். ஆனுல் காங்கிரஸ்தான் ஷை நியாயமான, உலகம் முழுதும் இருந்து வரும் சம்பிரதாயத்தை எதிர்த்து வருகிறது. குறிப்பான அரசியல் கட்சிகளுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ள வேண்டுமென்பது எனது விருப்பமல்ல. ஆனுல் காங்கிரசின் மேற்கூறிய நிலைமையே என்னை தேர்தல் இயக்கத்தில் கலந்துகொள்ளும்படி நிர்ப்பந்தப் படுத்தியிருக்கிறது. பழைய தொகுதியில் நான் நிறகத் துணியவில்லையென சிலர் கூறுகின்றனர் அத்தகையோருக்கு பதிலளிப்பது மிகவும் சுலபம், சென்ற 11 வருஷ காலமாக நான் 3 ஜில்லாக்களுக்குப் பிரதிநிதியாக தேர்தலில் நின்றேன். ஆனுல் இப்போது 26 ஜில்லாக்களிலுள்ள வாக்காளர்களின் ஆதரவை நாடி வருகிறேன் இதிலிருந்து பயந்து நான் அவ்விதம் செய்வதாக யாராவது கூற முடியுமா? சென்னை மாகாணத்திலுள்ள வர்த்தக சமூகத்தின் நம்பிக்கையை நான் பெற்றிருக்கிறேனு என்பதை பரிசோதனை செய்ய வேண்டுமென்பதே எனது விருப்பமாகும்.

### துவேஷப் பிரசாரம்.

ஒட்டவா மகாநாட்டில் நான் கலந்து கொண்டதன் சம்பந்தமாக பொய்யும், துவேஷமுமான பிரசாரம் பிரமாதமாக நடந்து வருகிறது. இந்தியரின் க்ஷேமத்திற்கு நான் துரோகம் செய்துவிட்டதாக என் மீது பழி கூறுகிறார்கள். இந்தியாவின் வர்த்தகத்தையும, வியாபாரத்தையும் ஒட்டவா ஒப்பந்தமானது நாசம் செய்து வருவதாகக் கூறுகின்றனர் ஆனுல் அவ்விதம் துவேஷப் பிரசாரம செய்பவர்கள் தங்கள் பிரசாரத்திற்கு ஆதார காரணங்களையோ, உண்மைகளையோ அல்லது புள்ளி விவரங்களையோ கூறவில்லை. அவர்கள் ஒன்று அறியாதவர்களாக இருக்க வேண்டும்; அல்லது தேர்தலுககாக வேண்டுமென்று துவேஷப் பிரசாரத்தில் இறங்கி இருக்க வேண்டும்.

### ஒட்டாவா ஒப்பந்த விளக்கம்.

தமிழ் ஜில்லாக்களில நான் பிரயாணம் செய்தபோது, ஷை பிரசாரங்கள் பொய்யென்பதை பல விடங்களிலுள்ள வர்த்தகர்களுக்கு நான் புள்ளி விவரங்களுடன் எடுத்துக் கூறினேன். ஒட்டாவா ஒப்பந்தமானது இந்தியாவிற்கு லாபகரமென்பதையும் அவர்களுக்கு எடுத்துக்கூறி சமாதானம் செய்தேன். எனவே ஒட்டாவா ஒப்பந்தம் என்ன என்பது பற்றியும், அது எவ்விதம் அனுஷ்டானத்திலிருந்து வருகிறதென்பது பற்றியும் நான் உங்களுக்கு, சுருக்கமாக எடுத்துக் கூறுகிறேன்.

ஒட்டாவா மகாநாடு 1932ம் வருஷம் ஜூலை மாதம் நடந்தது. இந்திய சர்க்காரின் பிரதிநிதிகளில் ஒருவராக சர்க்கார் என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். பொது ஊழியமொன்றைச் செய்யும்படி சர்க்கார் ஒருவரை கேட்டுக் கொள்ளுவதால் அவர் உடனே ஓர் தேசத் துரோகியாகி விடுகிறரா? ஷை மகாநாட்டிற்குச் செல்லுவதற்காகக் கிடைத்த அழைப்பை நான் ஒப்புக்கொண்டேன். ஏனெனில், அது மிகவும் முக்கியமான ஓர் மகாநாடென எனக்குத்தோன்றியது. அது ஓர் வர்த்தக மகாநாடேயாகும் இங்கிலாந்துக்கும், இந்தியாவிற்குமுள்ள வர்த்தகத்தைப்பற்றி அங்கு நாங்கள் விவாதித்தோம். இருதேசங்களின் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்வதற்கான முறைகளை வகுக்க நாங்கள் விரும்பினேம் நாங்கள் அது சம்பந்தமான விஷயங்களை தீரபரிசீலனை செய்தோம் 3 மாதம் வரை பிரதிநிதிகளுக்குள் விவாதம் நடந்தது. கடைசியில் நாங்கள் இங்கிலாந்துடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டோம் ஷை ஒப்பந்த நிபந்தனைகளின் கீழ், யாதொரு வரியுமின்றி நமது மூலச்சரக்குகளை அனுமதிக்க இங்கிலாந்து ஒப்புக்கொண்டது. இன்னும் அதே அன்னிய சாமான்களுக்கு 10லிருந்து 15 பெர்சண்ட் வரை வரி விதிப்பதாகவும் பிரிட்டிஷார் ஒப்புக்கொண்டனர். இந்திய சாமான்களுக்கு பிரிட்டிஷ் மார்க்கெட்டுகளில் சலுகை காட்டுவதே அதன் நோக்கமாகும். அதற்கு பதிலாக இங்கிலாந்திற்கும் நாம் சில சௌகரியங்களை அளித்தோம். அதாவது அவர்களுடைய சாமான்களில் சிலவற்றை குறைந்த வரிக்கு அனுமதிக்க ஒப்புக்கொண்டோம். ஷை ஒப்பந்தத்தின் பயனுக இந்தியாவின் கைத்தொழில் அபிவிருத்திக்கு எத்தகைய பாதகமும் ஏற்படக் கூடாதென்ற விஷயத்தில் நாங்கள் மிகவும் ஜாக்கிரதையுடனிருந்திருக்கிறேம். 6 மாத முன்னறிக்கை கொடுத்து எந்த சாராரும் ஒப்பந்தத்தை ரதது செய்துவிடலாமென்றும் நாங்கள் விதியேற்படுத்தியிருக்கிறேம். எல்லோரும் தடபுடல் செய்யும் ஒட்டாவா ஒப்பந்தம் இதுதான். அது ஓர் வர்த்தக ஒப்பந்தம் என்பதைத் தவிர வேறென்றுமில்லை.

### பலாபலன்கள்.

18 மாத காலத்திற்கு மேல் இந்த ஒப்பந்தம் அமுலிலிருந்து வருகிறது. இங்கிலாந்தில் இந்தியாவுக்கும் இங்கிலாந்திற்கும் நடந்துள்ள வியாபார கணக்கை கவனிக்க வேண்டுகிறேன். ஒப்பந்தமேற்படுவதற்கு முன்பாக வருஷத்தில் இந்தியா, லண்டனுக்கு 29 ஆயிரம் டன் அரிசி ஏற்றுமதி செய்து வந்தது. ஆனுல் ஒப்பந்தத்திற்குப் பின்பு வருஷத்தில் அரிசி ஏற்றுமதி 89 ஆயிரம் டன் ஆகும்.

ஏற்கனவே 2 80000 காலன் கடலை எண்ணெய் ஏற்றுமதி செய்திருக்க இப்பொழுது இது 5 லக்ஷத்து 7 ஆயிரத்திற்கு உயர்ந்துள்ளது ஆளிவிதை ஏற்றுமதி 14,000 டன்னிலிருந்து 75 ஆயிரத்துக்கு அதிகரித்திருககிறது. இவ்வொப்பந்தமில்லாவிட்டால் நாம் தீர்வை மூலம் பிரிட்டிஷ் சர்க்காருககு 8 கோடி ரூபாய் வருஷா வருஷம் செலுத்த வேண்டியிருக்கும். இததொகை ஒப்பந்தத்தின் பயனுக இந்தியாவுக்கு மிச்சமாகும்.

ஒட்டாவா ஒப்பந்தம் இரு தேசத்திற்கும் பரஸ்பர நன்மை ஏற்படுத்தியிருக்கிறதென்றே இந்தியா சட்டசபைக் கமிட்டி தீர்மானித்திருககிறது.

இவ்வொப்பபந்ததை நன்றுகப் பரிசீலனை செய்தவர்களின் அபிப்பிராயத்தை கவனிக்க வேண்டும் புள்ளி விவரங்களை நீங்களே கவனிக்க வேண்டும் சில சுயநலமிகளும் கட்சிகளும் செய்யும்பொய்யானதும், விஷமமானதுமான பிரசாரத்தைக் கேட்டு எவ்வித தீர்மானமும் செய்து விடக்கூடாது.

நான் சர்க்காரை ஆதரிப்பவனென்றும், தேசியத்தை எதிர்ப்பவனென்றும் காங்கிரஸ் பிரசாரசர்கள் கூறுகிறார்கள். இருக்கட்டும். டாக்டர் பி. வரதராஜுலு போன்ற மாசற்ற தேசாபிமானிகளை அவர்கள் எதிர்ப்பானேன்? காங்கிரஸ்காரர்கள் ஜெயிலைப்பற்றி எண்ணியதற்கு முன்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்கக.

## மலாய் நாட்டில்

# தோழர் அ. இராகவன்.

''பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக'' லிமிடெட் காரியதரிசி தோழர் அ இராகவன் அவர்கள் ''பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக லிமிடெட்டுக்கும் ''பகுத்தறிவுக்கும்'' பங்குகளும் சந்தாக்களும், சேர்ப்பதற்கும், கழக புத்தகங்களையும், ''குடி அரசு''ப் பதிப்பகப் புத்தகங்களையும் செலவு செய்யவும் மலாய் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார். அத்துடன் பகுத்தறிவு இயககப்பிரசாரமும் செய்து வருகிறார்.

மலாய் நாட்டிலுள்ள சுயமரியாதைத் தோழர்கள் அன்னவருக்கு வேண்டிய உதவியும், வசதியும் செய்து கொடுப்பதோடு அவர் வந்துள்ள காரியங்களை வெற்றிகரமாய் முடித்துக்கொடுக்கவேணுமாய் வேண்டிக்கொள்ளுகிறேம்.

ரோஜா முத்தையா

## நமது தலைவர்

# ஈ. வெ. ராவும், சென்னை பார்ப்பனரல்லாதார் மகாநாடும்.

(தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல்.)

"புரட்சி" நின்றுபோவதற்கு சற்று முன், நமது தலைவர் ஈ. வெ. ரா. அவர்கள், ஜஸ்டிஸ் (Justec) கட்சியோடு சரச சல்லாபம் காட்டுவதாக பாவித்து, அது, சமதர்மிகளுக்கும் பொருந்ாது என்று, ஒருசிறு கட்டுரை எழுதி இருந்தேன். அதைப் பிரசுரிப்பதற்கு முன் "புரட்சி" நின்றுவிட்டது. அதனை பிறகுவந்த "பகுத்தறிவில்" அதைஅச்சிட்டார்களோ, அது எனக்குத் தெரியவில்லை. அந்தக் கட்டுரையில், நமது நாட்டிலுள்ள பலவித அரசியல் கட்சிகள் சம்பந்தமாக, நாமாகிய சமதர்மிகள் நடந்துகொள்ளும் முறையைப் பற்றியும் எழுதியதாகவும் ஞாபகமிருக்கிறது. இது நிற்க, சுயமரியாதை சமதர்மியர், தற்காலம் நடந்துவரும் தேர்தல்களில் நடந்துகொள்ள வேண்டிய முறையையும், ஜோலார்ப்பேட்டை "சமதர்மம்" என்ற பத்திரிகையிலும் குறிப்பாக எடுத்துக் காட்டியுள்ளேன். இதனை அச்சஞ்சிகையில் பிரசுரித்தார்களோ அதுவும் தெரியவில்லை.

எந்தக் கட்சியினர்களாயினும் அவர்களுக்கு ஓர் திட்டம் இருக்கவேண்டும். அந்தத் திட்டத்திற்குள்தான் அவரவர்கள் நடந்து தீரவேண்டும். வேண்டுமானால் ஒரு திட்டத்திலிருந்து மற்றொரு திட்டத்திற்கு மாறலாம். அதுதான் பகுத்தறிவின் முதல் லட்சணம். தங்கள் பகுத்தறிவுக்கு குறிப்பிட்ட திட்டந்தான் பொருத்தமுளதென்று தோன்றுங்காலை அந்தத் திட்டத்திற்குள்ளிருந்தே நடந்து கொள்வதே ஞாயம்.

சமதர்மிகளாகிய நமக்கு ஈரோட்டில் ஒரு திட்டம் 1932ல் வகுக்கபட்டுளது. அதனை அமுலுக்குக் கொண்டுவர வேண்டியது நமது கடமை. சுயமரியாதை இயக்கத்தில் தனியாக அரசியல் கட்சி ஒன்றை ஏற்படுத்தியது அந்த ஈரோட்டுத் திட்டமூலமாகவே. ஈரோட்டில்நமதுதென்னுடுசுயமரியாதையோரில்பிரபலஅங்கத்தினர்கள், சுமார் 300 பேர்களுக்குமேலாக ஏகமனதாக ஒத்துக்கொண்ட சமதர்ம திட்டமதுவே. அந்தத் திட்டத்திற்கு முன்னால் எந்த ஏனையகட்சிகளும நில்லா என்பதுஉலகம் தெரிந்த விஷயம். அதாவது உலகிலுள்ள எந்தக்கட்சியாயினும் சுத்த அரசியல் கட்சியாயினும், குடி அரசு கட்சியாயினும்; முதலாளி கட்சியாயினும், தொழிலாழி கட்சியாயினும்; எந்தக் கட்சிக்கும், உலகை அல்லது நாட்டைச் சீர்திருத்த ஒரே மார்க்கந்தான் உளது. அதுதான சமதர்ம மார்க்கம் (Socialism)

இதனைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால்; தற்கால உலக நிலையைச் சற்று நோக்கிப்பாருங்கள். சமதர்ம நாடு ஒன்றைத் தவிர, மற்ற நாடுகள் எல்லாவற்றிலும், வேலை இல்லாமை கோடான கோடி மக்களை வதைத்து வருவதே போதுமானது. எந்த அரசும் அதன தன் மக்களுக்கு உணவு, ஆடை குடி இருப்பு வசதி சரிசமத்துவமாக உதவவேண்டுமாயின், சமதர்ம மூலமாகத்தான் முடியும். இதற்குத்திருஷ்டாந்தம் வேண்டுமாயின் உலக முழுமையும்சமதர்மக்கொள்கைகளைக் கையாள முயற்சி செய்வதே அறிகுறியாகும். ஆனல் அந்தந்த அரசுகள் சமதர்மக் கொள்கைகளைக் கையாண்டு பார்க்க எத்தனித்தும், ஏன் தோல்வியுறுகின்றார்களென்றால் அவர்கள் பெரும்பான்மையும் கொண்டுள்ள திட்டத்திற்கும், சமதர்மத் திட்டத்திற்கும் பொருத்தமில்லாமையே முதற்காரணமாகும்.

நமது நாட்டில் உள்ள கட்சிகள் யாவும் (ஒன்றைத்தவிர) முதலாளி திட்டத்தில் மூழ்கி கிடக்கின்றவைகளே. முதலாளித் திட்டத்தை வைத்துக்கொண்டு, எந்த நல்லெண்ணத்தோடு சமதர்மக்கொள்கைகளை அனுஷ்டிக்க முயன்றாலும் அது கைகூடி வரமுடியாது. காங்கிரஸ் சமதர்மக் கட்சியாயினும், ஜஸ்டிஸ் சமதர்மக் கட்சியாயினும், அல்லது மாளவியா, கெல்கார். மூஞ்சே, முஸ்லிம் சமதர்மக்கட்சியாயினும், அல்லது இந்து மத சனாதன சமதர்மக்கட்சியாயினும், எந்தக்கட்சியாயினும், ராமராஜ்யமுதல் நிகழ்ந்துவருமு முதலாளித் திட்டத்தை ஆதரித்துக் கொண்டு, "சமதர்மம்" பேசுவார்களாயின்; அது பல்லாண்டு கோடி பாமரமக்களை ஏமாற்றுவதாகுமென அறிக. அவ்விதம் பேசும் கட்சியினரை நம்புவதும், நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதெனவும் அறிக. எதுவும் செய்ய முடியாத கட்சியினரை, அதைச் செய்யுங்கள், இதைச் செய்யுங்கள் என்று அவர்களுக்கு உபதேசிப்பதும், வீணான வீண் வேலையென உணர்க.

நமது தலைவர் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுக்கு (பார்ப்பனரல்லாதார் என்றசொல்லை கொட்டை எழுத்தில் போடாததற்கு மன்னிக்க வேண்டும்.) விடுத்துள்ள பத்துக் கட்டளை வேலைத்திட்டத்தைப் பரிசோதிப்போம். இந்த வேலைத்திட்டங்களை, ஜஸ்டிஸ்கட்சியிலுள்ள தியாகிகள் (என்ன தியாகம் பிராமணரல்லாதாருக்குச் செய்தனரோ (?) அது நமக்கு விளங்காததைக்குறித்து விசனிக்கின்றோம்!) ஆதரவு அளிப்பதாகவே எண்ணிக் கொள்வோம். கனம். பொப்பிலிராஜாவும், சர். ஆர். கே. ஷண்முகமும், நமது தலைவர் விடுத்துள்ள வேலைத்திட்டத்தை மனமாற இராஜாங்க சபையில் ஆதரிப்பதாகவும் வைத்துக் கொள்ளுவோம். இந்த வேலைத்திட்டங்களை, ஒன்றையாகிலும் சட்ட சபையில் கொண்டு வர முடியுமா என்று பார்ப்போம்.

1. அரசியல் உத்தியோக சம்பளங்களைக் குறைக்க வேண்டுமாம்! இதைப் போன்ற (Platitudes) சாமான்ய திட்டங்களை, நமது சத்திய மூர்த்தியும் அடிக்கடி மேடையினின்று வழங்குவது முண்டு! பெருத்த உத்தியோகஸ்தர்களின் சம்பளங்கள், முதலாளி அரசியல் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளது. அதனை எள்ளளவேனும் குறைக்க நமது இந்திய சட்டசபைகளுக்கு அதிகாரம் கிடையா. அவை, ஆங்கில பார்லிமெண்டரி சட்டங்களால் சிருஷ்டிக்கப்பட்டவை நமது இந்திய கவர்ன்மெண்டாராலேயே குறைக்க முடியாதென்றால்! சத்தியமூர்த்திகளும், ஷண்முகங்களும், பொப்பிலிகளும் என்ன செய்ய முடியும்? அரசியல்திட்ட மொன்றாக இருக்கஅதனை மாற்றாமல், அந்ததிட்டத்திற்கு உட்பட்டிருக்கும் விபரங்களை எப்படி மாற்ற முடியும். ஆதலின் இவ்வித சீர்திருத்தங்களைச்செய்யவேண்டு மென்பதும் வியர்த்தம். செய்யலாமென்று எண்ணுவதும் மோசடி. செய்கின்றேனென்று சொல்வதும் Cant அதாவது பாசாங்கே!

2. பழைய சமதர்மக் கொள்கைகளில் ஒன்று, கவர்ன்மெண்டே தொழிற்சாலை நடத்த வேண்டுமென்பது இந்த திட்டத்தை கையாளவேண்டுமென்று எந்த முதலாளிக்கட்சிக்காரன் முன் வருவான்? இதனைச்சொன்னமாத்திரத்தில் ஒரு வோட்கிடைக்குமா? கடந்த 20-வருஷமாக எந்த ஜஸ்டிஸ்பெரியோராவது, இதனைசொல்மாத்திர அளவுக்காயிலும் திட்டம் வகுத்தனரா? நமது ஜஸ்டிஸ் கட்சியினரை இந்த திட்டத்தை ஆதரிக்கக் கேட்டுக்கொள்வது செவிடன காதில் சங்கூதியதேயாகும்!!

3. உண்பண்டம், தின்பண்டங்களைக்கூட்டுறவு மூலமாகவே வினியோகிக்க அரசாங்கத்தாராலேயே முடியுமா என்று கேட்கின்றோம். அவர்கள் திட்டம், தனி உடைமைத் திட்டம். தனி உடைமை இருந்தால் தான் முதலாளி அரசு நடைபெறும். எந்தஅரசாவதுதன் தலையில், தானே மண்ணைப் போட்டுக் கொள்ளுமா? Co-operative (Common wealth) ஐ நிலச்சுவான்களுமா? தொழிற்சாலை சொந்தக்காரர்களுமா? மாபெரும் வர்த்தகர்களுமா? அவர்களால் சிருஷ்டிக்கப்பட்ட அஸ்ஸம்பிலி மெம்பர்களுமா? அங்கீகரிக்கப் போகின்றனர்? தங்கள் கனவிலும்சிந்திக்க மாட்டார்களே!

4. விவசாயிகளின் கடன் நிவர்த்தி, யார் செய்யத்துணிவார்கள்? இந்த கடன் சுமார் 1000 கோடி என்று ஒரு கணக்குண்டு. சிலர் 500 கோடி என்பார்கள். இந்த மாபெரும் கடனால் பிழைக்கும் முதலாளிகளால், நமது ஏ. ராமசாமிகளும், சத்தியமூர்த்திகளும் சண்முகங்களும் தேர்ந்தெடுக்கப்படப் போகின்றனர். அவர்களுக்குள்ள முதலாளி செல்வாக்கை, வெறுஞ் சொல்லால் தொலைக்கப் பார்ப்பார்களா? இது வீண் பேச்சு.

5. சர்வ கல்வி, சர்வ குடியாமைகளுக்கு, திட்டங்கள் வகுக்கக்கூடும். சத்தியமூர்த்தியும் சர்வ கல்விக்கு 10 வருஷ திட்டம் வேண்டுமென்கின்றார்! ஆனல், சர்வ கல்விக்கு வேண்டிய பண உதவி, சர்வ குடியாமையால் நேரிடும் நஷ்டம், எந்த முதலாளி அரசாங்கம் தாங்க முடியும்? பெரிய மந்திரிகள் தங்கள் சம்பளத்தை அறைப் பங்கு குறைத்துக் கொள்வார்களா? அவர்கள் மேல் வகுக்கப்பட்டிருக்கும் வருமான வரியை இரட்டித்துக்கொள்வார்களா? இவர்கள் நிழலில் நிற்கின்றவர்களா, சர்வ கல்வியை சட்டசபைகளில் ஆதரிக்கப்போகின்றனர். எத்தனை ஆயிரம் பிராமணரல்லாத மாணவருக்கு சம்பளமில்லாமையும், Scholarships களும், எந்த ராஜ விஸ்வாசி செய்து வைத்தார் என்று கேட்கின்றோம்?

லார்டு ஓபார்ட்கவர்ன்மெண்டிலாகிலும் அகில மகமதிய மாணவர்களுக்கு அரைச் சம்பளம் விதிக்கப்பட்டது! ஆனல் உண்மையை உரைக்கவேண்டுமானல், பிராமணரல்லாத கட்சியால், சிற்சில முதலாளி பிள்ளைகளுக்கே சிற்சில உத்தியோகங்களும், செல்வாக்கும் கிடைத்தனவே ஒழிய, மற்றபடி "பள்ளு பறை பதினெட்டென்று" கூறும் கோடான கோடி பிராமணரல்லாத பாமர மக்களுக்கு ஒரு திரண மேனும் உதவி உண்டாகவில்லை. பாபம், ஜஸ்டிஸ் கட்சி தான என்ன செய்யும்! இவர்களும் முதலாளிகள், இவர்களை ஆதரிக்கின்றவர்களும் முதலாளிகள்! இவ்விருவருடைய செலவாக்கையா போக்கிக்கொள்வார்கள்?

6. அவரவர் மதங்களை, ஆதரிக்கப்படுமென்று மத பாதுகாப்புகள் உண்டாயிருக்க, மதங்களை அரசியல் ஆதரவிலிருந்து, யாரால் எடுக்க முடியும. புதிய திட்டத்தை மாற்றினாலன்றி மதங்களின் செல்வாக்கு

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க

பகுத்தறிவு.
ஈரோடு 1934—செப்டம்பர் 30-உ

# ஜன நாயகமா? பண நாயகமா?

உலகில் ஜன நாயகம் என்னும் வார்த்தை மிகவும் செல்வாக்குப் பெற்றது என்பதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்காது.

செல்வாக்குப் பெற்ற வார்த்தைகள் எல்லாம் உண்மையானதும், நேர்மையானதும் என்று சொல்லிவிட முடியாது.

செல்வாக்குப் பெற்ற வார்த்தைகள் பெரும்பான்மையும் சில சுயநலங்கொண்ட மக்களால் உள் எண்ணத்தோடு கற்பிக்கப்பட்டு பாமர மக்களுக்குள் பிரசாரம் செய்யப் பட்டதின் பயனாகவே செல்வாக்கடைய முடிந்ததாக இருக்குமே தவிர உண்மையில் அதன் யோக்கியதையால்—ஏற்படும் பயன்களால் செல்வாக்கு ஏற்பட்டதென்று சொல்லிவிடவும் முடியாது.

புண்ணியம், சத்தியம், அஹிம்சை, ஜீவகாருண்யம், ஒழுக்கம், கற்பு என்பனபோன்ற வார்த்தைகளுக்கு நாட்டில் மதிப்பும், செல்வாக்கும் இருந்து வருகின்றது என்றாலும் அவைகள் உபயோகப்படும் மாதிரியும்காரியத்தில் அனுஷ்டிக்கப்படும் தன்மையும் எப்படி இருந்து வருகின்றது என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. இவை பெரும்பாலும் வலுத்தவன் இளைத்தவனை அடக்கியாளும் காரியத்திற்கும் தன் தன் சுயநலத்துக்குமே பெரிதும் பயன் படுத்தப்படுகின்றன என்பது கண்கூடு.

இம்மாதிரியிலேயே தான் ஜன நாயகம் என்கின்ற வார்த்தையும், பணநாயகத்துக்கு அடிமை ஆதாவது பாமர மக்களையும், ஏழை மக்களையும் அடக்கியாள, படித்த—பணக்கார மக்களால் கற்பிக்கப்பட்டதும், பயன் படுத்தத் தக்கதுமான வார்த்தை என்று தான் சொல்ல வேண்டி இருக்கின்றது.

உலகிலே எங்கெந்த நாட்டில் ஏழைமக்கள் கண்விழித்தார்களோ அங்கெல்லாம் ஜனநாயகத்தின் புரட்டு வெளியாகிக் கொண்டுதான் வருகின்றது. ஜனநாயக அரசாங்கம், —ஜனநாயக ஸ்தாபனங்கள்— ஜனநாயக முயற்சிகள் என்பவைகளைப்பற்றிய அனுபவம் இந்திய மக்களுக்கு சுமார் 50, 60 வருஷகாலமாக இருந்து வருகின்றது என்று எண்ணுகின்றோம். இந்த ஐம்பது அறுபது வருஷ கால அனுபவத்தில் ஜனநாயகத்தின் பலன் என்ன என்பதைப்பார்த்தால் பிறகு ஜனநாயகம் என்பதில் அதன் வார்த்தைக்கேற்ற தத்துவம் இருக்கின்றதா? அல்லது ஜனநாயகம் என்பது பண நாயகத்தின் அடிமையா என்பது விளங்கும்.

இந்தியாவில் ஜனநாயக ஸ்தாபனம் என்னும் காங்கிரசு ஏற்பட்டு சுமார் 50-வருஷங்களுக்கு மேலாகின்றது. ஜனநாயக தத்துவம் என்னும் முனிசிபாலிட்டிகள், ஜில்லா தாலூகா போர்டுகள் முதலியவைகள் ஏற்பட்டும் 50, 60 வருஷங்களாகின்றன.

சட்ட சபைகள், நிர்வாக சபைகளில் பெரும்பாகம் முதலியவைகளும் ஜனநாயகத்துக்கு வந்து 20 வருஷங்கள் முதல் 40 வருஷங்கள்வரை ஆகின்றன.

இவைகளால் பொதுமக்களுக்கு ஜனநாயக தத்துவதன்மை என்ன ஏற்பட்டது? அல்லது ஜனநாயக உரிமை என்ன ஒழுங்காய் பயன் படுத்தப்பட்டது? என்பதை யோசித்துப்பார்க்க வேண்டுகிறோம்.

ஜனநாயக சட்டசபையையும் நிர்வாக சபையையும் எடுத்துக் கொள்ளுவோம். ஜனநாயக ஸ்தாபனங்களின் பேரால் நடக்கும் புரட்டுகள் எவ்வளவு? என்பதில் காங்கிரசைப்பற்றி நாம் அதிகம் சொல்லவேண்டியதில்லை என்றே எண்ணுகின்றோம். பொதுவாகப் பேசுவோமானால் இன்று ஜனநாயகம் பணநாயகத்தின் அடிமையா அல்லவா என்பதை முதலில் யோசிப்போம். நமது சென்னை மாகாணத்தை எடுத்துக்கொண்டால் ஒரு இரண்டு மூன்று ஜமீன்தார்களோ, பணக்காரலேவாதேவிக்காரரோ, முதலாளிகளோ ஒன்றுசேர்ந்து 3 அல்லது 4 லக்ஷ ரூபாய் முதல் வைத்து ஜனநாயகத்தை விலைக்கு வாங்கும் கூட்டாளிகளாகி ஒருகூட்டுவியாபாரம் ஆரம்பித்தால் 26 ஜில்லாக்களிலும் குறைந்த அளவாக மெஜாரிட்டி சட்ட சபை மெம்பர்களையாவது தங்கள் இஷ்டப்படி ஆடக்கூடியவர்களாக சம்பாதித்துவிட முடியுமாமுடியாதாஎன்று யோசித்துப்பாருங்கள். இன்னமும் கொஞ்சம் பணம் செலவு செய்தால் அரசாங்க நியமன மெம்பர்களையும் சுவாதீனம்செய்துகொள்ள முடியுமா இல்லையா என்பதை யோசித்துப்பாருங்கள். அன்றியும் எந்த தேர்தலை எடுத்தாலும் ஸ்தலஸ்தாபன தேர்தலுக்கு 2000 ரூ செலவு 5000 ரூ செலவு 10000 ரூ செலவு என்று சொல்லப்படுவதும் சட்ட சபை முதலிய தேர்தல்களுக்கு பத்து ஆயிர ரூபாய் செலவு, இருபது ஆயிர ரூபாய் செலவு, ஐம்பது ஆயிர ரூபாய்செலவுஎன்று சொல்லப்படுகின்றதும் உண்மையா அல்லவா என்று கேட்கின்றோம்.

100 க்கு 90 மக்களை ஏழைவிவசாயிகளாகவும் ஏழைத் தொழிலாளிகளாகவும் எழுத்துவாசனை அற்ற பாமர மக்களாகவும் சராசரி வாழ்க்கைக்குப் போதுமான சௌகரியமில்லாத மக்களாகவும் கொண்ட இந்த நாட்டில் மேல் கண்டபடி ஆயிரம் பதினாயிரம் லக்ஷம் கணக்காக ரூபாய்களைச்செலவு செய்தால் தான் ஜனநாயகப் பிரதிநிதித் தத்துவத்தை அடையலாம் என்கின்றதான ஜனநாயகம் அல்லது கலப்பற்ற உண்மையான ஜன நாயகமா? பண நாயகமா? என்று கேட்பதல்லாமல் இத்தேர்தல்களின் பயனாய் ஏற்படும் கலகம், காலித்தனம், மனஸ்தாபம் கக்ஷிபிரதிக்கக்ஷி மனப்பான்மை ஆகியவைகள் ஒரு கூட்ட மக்களை முடிநாயகத்துக்கு நிபந்தனை அற்ற அடிமைகளாகச் செய்துவருகின்றதா இல்லையா என்றும் கேட்கின்றோம்.

அரசாங்கம் தன்னை ஜனங்களுக்காக ஜனங்கள் அபிப்பிராயப்படி நடக்கும் ஜன நாயக அரசாங்கம் என்று சொல்லிக்கொள்ளுவதை நாம் புரட்டு என்று சொல்லுவதைவிட அவர்களால் கொடுக்கப்பட்ட ஜன நாயகத் தத்துவத்தைக் கையாளும் ஜனங்கள் உண்மையாய் யோக்கியமாய் அனுபவிக்கத் தகுதி உடையவர்களாய் இருக்கிறார்கள் என்றுசொல்லப்படுவதானதுஇன்னும் ஆயிரம்பங்கு முழுப் புரட்டு என்றுதான் சொல்லப்பட வேண்டியதாகும்.

ஜன நாயகம் கொடுக்கப்பட்ட எல்லாத் துரைகளிலும் பணம் உள்ளவன், பூமி உள்ளவன், வீடு வாசல் உள்ளவன், இந்திய மக்களின்சராசரி வரும்படிக்கு மேல் 10 பங்கு100பங்கு அதிகவரும்படி உள்ளவன் ஆகியவர்களுக்குத் தான் ஓட்டுரிமை இருக்கின்றதே தவிர கைகால் உறமாய் இருந்து அவனவன் கைப்பட உழைத்து உண்ணும் பாட்டாளி மக்களுக்கு ஓட்டுச்சுதந்திரம் கிடையவே கிடையாது. மற்றும் தன் உழைப்பின் பயனாய் வருஷம் ஒன்றுக்கு 350 ரூபாய் வரையில் கூலியோ சம்பளமோ பெறுகின்றவனாய் இருந்தாலும் அவனுக்கும் ஓட்டுரிமை கிடையாது என்கின்ற முறையில் தான் ஜனநாயக ஓட்டுரிமை இருக்கின்றது என்றால் இப்படிப்பட்ட ஏழைப்பாட்டாளி மக்களுக்கு ஜன நாயகப் பிரதிநிதித்துவம் எப்படி கிடைக்கும்என்றுகேட்கின்றோம். ஓட்டு அருகதை, பிரதிநிதி அருகதை இப்படியாக இருந்தாலும் பிரதிநிதித்துவத்தைப் பெறும் முறை முன் குறிப்பிட்டபடி ஆயிரம், பதினாயிரம், லக்ஷம் ரூபாய் செலவிட வேண்டியதாய் இருக்கின்றதென்றால்ஏதோ ஒருசில பணக்காரர்கள் மாத்திரம் அல்லாமல் பொது மக்கள் இதை நினைக்கத் தான் யோக்கியதையுடையவர்களாவார்களா என்றும் தேர்தல் கூச்சல் போடுகிறவர்களைக் கேட்கின்றோம். இந்த மாதம்பூராவும்ஜனநாயகத் தேர்தல் கூச்சலாகவே இருக்கிறது. இந்திய சட்டசபைத் தேர்தல், டவுன் முனிசிபல் கவுன்சிலர்கள் தேர்தல்கள் ஆகியவைகளின் பேச்சுக்களாகவே இருக்கின்றன. இந்திய சட்ட சபைத் தேர்தல் சம்மந்தமாய் லக்ஷக்கணக்கான செல்வமுள்ளவர்களும், லக்ஷக்கணக்கான செல்வவந்தர்களை தங்கள் கைக்குள் அடக்கிக் கொண்டிருக்கின்றவர்களும் தவிர மற்றவர்களுக்கு அங்கு வேலை இல்லை என்பது வெளிப்படை. பணச்செலவு இல்லாமல் ஏமாற்றலாம் என்று கருதுகின்றவர்கள் ஜன நாயக ஸ்தாபனங்களின் புரட்டுகளையும் அயோக்கியத்தனங்களையும் ஆதாரமாய்க்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இந்தக் காரணத்தாலேயே இரண்டுக்கும் யோக்யதையற்ற வெகு பேர் "சீ அந்தப் பழம் புளிக்கும்" என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

இது நிற்க முனிசிபல் டவுன் தேர்தலை எடுத்துக்கொள்ளுவோம், ஒரு ஓட்டுக்கு 10 ரூபாயில் இருந்து 15 ஆகி, 20 ஆகி, 25 ஆகி, 35 ஆகி, 50 ரூபாய் ஆகிவிட்டதுடன் சில ஓட்டுகளு

க்கு அதாவது சிறிது சாமாராத்தியவாளியாய் இருந்து வாங்கின பணத்தைத் திரும்பக்கொடுப்பதாய் பாசாங்கு செய்தவர்களுடைய ஓட்டுகளுக்கு 100 ரூபாய் விலையும் ஆகிவிட்டது. இதில் எதுவும் இரகசியமிருப்பதாய் சொல்ல முடியாது. சர்க்கார்சேவகர்கள், குமாஸ்தாக்கள் ஓட்டுகளும் கூட இந்த விலைக்குத்தான் வாங்கப்பட்டிருக்கின்றன என்று நினைக்கவேண்டியிருக்கின்றது. சிலர் பணம் வாங்காமல் ஓட்டுப் போட்டிருக்கலாம் என்றாலும், அதற்குத் தகுந்த பிரதிப் பிரயோஜனமாவது அடையக் கருதியே ஓட்டுச் செய்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

இவற்றோடு மாத்திரமல்லாமல், ஜன நாயகத்தை பண நாயகம் என்று மாத்திரம் சொல்வதோடல்லாமல் காலித்தன நாயகம் என்றுகூட சொல்லவேண்டிய நிலைமையில் சில ஊர்களில் தேர்தல்கள் நடைபெற்றதாகச் செய்திகள் எட்டுகின்றன.

இன்றையதினம் இருக்கும் பண நெருக்கடியில் 20 ரூ. 30 ரூ. 100 ரூ. போல ஒரு காக்காப் புள்ளி X போடுவதற்குப் பணம் கிடைப்பதாயிருந்தால் அதை வேண்டாமென்று சொன்னவர்களை முட்டாள் என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில், "பொதுஜனங்கள் கேட்ட ஜன நாயகத் தத்துவத்தில் புரட்டு இல்லை என்று சொல்ல எவராலும் முடியாது. அரசாங்கத்தார் வழங்கிய ஜன நாயகத் தத்துவத்தில் ஏமாற்றமும், புரட்டும் இல்லையென்று யாராலும் சொல்லமுடியாது. இதை ஏற்றுக்கொண்டு ஜனநாயகப்பிரதிநிதிகளாய் நிற்கும் அபேட்சகர்களிடத்தில் புரட்டும், ஏமாற்றமும், பித்தலாட்டமும் மாத்திரம் அல்லாமல் நாணயக்குறைவும், யோக்கியப் பொறுப்பற்ற தன்மையும் அடியோடு இல்லை என்று சிறிது கூட சொல்லிவிட முடியாது. இப்படிப்பட்ட நிலையில் ஒரு ஓட்டர் இப்படிப்பட்ட காரியத்திற்கு இப்படிப்பட்ட ஆட்களிடம் பத்தோ, இருபதோ, ஐம்பதோ, நூறோ வாங்கிக்கொண்டு ஓட்டுச் செய்தால் அது எப்படி குற்றமாகும் என்பது நமக்கு விளங்கவில்லை.

எப்படி ஒரு பெண் கற்பு இழந்தால் அந்த பெண்ணுக்கும், அதற்குச்சரிபங்கு பொறுப்பாளியாய் இருந்த ஆணுக்கும் சரிசமமான பாவம் என்று சொல்லுகின்றோமோ அது போலவே தான் ஒரு ஓட்டர் பணம் வாங்கினால் அந்த ஓட்டருக்கும், அவருக்குப் பணம் கொடுத்த அபேட்சகருக்கும் அதற்கு இவ்வளவு காரணமாய் இடமளித்த அரசாங்கத்துக்கும் சமமான பாவம்—குற்றப்பொறுப்பு இருக்கின்றது என்று தான் சொல்லுவோம். இன்றைய சட்டத்தில் இதற்கு வேறுமாதிரியான அபிப்பிராயம் இருக்கலாம். ஆனால் தீர்ப்பு நாள் சட்டமிருக்கின்றதாகச் சொல்லுகின்றார்களே அந்தச்சட்டத்தில் அதாவது ஒவ்வொருவனுடைய பகுத்தறிவையும் உபயோகித்து நடுநிலையில் இருந்து பார்க்கும் தன்மையில் மூன்று பேரும் அதாவது ஓட்டரும், அபேட்சகரும், தேர்தல் முறைகளும் மூன்றும் குற்றவாளிகள் என்று தான் சொல்ல வேண்டும். அரசாங்கத்தத்துவம் பணக்காரத்தன்மையது என்பது யாரும் மறுக்கக்கூடியதல்ல. ஏனெனில் பணக்காரனுக்குத்தான் ஓட்டு என்பதோடு அதிகப்பணம் செலவு செய்யத்தகுந்தவன் தான் வெற்றி பெறக்கூடிய நிலையில் இன்று பெரும்பான்மையான எல்லா தேர்தலும் இருந்து வருவதையும் அந்தப்படியே நடந்து வருவதையும் அரசாங்கம் தனக்குத் தெரியாது என்று சொல்லிவிட முடியாது.

போட்டி போடும் இரண்டு அபேட்சகர்களும இந்த மாதிரி நடந்து கொள்வதால் அரசாங்கத்தாரிடம் பிராது கொடுக்க எவனும் வருவதில்லையேயொழிய அதாவது சூதாடிகள் சூதுக்குற்றத்துக்காக எப்படி அவர்களே பிராதுக்கு வராமல் இருக்கிறார்களோ அதுபோல்இருவரும்வருவதில்லை.

ஆனால் அரசாங்கம் இந்தக்குற்றத்துக்கு ஜவாப்தாரியல்ல என்று சொல்லிக் கொள்ள வேண்டுமானால் மற்றக்காரியங்களுக்கு எப்படிப் புலன் விசாரித்து நடவடிக்கை நடத்துகிறார்களோ அதுபோல் நடத்தி இக் காரியங்களை ஒழித்து இருக்கலாம். ஆகலால் அரசாங்கம் இதில் பங்கு பெறாமல் தப்பித்துக்கொள்ளமுடியாது.

இந்தக் காரணங்களால் தான் ஜன நாயகம் என்று சொல்லப்படுவது ஏமாற்றம் என்றும், அது பணநாயகத்தின் லைசென்ஸ் பெற்ற கூலியென்றும், அதைப்பொது மக்கள் இந்த மாதிரி பணம் வாங்கிக்கொண்டு ஓட்டுச் செய்யலாம் என்கின்ற காரியத்திற்கு அல்லாமல் வேறு காரியத்திற்கு உதவும் என்று எண்ண இடமில்லையென்றும் சொல்லுகிறோம்.

## பார்ப்பனீய ஒழிப்புத் திருநாள்.

சுயமரியாதை இயக்கத்தின் சுமார் 10 வருஷ கால வேலையின் பயனாய் பார்ப்பனீயம் ஒரு அளவுக்காவது ஆட்டம் கொடுத்து விட்ட விஷயம் நாம் எடுத்துக் காட்டவேண்டிய அவசியம் இல்லை என்றே கருதுகிறோம்.

ஆனபோதிலும் சமுதாய விஷயங்களில் பார்ப்பனீயம் எவ்வளவு பகிஷ்கரிக்கப்பட்டிருக்கின்றதோ, அதில் 8ல் ஒரு பங்குகூட அரசியல் விஷயத்தில் பகிஷ்கரிக்கப்பட்டிருப்பதாகச் சொல்ல முடியாது.

அரசியலில் ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனர்களுக்கு விரோதமாய் வேலை செய்வது என்று பெயர் வைத்துக்கொண்டிருந்தாலும் அதன் தலைவர்கள் என்பவர்கள் பலர் தனிப்பட்ட முறையில் தங்கள் சுயநலத்திற்காக எதையும் விற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

தோழர் முத்தையா முதலியார் அவர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் திட்டம் அரசாங்க உத்திரவு மூலம் போட்ட காரணத்திற்காகவே பார்ப்பனர்கள் அவரை ஒழிக்கச் செய்த சதியில் சில ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களும் உள் உளவாய் இருந்ததோடு பார்ப்பனரல்லாதார் கட்சியின் பயனாய் முதல் மந்திரி ஸ்தானம் பெற்ற தோழர் முனிசாமி நாயுடு அவர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு விரோதமாய் இருந்து வந்ததுடன் தனது ஸ்தானத்தைக் காப்பாற்ற பார்ப்பனர்களுக்கு அடிமை ஆகவேண்டிய நிலையையும் அடைந்தார். அதன் பயனையும் அடைந்தார் என்றாலும் இப்போது ஜஸ்டிஸ் கட்சியில் பாரப்பனர்களைச் சேர்த்துக்கொள்ளவும் ஏற்பாடாகி வருகிறது.

இது எப்படியோ இருக்கட்டும் தோழர் முத்தையா முதலியார் அவர்கள் ஏற்படுத்திய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உத்திரவை ஜஸ்டிஸ்கக்ஷி அரசாங்கம் இப்போது மறுபடியும் பிரசுரித்திருப்பது போற்றத்தக்கதேயாகும்.

இன்றையதினம் எந்தவூரில், டவுனில் எடுத்துக்கொண்டாலும் வாசல்கூட்டி, பியூன் ஆகியவர்கள் போன்ற உத்தியோகம் போக பாக்கி உத்தியோகங்களில் பார்ப்பனர்கள்தான் 100-க்கு 80 பேர், 90 பேர்கள் இருந்து வருகிறார்கள். அதிலும் நீதி இலாக்காவாகிய முனிசீப்பு, சப் ஜட்ஜ், ஜில்லா ஜட்ஜ் முதலியவைகளும், நிர்வாக இலாக்காவாகிய போலீஸ் டிப்டி சூப்பிரண்டெண்ட், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் ஆகியவைகளிலும் பார்ப்பன ஆதிக்கமே தலைசிறந்து நிற்பதுடன் பார்ப்பனல்லாதார் முயற்சியையும், முன்னேற்றத்தையும் ஒழிக்கவும் தடுக்கவும் அவைகளின் மூலம் எவ்வளவு காரியம் செய்யவேண்டுமோ அவ்வளவு காரியங்கள் நெஞ்சில் ஈரமில்லாமல் வன்னெஞ்சத்துடன் ஆங்காங்கு செய்யப்பட்டு வருகின்றதானது எவரும் அறியாததல்ல.

அரசாங்கத்தார் ஒவ்வொரு இடத்திலும் உத்தியோகங்களில் பாரப்பனர், பார்ப்பனரல்லாதார் நிலைமை சரிவரக் காக்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். அதிகாரிகளைக் குறைந்த அளவாவது பார்ப்பனரல்லாதார் பிரதிநிதித்துவம் கவனிக்கப்பட இடமிருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

உதாரணமாக ஒரு ஊரில் டிப்டி கலெக்டர் பார்ப்பனராயிருந்தால் தாசில்தார் பார்ப்பனரல்லாதாராய் இருக்கும்படியும், சப் இன்ஸ்பெக்டர் பார்ப்பனராயிருந்தால் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பார்ப்பனரல்லாதாராயும், ஜில்லா ஜட்ஜ் பார்ப்பனராயிருந்தால் சப் ஜட்ஜ் பார்ப்பனரல்லாதாராயும் மற்றும் இதுபோல் அதிகாரங்கள் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

அப்படியில்லாதவரை அரசியலிலானாலும், தேசியத்திலானாலும், வகுப்பு உணர்ச்சி தாண்டவமாடும் இக்காலத்தில் பல வகுப்பு மக்களுக்கு பந்தோபஸ்து இருக்குமென்று கருத முடியாது.

அரசாங்கம் சம்மந்தமில்லாத வேறு பல விஷயங்களில் கூடியவரை பார்ப்பனரல்லாதார்கள் விழித்துக்கொண்டார்கள் என்றே சொல்லலாம்.

உதாரணமாக இப்போது நடைபெற்றுவரும் முனிசிபல்

எலக்ஷன்களில் பார்ப்பனக் கோட்டைகளாயிருந்த சேலம், திருப்பூர் முதலிய இடங்களில் ஒரு பார்ப்பனர்கூட வர முடியாமல் போனதைப்பார்த்தால் அங்குள்ள காங்கிரஸ் ஆதிக்கமும், பார்ப்பன ஆதிக்கமும் எவ்வளவு என்பது விளங்கும்.

பெண்களும், ஆதிதிராவிடர்களும் ஒவ்வொரு முனிசிபாலிட்டியிலும் ஸ்தானம் பெற்றார்கள் என்றால் அது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் பெருமையாலேயே அல்லாமல் ஜனங்களுக்கு சமரச உணர்ச்சி ஏற்பட்டல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஈரோடு அர்பன் பாங்கி சமீப காலம் வரை பார்ப்பன ஆதிக்கத்தில் இருந்தது என்றாலும் இந்த வருஷம்ஷெபாங்குதேர்தலில் ஒரு பார்ப்பனருக்குக்கூட இடம் இல்லாமல் போய்விட்டது என்பதோடு ஒரு பெண் டைரக்டரும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறதானது மகிழ்ச்சிக்குரியதாகும். இவ்வளவு இருந்தாலும் சில இடங்களில் ஸ்தானங்கள் பெறப் பார்ப்பனர்கள் கையில் ஆகவில்லை என்றாலும் சிலர் சில பார்ப்பனரல்லாதாரைப் பல வழிகளில் தங்கள் வழிப்படுத்திக்கொண்டு கட்சிகள் தகரார்கள் உற்பத்தி செய்து தாங்கள் ஸ்தானத்தில் இருந்தால் என்ன நடக்குமோ அதுபோல்செய்து வருவது இன்னும் குறைந்த பாடில்லை.

நாட்டில் வகுப்பு உணர்ச்சி ஏற்பட்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. அதிலும் தங்களை பிறவியிலேயே உயர்ந்த ஜாதி என்று கருதிக்கொண்டு மற்றவர்களைத் தாழ்ந்த ஜாதியாகக் கருதிக்கொண்டிருக்கிறவர்களிடத்தில் தாழ்ந்த ஜாதிக்காரர்களாய் கருதப்படுகிறவர்கள் துவேஷமும் வெறுப்பும் இல்லாமல் இருக்கக்கூடும் என்று எதிர்பார்ப்பது மனித இயற்கைக்கு விரோதமானது.

உதாரணமாக ஒரு பிராமணன் என்பவனிடம்ஒரு சூத்திரன் என்பவன் துவேஷமாயிருக்கிறான் என்பது ஒருநாளும் ஆச்சரியமான காரியமாகாது. மற்றெது ஆச்சரியமான காரியம் ஆகுமென்றால் ஒரு பிராமணன் என்பவனிடம் ஒரு சூத்திரன் என்று அழைக்கப் படுகின்றவன்—தீண்டப்படாதவன் என்று அழைக்கப்படுகிறவன் துவேஷமில்லாமல், வெறுப்பு இல்லாமல் இருந்து வருவது தான் ஆச்சரியப்படத்தக்கதாகும்.

ஆதலால் ஜாதிப்பிரிவு சம்பந்தமான உயர்வு, தாழ்வு இருக்கும் வரை நாட்டில் துவேஷம், வெறுப்பு வகுப்பு உணர்ச்சி ஆகிய காரியங்களும் ஒரு வகுப்பாரால் ஒரு வகுப்பு கஷ்டமடையும் காரியங்களும்எதிர் பார்த்துத்தான் இருக்க வேண்டும்.

உதாரணம்.

இதற்கும் ஒரு உதாரணம் கூறிவிட்டு இதை முடிக்கின்றோம்.

தோழர் எஸ். குஞ்சிதம் குருசாமி அம்மாளை யாவருக்கும் தெரியும் அந்தம்மாள் பி. ஏ., எல் டி., பாஸ் செய்தவர்கள் அதிலும் யோக்கியதா பக்ஷத்தோடு உயர்ந்த வகுப்பில் பாஸ் செய்தவர்கள். அவர்களின் கல்வித்திறமை, போதிக்கும் திறமை, பிள்ளைகளிடம் அன்பாய் இருக்கும் திறமை, சரீராப்பியாச விளையாட்டுகளில் உள்ள திறமை முதலியவைகள் அந்தம்மாள் வேலைசெய்த பள்ளிக்கூடத்தலைமைஉபாத்தியாயரின் நற்சாக்ஷிப்பத்திரத்தில் காணலாம் இப்படிப்பட்ட அம்மாள் மைலாப்பூரில் ஒரு பார்ப்பன ஆதிக்கமுள்ள பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக மாதம் 70-ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு வந்தார்.

அந்தம்மாள் யாதொரு தப்பிதமும் செய்து விடவில்லை. இரண்டொரு இடங்களில் பகுத்தறிவு பிரசங்கங்கள் செய்தது தவிர யாதொரு பாவத்தையும் அறியார். அப்படிப்பட்டவர்களை தோழர்கள் பி. எஸ். சிவசாமி அய்யர் டி. ஆர். வெங்கிட்டராம சாஸ்திரி, சி. பி. ராமசாமி அய்யர் அல்லாடிக் கிருஷ்ணசாமி அய்யர்ஆகியவர்கள் போன்றவர்கள் நிர்வாக கமிட்டியாய் இருக்கும் பள்ளிக்கூடத்தில் அந்தம்மாளுக்கு இனி வேலை இல்லை என்று நோட்டீஸ் கொடுத்து வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள் என்றால் வகுப்பு உணர்ச்சியில் மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க முடியுமா என்று யோசித்துப் பாருங்கள்.

இந்தப்படி ஒரு பார்ப்பனரல்லாதார் ஆதிக்கமுள்ள ஸ்தாபனங்களில் இருந்து தகுந்த ஒழுக்கக் குறைவுள்பட ஒருகுற்றத்துக்காக ஒரு பார்ப்பனரை நீக்கி விட்டால் அக்கிரகாரம் முதல்கொண்டு சர்க்கார் அதிகாரிகள்—ஹைகோர்ட்டு வரை அந்த ஸ்தாபனத்தின் மீது பழி வாங்க நினைக்கிறார்கள். "பிராமணத்துவேஷம்" பிராமணத் துவேஷமென்று கூப்பாடு போடுகிறார்கள்.

பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தில் இருக்கிறஎந்த ஸ்தாபனங்களிலாவது 100-க்கு 10 வீதமாவது பார்ப்பனரல்லாதார்களுக்கு வேலை கொடுக்கிறார்களா? எனப் பார்த்தால் வகுப்பு துவேஷம் யாரிடத்தில் இருக்கிறது என்பது விளங்கும்.

ஆதலால் பார்ப்பனரல்லாத மக்கள் இனியாகிலும் இவ்விஷயங்களை உணர்ந்து அதற்குத்தகுந்தபடி நடந்துகொள்ள முயற்சிப்பதுடன், காந்தி ஜெயந்தி, கிருஷ்ண ஜெயந்தி, ஹரிஜன நாள், ஏகாதிபத்திய ஒழிப்பு நாள், மேடே என்பது போன்ற நாள்களை வருஷத்துக்கு ஒரு நாள் கொண்டாடுவது போல் "பார்ப்பன ஆதிக்கம் ஒழிப்பு நாள்" என்பதாக வருஷத்தில் ஒரு நாள் கொண்டாட ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் அதை அடுத்து வரும் தீபாவளிக்கு அடுத்த நாளோ, அல்லது முந்திய நாளோ வைத்துக்கொள்வது நல்லது என்றும் அபிப்பிராயப் படுகின்றோம்'

இத் தினங்களில் ஆங்காங்கு கூட்டம் போட்டு பார்ப்பன ஆதிக்கக் கொடுமை, சமுதாயத்திலும், அரசியிலும் இருப்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டி தீர்மானங்களை நிறைவேற்றி அரசாங்கத்துக்கும், பத்திரிக்கைகளுக்கும் அனுப்ப வேண்டிய வேலையை அத் திரு நாள் கொண்டாட்ட வேலையாக வைத்துக்கொள்ளலாம் என்றும் அபிப்பிராயப்படுகின்றோம். இன்ன நாள் என்பதை பின்னால் உறுதிப்படுத்துகிறோம்.

---

# சர்க்கார் காங்கிரசை விட மோசமானதா?

## பட்டேலின் "ஸ்ரீமுகம்"

தோழர் வல்லபாய் பட்டேல் அவர்கள் சென்னை மாகாண காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் முனைந்து நிற்பதைப்பார்த்து மகிழ்ச்சி அடைவதாகவும், சென்னை மாகாணக்காரர்கள் காங்கிரஸ்காரருக்கே ஓட்டு செய்ய வேண்டும் என்றும் அதற்குக் காரணம் அடக்கு முறையைக் கண்டிக்கவேண்டியும், வெள்ளை அறிக்கையை நிராகரிக்க வேண்டியும் காங்கிரஸ்காரர்களே தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்றும்சொல்லுகிறார், மற்றும் காங்கிரஸ்வாதி அல்லாத மற்றவருக்குக்கொடுக்கும் ஓட்டுசர்க்காருக்குக் கொடுத்தது போல் ஆகுமென்றும் சொல்லுகிறார். முதல் விஷயத்தை ஒப்புக்கொண்டாலும் இரண்டாவது விஷயம் ஒப்புக்கொள்ளப்படாதது என்பதுடன் அதில் நாணயமும், நியாயமும்இல்லை என்றும் சொல்லவேண்டியிருப்பதற்கு வருந்துகிறோம்.

ஏனெனில் இந்த நாட்டில் உள்ள சுமார் 35-கோடி மக்களில் காங்கிரசில் அங்கத்தினர்களாய் இருக்கிற சுமார் ஒரு பத்தாயிரம் அல்லது இருபதாயிரம் மக்களைத்தவிர மற்றவர்கள் எல்லாம் சர்க்காரைச் சேர்ந்தவர்கள், தேசத்துரோகிகள் என்பது தோழர் பட்டேல் அவர்களின் ஸ்ரீமுகத்தின் கருத்தாகிறது.

தோழர் ஷண்முகம் அவர்கள் விருதுநகரில் தெரிவித்ததுபோல் தேசபக்தி என்பது தோழர்கள் பட்டேல், ஆச்சாரியார் ஆகியவர்களின பிதுரார்ஜ்ஜிதசொத்துப் போலவும் அந்தக்கூட்டத்தில் இவர்களுடைய சிஷ்யர்களும், அடிமைகளும் தவிர மற்றவர்களுக்கு இடம் கிடையாது போலவும் இவர்களுடைய ஆதிக்கம் இருந்துவருகிறது.

அந்த சிஷ்யர்ளும், அடிமைகளும் கூட தங்கள் தேசபக்தியைக்காட்டவேண்டுமானால்ஒரு முறைக்குநாலு முறை சிறைசென்று இருந்தாலும் போராது, பத்து ஆயிரக்கணக்கான ரூபா

ய்கள் கொண்ட தங்கள் வரும்படிகளையும்துறந்து கைமுதல்களையும்இழந்து ராஜபோகத்தையும் விடுத்து சன்னியாசியாய் கடன்காரனாய் தெருவில் நின்று தவிப்பவனாய் இருந்தாலும் போராது, மற்றபடி எவ்வளவு அயோக்கியனாய், குடிகாரனாய், ஜாதி ஆணவம் பிடித்தவனாய், தாசிலோலனாய், ஊரை ஏமாற்றி கொள்ளையடிப்பவனாய், சர்க்காருக்கு சி. ஐ. டி. யாய் ஒரு மணி நேர வேலைக்கு 100 ரூபாய், 500ரூபாய், 1000ரூபாய் வீதம் மக்களிடம் இருந்து கறந்து போக போக்கியங்கள் அனுபவிப்பவனாய் இருந்து கொண்டு கதர் துணியை கட்டுபவனாகவும் ராட்டினத்தில் நூற்பவனாகவும், காந்திக்கும், பட்டேலுக்கும், ஆச்சாரிக்கும் ஜே போட்டு மகாத்மா என்று கூப்பிடுபவனாகவும் இருந்தால் பெரிதும்அவன் தான் தேசபக்தன், சர்க்கார்மனிதன் அல்லாதவன், பாமர மக்கள் ஓட்டைப்பெறத் தகுதி உடையவன் என்றால் இதுயோக்கியமா என்று கேட்கின்றோம்.

மத விஷயத்தில்

"பழி தொழிலும் இழி குலமும் படைத்தாரேனும்—அரவணையாய் என்பாராகில் அவர் கண்டீர்யாம்வணங்கும் அடிகள் (கடவுள்) ஆவார், என்றும்"

"சாதியால்ஒழுக்கத்தால்தக்கோரேனும் —பொன்னரங்கம் போற்றாதார் புலையர்" ஆவார் என்றும்சொல்லப்படுவது போலவே ஆச்சாரியாரையும் பட்டேலையும் போற்றாதார் எவ்வளவுஒழுக்கமுள்ளவராயிருந்தாலும் தேசத்துக்காக எவ்வளவு தியாகம் செய்தவர்களானாலும் தேசத் துரோகிளாவார்கள் என்றுசொல்லப்படுகிறது.

இதற்குக் காரணம் காங்கிரஸ் தேச பக்தி என்பவைகளின் பேரால் ஏராளமான பணங்களைப் பாமர மக்களிடம் இருந்து கொள்ளைகொண்டு அதன் பயனாய் உடல் உழைக்க சோம்பேறித் தனம் கொண்ட மக்களை கூலிகளாய் அமர்த்தி அவர்களை விட்டு கூலிப் பிரசாரம் செய்து வருவதால் இவ்வளவு தைரியமாகப் பேச இவர்களுக்கு இடமேற்பட்டுவிட்டது.

1917 முதல் 1922 வரையில் தோழர் வரதராஜுலு அவர்கள் இந்தப் பார்ப்பனர்களுக்கு சங்கராச்சாரிபோலவும், ஜீயர் போலவும் விளங்கியதை யாரா வது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.அதற்குப் பிறகு எவ்வளவோ தரம் சிறை சென்றும் 10 ஆயிரக்கணக்காககாசு பணம் செலவு செய்தும் தேசியம், தேசாபிமானம் என்று கோடிக்கணக்கான தடவை உருச்செபித்துகுடும்ப சகிதம் கதரையே உடுத்தி வந்தும் இன்று அவர் தேச பக்தர்கள் கூட்டத்தில் சேர்க்கப்படாமல் தேசத் துரோகிகள் கூட்டத்தில் சேர்க்கப்பட்டதின் காரணம் என்ன என்பதை யோசித்தால் தோழர் ஆச்சாரியார்பேரிலும், பட்டேல் பேரிலும் ஸ்தோத்திரம் தாண்டகம் முதலிய பிரபந்தம் பாடாததுதான் காரணம் என்பதைத்தவிர வேறு என்ன சொல்லக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை

தவிரவும் "காங்கிரஸ்க்காரருக்குக் கொடுக்காத ஓட்டு சர்க்காருக்குக் கொடுத்ததாகப் பாவிக்கப்படும்" என்று அடிக்கடி பல்லவி பாடுவதின் யோக்கியதையைச் சற்று விளக்கிப்பார்ப்போம்.

இன்றையதினம் காங்கிரசை விட சர்க்கார் எந்தவிதத்தில் யோக்கியதைக் குறை வானது என்பது நமக்கு விளங்கவில்லை.

சர்க்காரில் அண்ணன் இருந்தால் காங்கிரசில் தம்பி இருக்கிறான். காங்கிரசில் மகன் இருந்தால் சர்க்காரில் தகப்பன் இருக்கிறான். காங்கிரசில் மாமனார் இருந்தால் சர்க்காரில் மருமகன் இருக்கிறான். காங்கிரசில் அண்ணன் மகன் இருந்தால் சர்க்காரில் சிற்றப்பன் இருக்கிறான். காங்கிரசையும், சர்க்காரையும் ஒரு ஜீவனோபாயமாய்க் கொண்டவர்களே இந்த இரண்டு ஸ்தாபனங்களிலும் மிகுந்து இருக்கிறார்கள். இரண்டு கூட்டமும் பெரிதும் பொது ஜனங்கள் பணத்திலேயே வாழுகின்றார்கள். சர்க்கார் அடக்குமுறைச் சட்டங்கள் போலவே காங்கிரசிலும் அடக்குமுறைச் சட்டங்கள் இருந்துகொண்டுதான் வருகின்றன. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், அதிகாரிகள் ஆகியவர்களிடத்தில் இருக்கும் நாணயக்குறைவு, புரட்டு, பித்தலாட்டம், சமயத்துக்கு ஏற்ற வேஷம், வாக்குத்தத்தம் தவறுதல் ஆகியவைகள் காங்கிரசிலும் இருந்துதான் வருகின்றன. சர்க்கார் எதேச்சாதிகாரத்தைப் போலவே காங்கிரசிலும் எதேச்சாதிகாரம் இருந்துதான் வருகின்றது.

சர்க்காரில் இருக்கும் பொய் ஜனநாயகத்தத்துவமே என்? அதைவிட மோசமான ஜனநாயகத்தத்துவமே காங்கிரசிலும் இருந்து வருகின்றது. சர்க்கார் தங்களுக்கு இஷ்டமில்லாதவர்களை, தங்கள் அடிமை அல்லாதவர்களை ராஜத்துரோகியென்று கூப்பிட்டால் காங்கிரஸ் தங்களுக்கு அடிமைகள் அல்லாதவர்களை தேசத்துரோகி என்று விஷமப்பிரசாரம் செய்கிறார்கள். எந்த விதத்தில் காங்கிரஸ் சர்க்காரைவிட யோக்கியதை உடையது என்று கேட்கின்றோம.

ஆகவே பாமர மக்கள் இனியாவது இந்தப் பொய் மிரட்டலை உணர்ந்து தங்களுடைய பகுத்தறிவுக்கு சரியென்று தோன்றிய மார்க்கத்தில் நடந்துகொள்ளவேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

## வரவேற்கின்றோம்.

### ஈரோடு முனிசிபல் தேர்தல்.

சென்ற வாரம் மலரில் 14 கவுன்சிலர்கள் போட்டியில்லாமல் தெரிந்தெடுக்கப்பட்டதைத்தெரிவித்திருந்தோம்.

இந்த வாரம் 27 தேதி நடந்த தேர்தலில்,

4-வது வார்டு

தோழர்கள்

ஈ. எஸ். கோவிந்தசாமி நாயுடு

5-வது வார்டு

S. K. S. காதர் சாயபு

6-வது வார்டு

ராமநாதன் செட்டியார்

11-வது வார்டு

V. வெங்கிடுசாமி ரவுத்

12-வது வார்டு

E. Y. சுல்தான்நவாஸ்கான் சாயபு

G. அற்புதசாமி பிள்ளை

14-வது வார்டு

C. P. சின்னசாமிக் கவுண்டர்

18-வது வார்டு

V. V. C. R. முருகேச முதலியார்

19-வது வார்டு

மகமது சுல்தான் சாயபு முதலியவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

கருங்கல்பாளையத்தில் ஒரு வார்டு நியமனச்சீட்டு செல்லுபடியற்றதாகிவிட்டதால் அதற்குக் கூடிய சீக்கிரம் தேர்தல் நடைபெறக் கூடும். மற்றபடி 23 கவுன்சிலர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த 23 தோழர்களும் வரப்போகும் 3 வருஷங்களுக்கு ஒரு குடும்பச் சகோதரர் போல் இருந்து முனிசிபாலிட்டியை குடும்பகாரியம் போல் கருதி ஒற்றுமையாயும் பொறுப்பாயும் இருந்து நிர்வாகம் செய்து பல துறைகளிலும் இந்த மாகாண முனிசிபாலிட்டிகளுக்கு ஈரோடு முனிசிபாலிட்டி ஒரு வழிகாட்டியாக கருதும்படி நடந்துகொள்ள வேண்டும் என்கின்ற ஆசையோடு23 தோழர்களையும் பாராட்டி மகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம்.

## முனிசிபல் தேர்தல்

### பார்ப்பனியத்திற்கும், காங்கிரஸிசிற்கும் தோல்வி.

சேலம், வாணியம்பாடி, விருதுநகர், வேலூர், திருப்பூர் முதலிய இடங்களில் நடைபெற்ற முனிசிபல் தேர்தல்களில் காங்கிரஸ் வாதிகளென்போரும், பார்ப்பனர்களும் தோல்வியடைந்து விட்டதுடன் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்குழைப்பவர்களும் தான் வெற்றியடைந்துள்ளார்கள். இதிலிருந்தே காங்கிரஸ், பார்ப்பனீயம் ஆகியவைகளின் யோக்கியதைகளை மக்கள் நன்கு உணர்ந்துகொண்டார்களென்பது விளங்கி விட்டது. (ஒரு நிருபர்)

### கே. எம். பால சுப்பிரமணியம்.

திருச்சி பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கத்தலைவரான கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்கள் 24-9-34ந்தேதி திங்கட்கிழமையன்று சென்னை ஹைகோர்ட்டில் அட்வகேட்டாக என்ரோல் செய்யப்பட்டார்.

அவரது தற்கால விலாசம்:—
கே. எம் பாலசுப்பிரமணியம்.
(அட்வகேட்)
**414, திருவல்லிக்கேணி, ஹைரோட், சென்னை**

(9ம் பக்கத் தொடர்ச்சி)

விலக்கப்படும்? கோயில்கள் பாதுகாப்பென்று, மத ஸ்தாபன திட்டத்தை உண்டாக்கிய கட்சியா, அல்லது கூட்டமா, மதங்களை அரசாங்க ஆதரவிலிருந்து நீக்குவார்கள்?

முதலாளி திட்டம் எதுவாயினும் அதனை ஆதரிக்கும் கட்சிகளால் பாமர ஜனங்களுக்கு உண்ணவும், உடுக்கவும், இருக்கவும் சலுகைகள் கிடைக்கப்போவதில்லை. அதே திட்டத்தில் இன்று செய்து வரும் அமெரிக்கா, என். ஆர். எ. பிரசண்ட சீர்திருத்தத்தால் பத்துக்கோடி மக்களுடைய வேலை இல்லாமையை போக்க முடியாமற் போயிற்றென்றால், நிலச் சுவான்களும், பெரும் வர்த்தகர்களும், தொழிற்சாலை சொந்தக்காரர்களும், மகாத்மாக்களும், மௌலானக்களும், அதே திட்டத்திலிருந்துகொண்டு அதன் ஊழல்களை எப்படி எடுக்கெறிய முடியும். தற்கால சட்டசபைகளில் முழுப்பங்கு முதலாளி அங்கத்தினர்களாயிருக்க, அவர்கள் முன் காங்கிரசாயினும்-ஜஸ்டிஸ் கட்சியாயினும்-மற்று வேறு எந்த கட்சியாயினும் என்ன செய்ய முடியும்? இந்த விஷயங்களை விளையாடும் பிள்ளைகளும் அறிந்தது தான்!

நாம் செய்யவேண்டிய வேலை என்னவென்று கேட்கலாம்? பல கட்டுரைகளில் நமது கடமையைப் பற்றியும், நாம் செய்து வரவேண்டிய வேலையைப் பற்றியும் எழுதியுள்ளோம். ஈரோட்டில் 2 வருஷங்களுக்கு முன் வகுக்கப்பட்ட திட்டங்களும் இருக்கின்றன. அந்த திட்டங்களை அமுலுக்குக்கொண்டுவராமல் அந்த திட்டங்களை கனவிலும் நினையாத கட்சிக்காரரோடு சரச சல்லாப வார்த்தைகளைப் பேசுவதால் யாது பயனென்று கேட்கின்றோம்? நாம் நல்ல பிள்ளையென்று பெயரெடுக்க வேண்டுமானால் அது வெகு சுளுவில் அடையலாம்!

மகாத்மாக்களையும், மௌலானக்களையும் நல்ல பிள்ளைகளென்று யார் தான் சொல்லமாட்டார்கள்!

எல்லா இயக்கங்களும் ஆரம்பிக்கும்போது உயர்வான நோக்கங்களைத் தான் வெளியிடுகிறார்கள். அனுஷ்டானத்தில் யாதொன்றும் பயன்படுவதாகக் காணோம்! ஒவ்வொரு கட்சிகளிலும் சுய நலம் அதிகரித்து அந்தந்தக் கட்சிகளின் கோரிக்கைகளை (Ideals) நிறைவேறச் செய்ய முடியாமற்போகின்றது. பிராமணரல்லாதாரை காக்க வேண்டி வந்த இரண்டொரு காட்சிகள் அரசியல் துறையில் நுழைந்தவுடன்! தங்கள் இனத்தாரில் இரண்டொருவருக்குப் பட்டம் பதவியுடன் நின்றுவிட்டன. இத்யாதி முடிவு உலக முழுமையும் நிறைந்துள. சுருக்கக்கூறுமிடத்து, முதலாளிக் கூட்டத்தில் அடங்கிய கட்சிகள் யாவும் ஒன்றுக்கொன்று தாறுமாறாக நடக்கும். அதனதன் இயற்கை லக்ஷணங்களைப் பாமர ஜனங்கள் அறியும்படி உழைப்பதும், உழைத்து வருவதும் தான் உண்மையான சமதர்மிகளின் கடமை என்று எண்ணுகிறோம்.

குறிப்பு:—சரியாகவோ தப்பாகவோ ஜஸ்டிஸ்கட்சி சம்மந்தம் 6, 7 வருஷ காலமாக இருந்து வருகிறது. அதோடு ஜஸ்டிஸ் கட்சி காங்கிரசைவிட மோசமானது என்று எனக்கு எந்தத் துறையிலும் தோன்றவில்லை. காங்கிரஸ் ஜாதி ஆதிக்கம் வேண்டுமென்கிறது. ஜஸ்டிஸ் பண ஆதிக்கம் வேண்டுமென்கிறது. காங்கிரஸ் தலைவர்களுக்கு எப்படித் தங்கள் பூணூலைக் கழட்டி எறிய முடியவில்லையோ அப்படித்தான் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கும் பணத்தை வீசி எறியவோ பணம் சம்பாதிப்பதை தியாகம் செய்யவோ முடியவில்லை. நான் என்னைப் பொருத்த வரை பணக்கொடுமையைவிட, பூணூல் கொடுமையே பழமையானது, மோசமானது மென எண்ணுகிறேன்.

மற்றபலவிஷயங்களில் தோழர் சிங்காரவேலு அவர்கள் அபிப்பிராயந்தான் அநேகமாக நானும் கொள்ளுகிறேன் தீர்மானங்களின் மூலம் ஜஸ்டிஸ் கட்சியாரின் மனப்பான்மை வெளியாகட்டும் என்பதும் ஒரு ஆசையாகும்.

பொப்பிலி ராஜா பெரிய பணக்காரர், தோழர் ஷண்முகம் பெரிய பதவிக்காரர். இருவரும் இன்னமும் பணமும், பதவியும் பெற ஆசைப்படலாம் என்றே முடிவு செய்துகொள்ளுவோம். ஏனெனில் அவர்கள் இருவரும் துறவிகள் அல்ல. பணமும், பதவியும் ஆசைப்படுவது இன்றைய உலக வாழ்க்கை முறையில் பாதகமான காரியமும் அல்ல ஆனால் இவர்கள் காங்கிரஸ் தலைவர்கள சத்தியவாதிகள்' சத்தியாக்கிரகிகள், அஹிம்சை வாதிகள் என்பவர்களைவிட மோசக்காரர்களா? சூட்சிக்காரர்களா? ஏமாற்றக்காரர்களா? என்பதை யோசித்துப் பார்க்கும்படி பிரார்த்திக்கிறேன்.

எனது பிரேரேபணைகள ஜஸ்டிஸ் கட்சி வேலைத்திட்டத்திற்கே ஒழிய சுயமரியாதைக்கட்சி வேலைத் திட்டத்திற்கல்ல. இக் கொள்கைகளை ஜஸ்டிஸ் கட்சி ஒப்புக்கொள்ளா விட்டால் நமக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை.

இதை அவர்கள் ஒப்புக்கொண்டால் மேலால் நடக்கவேண்டிய விஷயங்களைப்பற்றி நாம் எல்லோரும் யோசிப்போம். இதனால் சுயமரியாதை இயக்கத்திற்கு வகுத்த திட்டங்கள் பாதிக்கப்பட்டு விடாது.

சுயமரியாதை இயக்கத்திட்டத்தில் கண்டபடியே தான இத்திட்டத்திலும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு என்று எழுதி இருப்பதுடன் நமக்கு அதிகாரம் இல்லாத விஷயங்களில் கிளர்ச்சி செய்து அதிகாரம் பெறுவது என்றும் குறிப்பிட்டிருக்கிறதே ஒழிய வேறில்லை. எந்த இயக்கத்தின் மூலம் எந்தத்திட்டம் வகுக்கப்பட்டாலும் இன்று இந்த முறையில்தான் வகுக்கக்கூடும்.

ஈ. வெ. ரா.

---

(8ம் பக்கத்தொடர்ச்சி)

னதாகவே டாக்டர் வரதராஜுலு ஜெயிலுக்குச் சென்று நீண்டகாலம் சிறை தண்டனை அனுபவித்திருக்கிறார். அவர் ஜெயிலுக்குப்போன போது "ஏ" வகுப்பு வசதிகளெதுவும் கிடைப்பாது அவர் தேசத்திற்காக உண்மையில் கஷ்டப்பட்டு தியாகம் செய்தார் காங்கிரஸ்காரர்களில் மிகப்பெரியவராயுள்ளவருக்கு எவ்வளவு தேசாபிமானமும் தேசபக்தியுமிருக்கிறதோ அதற்கு டாக்டர் வரதராஜுலுவின் தேசபக்தியும், தேசாபிமானமும் எப்பொழுதும், எவ்விதத்திலும் குறைந்ததல்ல. அப்படியிருக்கும் காங்கிரஸ் காரர்கள் டாக்டர் வரதராஜுலுவையும் கூட எதிர்க்கிறார்கள் காங்கிரஸ் எவ்வளவு பெரிய ஸ்தாபனமாகவும் இருக்கட்டும். காங்கிரஸின் இவ்வித மனப்பான்மையை நீங்கள் சகித்துக்கொண்டிருக்கப் போகிறீர்களா?

தேசிய மென்பது காங்கிரஸ் காரர்களின் ஏகபோக உரிமையா? இதை யேதேசம் இப்பொழுது நிர்ணயிக்க வேண்டியதாகும். காங்கிரஸ் கமிட்டியிடம் 4 அணு டிக்கெட்டை வாங்கித்தான் ஒருவர் தேசாபிமானியாக முடியுமா? தேசாபிமான மென்பது அவ்வளவு கிள்ளுக்கீறை யல்ல; அவ்வளவு அற்பத்தனமானது மன்று. காங்கிரசுக்கு வெளியிலும் தேசபக்தியும் தேசிய உணர்ச்சியுமிருப்பவர்களுள்ளாரா இல்லையா என்பதை வாக்காளராகிய நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டியது. உங்கள் தீர்ப்பை சரியானபடி அளிப்பீர்களென்று நான் நம்புகிறேன்."

(பலத்த கரகோஷம்)

பின்னர் சிலர் கேட்ட கேள்விகளுக்கு சர். ஷண்முகம் தக்க பதிலளித்தார்.

டாக்டர். பி. வரதராஜுலு அவர்கள் பேசினார்.

முடிவில் தோழர் கந்தசாமி பிள்ளைவந்தனோபசாரம் கூறகூட்டம் முடிந்தது இரு தலைவர்களின் பிரசங்கமும் நகர ஜனங்களின் மனதைக் கவர்ந்து விட்டதென்றே கூற வேண்டும். இவ்விஷயமாக இதுவரை சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்த பலரும் ஒரு திடமான அபிப்பிராயம் கொண்டு விட்டார்கள். இரு தலைவர்களும் நிலமை முற்றிலும் மாற்றி விட்டார்கள்.

## பர்மாவில் சுயமரியாதைத் திருமணம்.

பர்மா நகரத்தார்கள் (96 ஊர் நகரத்தார்கள்) முன்னிலையில் பசுமந்தானில் உள்ள நகரத்தார் மடத்தில் செட்டியார் சங்கத்தலைவர் சா. அ. சு. இராமன் செட்டியாரவர்கள் தலைமையில் 10-9-34-ந்தேதி தோழர் செல்லப்பா இராமசாமி அவர்களுக்கும், தோழர் விசாலாக்ஷி அவர்களுக்கும் சீர்திருத்தக் கலப்புமணம் நடைபெற்றது. பல ஜாதிக்காரர்களும் வந்து இக்கலப்புமணத்தை நடத்தி வைத்தார்கள். என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## ஜனனம்.

பட்டுக்கோட்டை தோழர் டி. வி, டேவிஸ் அவர்களின் வாழ்க்கைத் துணைவியாருக்கு 21-9-34ந்தேதிமதுரையில் ஓர் ஆண் மகவுபிறந்திருக்கிறது. தாயும், குழந்தையும் சுகமாயிருக்கிறார்கள்.

## மணமகன் தேவை.

சுமார் 22-வயதுள்ளவரும்வேளாளவருணத்தைச்சேர்ந்தவரும், விதவையும், திட காத்திரமுடையவருமான பெண்ணுக்கு சுமார் மாதமொன்றுக்கு 25-ரூபாய்க்குக்குறையாதவருமானமுடையவரும், நல்லகுணமுடையவருமான ஓர் மணமகன் தேவை. கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

தோழர் சுப்பையா,
பல பத்திரிகைகள் ஏஜண்டு,
கோட்டுப்பாளையம் புரையார்.


## பாரிஸ் கோல்டு நகைகள்.

' இது அசல் சவரன் பொன் நகைகளைப்போலவே நெடுநாள் கருக்காமல் இருப்பதுடன் மிகவும் வேலைப்பாடு உள்ளது. இதுவேதான் நீங்கள் ஜதை 3ரூ-4ரூ கொடுத்து வாங்கியது. இந்த நகைகளை நாங்களே தயார்செய்வதால் மிக குறைந்த விலைக்குக் கொடுக்கிறோம். வளையல் ஜதை 1க்கு 2-4-0 கொலுசு ஜதை 1க்கு 3-8-0 செயின் அட்டிகை 1க்கு 3-8-0 இரட்டைவடம் கோசர் ஜான் செயின் 8-8-0 முத்து பவளம் கட்டும் கம்பி தோலா 1க்கு 1-4-0 சர்ட் பட்டன்ஸ் டஜன் 1க்கு 1-0-0. 5ரூ. மேல்பட்ட ஆர்டருக்கு தபால் சார்ஜ் இனாம். 10-20 ரூபாய் ஆர்டர்களுக்கு முறையே 1அணா 2அணா வீதம் கமிஷன் கொடுக்கப்படும். மொத்த வியாபாரிகள் தேவை.

ஆர். கே. சாமி & சன்ஸ்,
63 தெலுங்குவீதி, கோயமுத்தூர்.

# ருஷியாவுக்கு பலத்த எதிர்ப்பு.

சர்வதேச சங்கத்தின் இன்றைய கூட்டத்தில், ருஷியாவைச் சேர்த்துக் கொள்வதை மிஸ்டர் மோட்டா (ஸ்விட்ஸர்லாந்து) பலமாகத் தாக்கிப் பேசினார். அவர் பேசியதாவது:—

மதம், கலை, சமூகம், அரசியல், பொருளாதாரம் முதலிய ஒவ்வொரு துறையிலும் ருஷியா நமது முறைகளுக்கு விரோதமான முறைகளைப் பின்பற்றுகிறது. ஆகவே நமது வாழ்க்கைக்கே அதனால் உலைவைக்கக்கூடும். மத உணர்ச்சியை ருஷியா எதிர்க்கிறது. சொந்த நபர்களுக்குள்ள சொத்துரிமையை ரத்து செய்திருக்கிறது. பலவந்தமாக வேலை வாங்கும் முறையில் பண்ணைத் தொழிலை நடத்துகிறது. உலகத்தில் புரட்சியை உண்டாக்குவதே அதன் லட்சியமாகும். சர்வதேச சங்கத்தை நிந்தித்துக் கொண்டிருந்த ருஷியாவின் மனம் திடீரென்று மாறியதற்குக் காரணம் தூரக் கிழ் திசையின் நிலைமையே யாகும் என்று பேசினார். என்றாலும் மற்ற தேசங்கள் ருஷியாவைச் சேர்த்துக்கொள்ள வாதாடின. முடிவாக இன்று காலை சர்வதேச சங்கம் ருஷியாவை அழைப்பது சம்பந்தமாக வழக்கத்தை அநுசரித்து ஓர் தீர்மானத்தை நிறைவேற்றக் கூட்டம் கூடியது.

(பிரிட்டிஷ் ஆகாயத்தந்தி)
(தினகரன்)

## ஜப்பானியப்போட்டி.

### இந்தியாவில் மற்றொரு எஃகு தொழிற்சாலை ஸ்தாபனம்.

ஜம்ஷட்பூர் டாடா தொழிற்சாலையில் சம்பந்தமுள்ள இந்திய முதலாளி ஒருவர், ஜப்பானிய நிபுணர்களது உதவியைக்கொண்டு கழுவடை இரும்பிலிருந்து எஃகை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறார். இதற்கு ஜப்பானியர் சுமார் ஒரு கோடி ரூபாய் வரை முதல் போடுவார்களெனச் சொல்லப்படுகிறது. இது அடுத்த வருஷ ஆரம்பத்தில் வேலையைத் துவக்கும்.

# "ஆத்மா இல்லை"

## மேனாட்டின் நாஸ்திகக் கூட்டம்.

மேனாட்டுக் கிறிஸ்தவர்களிலேயே ஒரு புதிய கூட்டத்தார் தோன்றியிருக்கின்றனர். மனிதருடைய ஆத்மா என்றொரு சக்தி இல்லை என்பதும், அது ஒரு 'ஆவி'என்பதும், மனிதன் இறந்ததும் 'அந்த ஆவி' வெளிப்பட்டு அழிந்து போகிறதென்பதும், மனிதன் மண்ணால் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதால் மண்ணுக்கு அழிவு நிச்சயமென்பதும் அவர்களின் வாதம்.

இன்னும், இன்னுமொரு மறுலோக மென்பதோ, சுவர்க்கமென்பதோ, நன்மை தீமையின் பலாபலன் என்பதோ கிடையாதென்றும் வாதிக்கின்றனர். மனிதர் இவ்வுலகங்களில் சுகமாய் வாழ்வதுதான் சுவர்க்கம்; வறுமையும் கஷ்டமும் அடைந்துழல்வதுதான் நரகம். அவரவர் நன்மை தீமைக்கு இவ்வுலகிலேயே, செல்வபோகமாவது, வறுமைக்கஷ்டமாவது கைகண்ட பலனைக் கிடைத்துவிடுகிறதென்பதும் அவர்களுடைய கொள்கைகள்.

இப்படிப்பட்ட புதிய நாஸ்திகக் கூட்டத்தைப் பின்பற்றி நடப்போர் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஏராளமான பேர்களிருந்து வருகின்றனர். அக்கூட்டத்தின் தலைவர்கள் கணித்ததின் பிரகாரம் இதுவரை சுமார் 4,000 பேர்கள் இந்த நாஸ்திகக் கூட்டத்தில் அங்கத்தினராய் சேர்ந்திருக்கிறார்களாம்.

## ஒவ்வொருவருக்கும் ஒருமோட்டார்

ஜப்பானியர்கள் குறைந்த விலையில் இலேசான மோட்டார்களைச் செய்து அந்நிய நாடுகளில் தள்ளுகிறார்கள். அங்கு இவை அதிகமாக விலையாகின்றன.

அந்நிய நாடுகளில் இவைகளின் தேவை அதிக மாயிருப்பதால் மோட்டார்கள், அதிகமாகச் செய்யப்படுகின்றன. விலை சரசமாயிருக்கிறது. 1935ம் வருஷத்தில்5000 மோட்டார்கள் செய்யப்படுமாம். மணிக்கு 45 மைல் செல்லும்.

குறைந்த செலவில் மணிக்கு 45 மைல் செல்லும் சக்தி வாய்ந்தது. மோட்டாரின் அமைப்புகள் மிகவும் அழகாகவும், உறுதியாகவும் இருக்கிறது. ஆனால் மிக இலேசாகவும் உள்ளது. ஓட்டுவதற்கு மிகவும் எளிதானது.

# சுயமரியாதைத் திருமணங்கள்.

### சென்னை

சென்னை எழும்பூர் சாமிபிள்ளைத் தெருவில் 12-9-34ந்தேதி புதன்கிழமையன்று தோழர்கள் பிரான்ஸிஸ் அவர்களுக்கும், முத்துலெட்சுமி அம்மாள் அவர்களுக்கும் காதல் கலப்பு மண ஒப்பந்தம் நடைபெற்றது. மணமகன் ரோமன் கத்தோலிக்க வகுப்பைச் சேர்ந்தவரென்பதும், மணமகள் இந்து மதத்தைச் சேர்ந்தவரென்பதும்குறிப்பிடத் தக்கதாகும். ஷை திருமணத்திற்கு தோழர் மேரிசௌந்தரியம்மாள் அவர்கள் தலைமை வகித்தார்கள். அது சமயம் தோழர்கள் குஞ்சிதம், குருசாமி, வி. பி. எஸ். மணியர், அய்யாக்கண்ணு முதலியவர்கள் "சுயமரியாதைத் திருமணம்" என்பதுபற்றி விரிவான சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

### சென்னை வியாசர் பாடியில் சு. ம. திருமணம்.

சென்னை வியாசர் பாடியில் 23-9-34ந்தேதி ஞாயிற்றுக்கிழமையன்று காலை 9 மணிக்கு தோழர்கள் வீரராகவேலுக்கும் ராஜாம்பாளுக்கும் சுயமரியாதைத் திருமண ஒப்பந்த நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சுமார் 1000 பேர் வரை கூடியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஷை திருமணத்திற்கு தோழர் குஞ்சிதம் பி. ஏ. எல். டி. அவர்கள் தலைமை வகித்தார்கள். அது சமயம் தோழர்கள் ஆனந்த போதினி ஆசிரியர், வி. ராமசாமி, டாக்டர் மாசிலாமணி முதலியார், எஸ். குருசாமி, திண்டிவனம் குலசேகரம், நாராயணியம்மாள், அய்யாக்கண்ணு முதலியவர்கள் "சுயமரியாதைத்திருமணம்" என்பது பற்றியும், "மூடப்பழக்கங்கள்" என்பதுபற்றியும் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர்கள். இந்தத் திருமணம் வியாசர் பாடிக்கு முதல் தடவையாகையால் பலமான எதிர்ப்பு இருந்த காரணத்தால் பெருந்திரளான மக்கள் கூடிவிட்டனர். திருமண முடிவில் சமபந்தி போஜனம் நடந்தது. வைதிகர்கள் உள்பட பிரசங்கங்களைக் கேட்டு மனந்திரும்பியது குறிப்பிடத்தக்கதாகும்.

திருமணத்தின் போது வியாசர் பாடி சமதர்ம இளைஞர் சங்கத்தாரால் மணமக்களுக்கு ஒரு ஒப்பந்த வாழ்த்துப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. (ஒரு நிருபர்)

## உலகத்தார் மீது கடவுளின் கோபம்.

நிகழும் மஹாளயத்தன்று கல்கத்தாவில் விசுவஜித் யாகம் ஒன்று நடத்த வேத சாஸ்திர வித்பன்னரான சில பிரபல பண்டிதர்களும் சந்நியாசிகளும் ஏற்பாடு செய்து வருகிறார்கள். பகவானுடைய கோபத்துக்கு உலகத்தார் இப்போது மிகவும் ஆளாயிருக்கிறார்கள். பூகம்பம், வெள்ளம், பஞ்சம், வியாதி முதலியவற்றால் மற்ற உயிர்களுக்கும் மகத்தான சேதம் ஏற்பட்டிருக்கிறது. தெய்வத்தின் கோபத்தைத் தணித்து மனித வர்க்கம் சுபிட்சமாகவும் சந்தோஷமாகவும் இருக்க இந்த யக்ஞம் நடத்தப்படுகிறது என்று மேற்படி பண்டிதர்கள் கூறுகிறார்கள். 2 வார காலம் இந்த யக்ஞம் நடைபெறும். மானஸரோவரத்திலிருந்து ஒரு ரிஷி இந்த யக்ஞத்திற்கென்று வருவார்.

### ஈரோடு

#### ஆதிதிராவிட நலவுரிமைச் சங்கம்

ஷை சங்கத்தின் அங்கத்தினர்களின் கூட்டம் ஒன்று செப்டம்பர் மாதம் 16ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு சென்னை தோழர் சி. ஆர். தீனதயாளன் அவர்களின் தலைமையின் கீழ் ஷை சங்கக் கட்டிடத்தில் கூடிற்று.

தோழர் ஏ. ஷண்முகம் அவர்கள் சமதர்மக் கீதங்கள் பாடினர். பின்பு சென்ற வார நடவடிக்கைகளைக் காரியதரிசியால் வாசிக்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. தலைவர் தன் முன்னுரையில் தீண்டப்படாதவர்களாய்க் கருதப்படும் தாழ்த்தப்பட்ட ஜனங்களுக்கு ஜாதி இந்துக்களால் செய்யப்படும் கொடுமைகளைப் பற்றிப் பேசினர்.

பின்னர் தோழர்கள் எஸ். காளிதாஸ், டி. ஏ. செல்வ நாயகம், டி. ஏ. சுந்தரம் ஆகியவர்கள் பேசினர்கள். தலைவர் தன் பின்னுரை கூறிய பின் சில முக்கிய தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன. இரவு 8-30 மணிக்கு காரியதரிசியால் வந்தனம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

## புதிய பத்திரிகை.

### "சிறுவர் அறிவுக்கதிர்" சீக்கிரம் வெளிவரும்.

பாடசாலைச் சிறுவர் சிறுமிகளுக்கு எல்லா வகைகளிலும் அறிவு புகட்டும் புதுமாதிரியான ஓர் மாதாந்தரப் பத்திரிகை.

வருஷ சந்தா உள்ளூர் 8 அணா.
,, வெளியூர் 10 அணா.
தனிப்பிரதி 9 பை.

உடனே சந்தாதாரராகுங்கள்
K. J. வேதமுத்து,
தமிழ்ப்பண்டிதர், L. M. போதனாமுறைப்பாடசாலை ஈரோடு.

# ஆஸ்திகமா — நாஸ்திகமா?

## இதற்கு என்ன பதில்.

(கோலாலம்பூர் தோழர் ஆர். இராமநாதன்)

இந்தியாவில் உள்ள ஒரு கிறிஸ்துமதப்பிரசாரப் பத்திரிகையானது "ஆத்துமாவில்லாத நாஸ்திகரிடத்தில் அறிவை எதிர் பார்ப்பதெங்கனம்" என்னும் மகுடத்தின் கீழ் ஓர் கட்டுரை எழுதி இருக்கிறது. அதற்கு மறுப்பெழுதும் வேலையிலிறங்கி என் அரிய நேரத்தை கொலை செய்ய நான் விரும்பவில்லையாயினும், அது மக்கள் தெள்ளத்தெளிய உணர வேண்டிய பல பிரச்சினைகளை கிளப்பியிருப்பதால், அதற்கு மறுப்பெழுத வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

நான் 8-8-34ல் கோலாலம்பூர் நகர மண்டபத்தில் செய்த பிரசங்கமே நண்பனுடைய ஆத்திரத்திற்குக் காரணமாகும் நண்பனின் வாதத்தின் சாரத்தை மூன்று கூறாகப் பிரிக்கலாம். அவைகள்

1. கடவுள்தான் உலகையும், அதிலுள்ள ஜீவராசிகளையும் படைத்தார்.

2. நாஸ்திகக் கொள்கையின் வளர்ச்சியே உலகத் துன்பத்திற்குக் காரணம்.

3. கடவுள் பயம்தான் உலகத் துன்பம் தீர வழி என்பனவாகும்

இவைகளில் முதலாவது விஷயத்தைக் கவனிப்போம்.

### கடவுள் உண்டா?

முதலாவதாக கடவுள் என்று ஒரு பொருள் உண்டா என்பதை நாம் ஆராய வேண்டும்.

கடவுள் அன்பு வடிவானவரென்றும், கருணைக் கடலென்றும், விருப்பு வெறுப்பற்றவரென்றும், நிர்த்தரமான பொருளென்றும், சர்வ வல்லமை பொருந்தியதென்றும் கூறுகின்றனர் ஆஸ்திகர்கள். கடவுள் உலகை இயக்குவிக்கிறாரென்றும், அவர் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலும் செய்து வருகின்றாரென்றும், அவர் ஆக்கினையால் தான் உலகில் சகலமும் இயங்குகிறதென்றும், "அவனன்றி ஓர் அணுவும் அசையாதென்றும்," "அவர் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாயிருக்கிறாரென்றும்," அவர் தூணிலும், துரும்பிலும், புல்லிலும், பூண்டிலும், காட்டிலும், மலையிலும், நீரிலும், நெருப்பிலும், எங்கும், எப்பொழுதுமிருக்கிறாரென்றும், ஆஸ்திகர்கள் கூறுகின்றனர். மக்களனைவரும் நடமாடுங் கோவிலென்றும் ஆஸ்திகர்கள் கூறுகின்றனர்.

மனிதன் நடமாடுங் கோவிலென்றால், மனிதன் ஆண்டவன் கட்டளைப்படிதான் அனைத்தையும் செய்கிறானென்றால், அவன் ஆண்டவனுடைய கட்டளையால் உலகில் பிறக்கிறானென்றால், அவனை ஆண்டவன் படைக்கிறாரென்றால் அவன் உள்ளத்தில் ஆண்டவன் எப்பொழுதும் கோயில் கொண்டிருக்க வேண்டும். அவர் அப்படி வல்லமையுடையவராயிருந்தால், தனது சக்தியை அனைவருக்கும் தெளிவாகக் காட்டவேண்டும். அப்படிக் காட்டினால் இன்று கடவுள் என்பது சில சுய நலமிகளால், சுயநலம் கருதி கற்பனை செய்யப்பட்ட கற்பனைச் சொல்லாகுமென்கின்ற கூக்குரலுக்கும், நாஸ்திக இயக்கத்திற்கும், எனது கட்டுரைக்கும் அவசியமில்லை. தூணிலும், துரும்பிலுமிருக்கும் கடவுள் மனிதன் உள்ளத்திலும் இருந்துதான் தீர வேண்டும். அப்படி அவர் மனிதன் உள்ளத்தில் கோயில் கொண்ட ஓர் வல்லமை பொருந்திய பொருளாயிருப்பின், அவர் கட்டாயம் இக்கட்டுரை வரைய என்னை தூண்டியிருக்கமாட்டார். அப்படி நான் எழுத நேற்படினும் அவர் என்னை தடை செய்திருப்பார். அதோடு கடவுள் என்பது கற்பனைச் சொல் என்று கூறுவதை அவர் ஒருநாளும் சகித்துக்கொண்டிருக்கமாட்டார். அப்படி நான் எழுதுவதையும், சொல்வதையும் அவர் பார்த்துக்கொண்டு வாளாவிருப்பாரா? கடவுள் உண்டென்றால், அவர் தன் வல்லமையை என் போன்றோர்க்குக் காட்டியிருப்பார்.

கடவுள் அன்பு வடிவானவரென்னும் கூற்றின் உண்மையைச் சிறிது ஆராய்வோம். இன்று உலகிலே கோடிக்கணக்கான மக்கள் உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும், குடியிருக்கக் குச்சின்றியும் கலங்குகின்றனர், மக்கள் பெண்டு பிள்ளைகளுடன் பரிதவிக்கின்றனர். ஓட்டைக் குடிசையுடனும், கிழிந்த பாயுடனும், உடைந்த சட்டிகளுடனும், இராப்பட்டினி—பகல் பட்டினி கிடந்துகொண்டு வாழ்ந்து வாடுகின்றனர் மக்கள். பாட்டாளி மக்கள் துயர் கல்மனதையும் கரையச்செய்யத் தக்கனவாகும். வறுமைப்பேய் நாட்டில் தலைவிரித்தாடுகின்றன. பஞ்சம், பிணி, பசி ஆகியவைகள் மக்களை இம்சிக்கின்றன. உலகிலுள்ள இன்பமனைத்தையும் ஒரு வேலையும் செய்யாத சோம்பேரிக் கூட்டத்தார் அனுபவிக்கின்றனர். முதலாளிகள் ஏழைகள் வேர்வை நீரில் நீந்திக்குளிக்க ஆசைப்படுகின்றனர். ஏழைகள் இரத்தத்தை உறிஞ்சி அவர்கள் கொழுத்து வருகின்றனர். எந்த ஏழைகள் உதவியால் அவர்கள் உயர்ந்தனரோ அவர்களையே நசுக்கி வருகின்றனர். முதலாளிகளின் கொடுமை தாங்கமாட்டாது மக்கள் நிமிடந்தோறும் புற்றீசல் போன்று மடிந்து வருகின்றனர். ஏழைகளின் கஷ்டக்கண்ணீர் நாட்டில் பெருக்கெடுத்தோடுகின்றது. அதைக் கண்டும் பாழும் முதலாளிகள் கொடுமை நீங்கவில்லை. அதோடு மதப்பித்தர்களும் ஒன்று சேர்ந்துகொண்டு மக்களைக் கசக்கிப் பிழிகின்றனர். இத்துன்பங்களை ஒழிக்க கடவுள் என்ன செய்தார்?

கடவுள் அன்பு வடிவானவரென்றும், கருணைக்கடலென்றும் கூறுவதில் சிறிதும் அர்த்தமில்லை உலகிலே மனிதனை மனிதன் நசுக்குகின்றான். தொன்று தொட்டு எளியானை வலியான் வாட்டி வருகின்றான். பண்டைக் காலத்தில், அதாவது கடவுள் உணர்ச்சி நாட்டில் பூரண வளர்ச்சி பெற்றிருந்த காலத்தில், மனிதனை மனிதன் பலியிட்டு வந்தான். இன்று ஆடு, கோழிகள் வெட்டப்படுவதைப் போன்று அக்காலங்களில் மனிதனை மனிதன் பலியிட்டு வந்தான் அதை கருணைக் கடலாகிய கடவுளால் தடுக்க முடியவில்லை. அதோடு ஆடு—கோழி முதலியன இன்றும் வெட்டப்படுகின்றன. எல்லா உயிரிலும் இருக்கக் கூடிய கடவுள், உலகில் நீதியை நிலைநிறுத்துவதற்கு நீதிபதியாக உட்கார்ந்திருக்கும் கடவுள், உலகிலே அன்பையும், அறத்தையும் ஏற்படுத்துவதற்காகக் குந்திக்கொண்டிருக்கும் கடவுள், எங்கும் நிறைந்த கடவுள், ஆட்டின் உள்ளத்திலும், ஆட்டை வெட்டுபவன் உள்ளத்திலும், அதைப்பார்த்துக்கொண்டிருப்போர் உள்ளத்திலும் கோயில்கொண்டிருக்கின்றாரல்லவா? ஆண்டவன் அனைவர் உள்ளத்திலும் கோயில் கொண்டிருக்கிறாரென்றால் கடவுள் இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது ஏனெனில் அவர் கருணைக் கடலல்லவா? ஆனால் இன்றும் அததகைய நிகழ்ச்சிகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால்ஆஸ்திகர் கூறும் கடவுள் அதை இந்த நிமிஷம் வரையில் தடை செய்யவில்லை!

உலகமும், உலகிலுள்ள அனைத்தும் கடவுளால் படைக்கப்பட்டதென்றால், மக்களை இடைவிடாது இம்சித்து வரும் எரிமலை, பூகம்பம், புயல் காற்று முதலியவைகளும் கடவுளால் படைக்கப்பட்டதா? திடீர் திடீரென்று எரிமலைகள் வெடித்து, அதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் இரையாகின்றனர். பூகம்பத்தால் லட்சக்கணக்கான மக்கள் இறக்கின்றனர். இவைகளெல்லாம் கடவுளால் உற்பத்தி செய்யப்பட்டதுதானா? அப்படியாயின் உங்கள் கடவுள் எப்படி கருணைக்கடலாயிருக்க முடியும்?

### கடவுள் உலகைப்படைத்தாரா?

இப்பரந்த உலகையும், அதிலுள்ள ஜீவராசிகளையும் ஆண்டவன் படைத்தாரென்றும், அவர் தான் உலகை இயக்குவிப்பவரென்றும் நன்பன் கூறுகின்றான். உலகமும் அதில்காணும் சகலமும் அநித்ய மென்றும் ஆஸ்திகர்கள் கூறுகின்றனர். இவ்வாதப்படி நாம் விஷயங்களை ஆராய்ந்தால் நமது உள்ளத்தில் பல ஐயங்கள் எழுந்து தான் தீரும்.

உலகம் அநித்யமானதென்றால், உலகம் அடிக்கடி அழிந்து கொண்டும், தோன்றிக்கொண்டு மிருக்க வேண்டும். (கடவுள் நித்யமானதென்றும், அது உருவமற்ற சக்தியென்றும் ஆஸ்திகர்கள் கூறுகின்றனர்.) ஆகவே அழிந்த உலகை கடவுள் மீண்டும் உற்பத்தி செய்திருக்கவேண்டும். அப்படிச் செய்யும் பொழுது கடவுள் பல விஷயங்களைக்குறித்து யோசித்திருக்க வேண்டும். முன்னிருந்த உலகைக் கடவுள் அழித்ததற்குக் காரணம் வேண்டும். ஒன்று அந்த உலகு கடவுளுக்கு வெறுப்பைக் கொடுத்திருக்க வேண்டும்; அல்லது அதில் சில சீர்திருத்தங்கள் செய்ய கடவுள் விரும்பி யிருக்க வேண்டும். கடவுள் உலகை அழித்ததற்கு ஓர் காரணம் வேண்டும். காரணமின்றி உலகில் ஒன்றும் நிகழாது காரியத்திற்குக் காரணம் மிக முக்கியம். எனவே கடவுள் உலகை அழித்ததற்குக் காரணம்வேண்டும்? அந்தக் காரணம் என்ன?

உலகைக் கடவுள் அழித்து மீண்டும் வுற்பத்தி செய்கிறார் என்னும் வாதத்தை நாம் ஆராயின், கடவுள் புது உலகை சிருஷ்டிக்கும் பொழுது, ஒன்று அதில் பல சீர்திருத்தங்கள் செய்திருக்க வேண்டும்—அல்லது—அது முன்னிருந்ததை விட கீழான நிலையிலிருக்க வேண்டும். அதில் பல சீர்திருத்தங்களை கடவுள் செய்தாரென்றால் முன்னர் சர்வவல்லமை யுள்ள கடவுளுக்கு அச்சீர்திருத்தங்களைச் செய்ய ஏன் முடிய வில்லை? முன்னிருந்ததை விட கீழான நிலையில் உலகைப்படைத்தாரென்றால் அது என் அவருக்கு முன்னரே தெரிய வில்லை?

### கடவுளுக்குப் புத்தி யுண்டா?

உலகத்தை அழிக்கவும், மீண்டும் உற்பத்தி செய்யவும் வேண்டுமாயின் கடவுளுக்குப் புத்தி யிருக்கவேண்டும். ஏனெனில் புத்தி யிருந்தால் தான் அவர் விஷயங்களை ஆராய்ந்தறிய முடியும் புத்தி யென்பது அனுபவத்தாலும், காரணத்தாலும், செயலாலும் விருத்தி யடைவது. ஆனால் கடவுள் மாறாததும், உருவமற்றதுமான பொருளென்றால், அதற்கு அவைகளெல்லாம் இருக்க முடியாது. என

வே கடவுளுக்குப் புத்தி கிடையாதென்றும் துணிந்து கூறலாம்.

கடவுள் விஷயங்களைக் காணவோ, புது அறிவு பெறவோ முடியாது. ஏனெனில் காலமாறுபட்டாலும், செயலாலும் தான் அறிவு விசாலமடைகிறது. வாழ்க்கையில் ஏற்படும் பல நிகழ்ச்சிகள் புத்தியை விருத்தி செய்யும். ஆனால் கடவுளுக்கு அந்த வசதி கிடையாது. ஏனெனில் அவருக்கு என்றும் அறிவு விசாலமடையமுடியாது. அவரது அறிவு விசாலமடையத்தக்கது என்றால் ஒரு காலத்தில் அவர் அறிவு மங்கியிருக்க வேண்டும். ஆனால் சர்வ வல்லமையுள்ள கடவுளின் அறிவு எங்ஙனம் மங்கும்? அப்படி மங்கின் அவர் ஆஸ்திகர் கூறும் கடவுளாக எங்ஙனம் இருக்க முடியும்?

பூரண அறிவிருக்க வேண்டுமாயின், அதற்குக்காரணமிருக்கவேண்டும். காரணமென்றால் இறந்த காலம், நிகழ் காலம் ஆகியவைகளைக் கொண்டு விஷயத்தை சிந்தித்தல் என்பதாகும். ஆனால் கடவுளுக்கு இறந்த காலம், நிகழ் காலம், வருங் காலம் ஆகியவைகள் இருக்க முடியாது. ஏனெனில் அவர் என்றும் மாறாத பொருளல்லவா?

ஒரு கல் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அது விஷயத்தை சிந்திக்க முடியாது. ஏனெனில் அதற்கு சிந்தனைசக்தி கிடையாது. சிந்தனைசக்தி யிருக்க வேண்டுமாயின் விஷய உணர்விருக்க வேண்டும். ஆனால் கல்லுக்கு அது கிடையாது. அதேபோன்றுமாறாததும், உருவமற்றதும், காலமாறுபாடில்லாததுமாகிய கடவுளுக்குப்புத்தி யில்லை.

கடவுள் விஷயங்களை யோசிக்கவோ, மறக்கவோ முடியாது. புத்திக்கு உணர்வு அடிப்படை ஆனால் கடவுளுக்கு உணர்வு எங்கிருந்து வந்தது? இன்னொரு சக்தியினுடைய உதவியாலா? கடவுளுக்கும் உணர்ச்சியைக்கொடுக்கத்தக்க இன்னொரு சக்தியிருக்கின்றதா?

### கடவுளுக்கு ஞாபக சக்தி யுண்டா?

கடவுளுக்கு ஞாபக சக்தி கிடையாது. ஞாபக சக்தி வேண்டுமாயின் இறந்த காலம், நிகழ் காலம், வருங் காலம் ஆகியவைகளிருக்க வேண்டும். அம்மூன்று காலத்தின் மாறுபாட்டைக் குறிப்பது. ஆனால் கடவுளுக்கு— மாறாத பொருளுக்கு மாறுபாடிருக்க முடியாது. ஞாபகசக்தி வேண்டுமாயின் அறிவு வேண்டும். விஷயங்களைச் சிந்திக்கும் ஆற்றல் வேண்டும். வாழ்க்கையில் பல சம்பவங்கள் நிகழ வேண்டும். விஷயங்களை அதிகமாக அறிய வேண்டும். ஞாபகசக்திக்கு அறிவு அடிப்படை. ஆனால் அறிவற்ற கடவுளுக்கு ஞாபகசக்தி எங்கிருந்து வரப்போகிறது?

### கடவுள் எண்ணம் எப்படி உண்டாகின்றது?

உலகிலே அனைவரும் நாஸ்திகர்களாகத்தான் பிறக்கின்றனர். மக்கள் உள்ளத்தில் மத உணர்ச்சியோ, கடவுள் உணர்ச்சியோ உண்டாவதில்லை. ஆனால் அவைகள் அவர்களைச் சூழ்ந்துள்ளவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன. மக்கள் பரிசுத்த உள்ளத்தில் அவ்விஷம் ஏற்றப்படுகின்றது. ஒருவன் கடவுள் என்றசொல்லையே உச்சரிக்காத நகரில் பிறந்தானாயின், திட்டமாக அவனுக்குக் கடவுள் நினைவு ஏற்படாது. அவன் நாஸ்திகனாகவே இருப்பான். எனவே மக்கள் தான் கடவுள் உணர்ச்சியை பரப்புகின்றனர்.

இச்சொல் பல காலங்களுக்கு முன் சிலசுயநலமிகளால் சுயநலங்கருதி உற்பத்தி செய்யப்பட்டதாகும். அவர்கள் ஏகபோக உரிமையுடன் உலகில் வாழ நினைத்தனர்; தீவிரமாக வேலை செய்தனர். அவர்களுக்குப் பக்கபலமாக கடவுள் என்னும் சொல்லையும் கற்பனை செய்துகொண்டனர் பாமரமக்கள் உள்ளத்தில் அவ்விஷத்தை புகுத்தினர். அதனால் தான் இன்று அச்சொல் எங்கும் பரவி, அதன் பயனாக பல அநீதிகளும், கொடுமைகளும் நிகழ்ந்து வருகின்றன.

சிறு குழந்தைகள் விஷமம் செய்தால், அதன் தாய்மார்கள் "விஷமம் செய்தால் பூச்சாண்டி பிடித்துக்கொண்டு போய் விடும்" என்று கூறுவது வழக்கம். பூச்சாண்டிஎன்றால் என்ன என்று தெரியாத குழந்தைகள், அப்படி ஒன்று இருக்கிறதா—இல்லையா என்பதை நிர்ணயிக்க முடியாத குழந்தைகள், உடனே பயந்து நடுங்கும். ஆனால்குழந்தைகள் வளர வளர அவைகள் விஷயங்களை அறிய முற்படுகின்றன. அப்பொழுது குழந்தைகளை "பூச்சாண்டி பயத்தால்" அடக்க முடியாது. அப்பொழுது "கடவுள்" என்னும் கற்பனைச் சொல்லையும், அவர்கள் வாதத்திற்கு ஆதாரமாக சில கற்பனைக்கதைகளையும் சொல்லி, அவர்கள் உள்ளத்தில் கடவுளுணர்ச்சி வேரூன்றும்படி செய்து, பின்னர் அவர்களை அடக்கி ஒடுக்குகின்றனர்.

கடவுள் எண்ணம் மக்கள் அறியாமையால் ஏற்பட்டதாகும். இதை எவரும் மறுக்க முடியாது. 'நண்பனே' இவைகளுக்கு நீ என்ன மறுமொழி கூறப்போகின்றாய்.

(தொடரும்)

## மதிப்புரைகள்.

### மனித வுற்பவம்.

சிறந்த விஞ்ஞான விற்பன்னரும், தீவிர நாஸ்திகவாதத்தலைவரும், சமதர்மவீரருமாகிய சென்னை தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ; பி. எல். அவர்களாலியற்றப்பெற்ற "மனித வுற்பவம்" என்னும் அரிய நூல் நமது பார்வைக்குக்கிடைக்கப்பெற்றோம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களைப் பொதுவாகத்தமிழுலகிலும், சிறப்பாக விஞ்ஞானவுலகிலும், சமதர்ம உலகிலும் அறியாதாரிலரென்றே கூறலாம்.

அவரது விஞ்ஞான விற்பன்ன நூலாராய்ச்சி அனுபவ முதிர்ச்சியைக்கொண்டு பிரபஞ்சஜீவனுடைய தோற்றம் எவ்வாறுண்டாயதெனத் தக்க உதாரணங்களுடனும் அவற்றைக்காட்டும் படங்களுடனும் விளக்கிக்காட்டியுள்ளார். பிரபஞ்சவுற்பத்தியும் அதில் முதல் முதலாக உற்பத்தியான ஒற்றைப்பைக்கிருமி முதல் எல்லா ஜீவராசிகளுண்டான விதமும் அதாவது அக்கிருமியிலிருந்து நாளடைவில் புழு, பூச்சி, மீன், தவளை, பல்லி, ஓணான், பறப்பன நடப்பன முதலிய ஜீவராசிகள் எவ்வாறு தோன்றிற்றென்பதையும், அவற்றுள் ஒன்றிலிருந்து மற்றொன்று உண்டானவிதமும் உதாரணமாக உருவம், தன்மை, நடத்தை முதலிய ஒற்றுமைகளால் குரங்கிலிருந்தே மனிதத்தோற்றம் உண்டாயிருக்கிறது. அதாவது (Man is a developet Ape) "மனிதன், அபிவிருத்தி அடைந்த குரங்கு" தான் என்பதையும் தக்க நிபுணர்களின் ஆதாரங்களுடன் தெளிவுபடுத்தியுள்ளார்.

பிரபஞ்ச ஜீவராசிகளின் உற்பத்தியைப்பற்றிப் பல்வேறு மதங்களும், பல்வேறு விதமாகக் கடவுளையும் கருமத்தையும் சம்மந்தப்படுத்தி கூறியிருப்பது கண்மூடித்தனமானதும் பாட்டி கதைகள் போன்றதும் என்றும், ஜீவ உற்பத்திக்கும் கடவுளுக்கும் எவ்வித சம்மந்தமும் இருக்க நியாயமில்லை என்றும் கடவுளென்ற வார்த்தையே மனிதனாலுண்டாக்கப்பட்டதன்றி அவ் வார்த்தைக்குப்பொருளே கிடையாதென்றும், அதுபோலவே வேதங்கள் புராணங்கள் ஆகமங்கள் என்பவைகளும் ஒரு உத்தேசமாகச் சிருஷ்டிக்கப்பட்டவைகளே ஒழிய வேறல்லவென்றும் ஆதலால் "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப் பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு". என்றகொப்பப் பகுத்தறிவைக்கொண்டு ஆராய்ந்து உண்மையென்று பட்டதைச்சொண்டு படாததைதவாயினும் அதனை உதறித் தள்ளிவிட்டு எல்லா மக்களும் ஏக சகோதரர்களென்கின்ற சமதர்ம பாவனையில் நாட்டங்கொண்டுழைக்க வேண்டும், இதுவே நீதியும், நியாயமும், விஞ்ஞான முடிவுமாமென்றும் தெள்ளத்தெளியப் பாமர மக்களும் எளிதில் உணருமாறு விவரித்துக் காட்டியிருக்கின்றார்.

பலதிறப்பட்ட விஞ்ஞான நூல்களைப் பல ஆண்டுகள் பயின்று அதனாலும் அடைய முடியாத ஆக்கத்தை (விஞ்ஞானப் பேற்றினை) இம் "மனிதவுற்பவம்" என்னும் நூலொன்றினைக்கற்றாய்தலின் கண்ணே பெறலாமென்பது எமதுதுணிபு.

ஆகலின் நம்தமிழ்மக்கள்தாம் அரிதிற்பெற்ற இந் நூலை ஆராய்ந்து கடவுள், மதம், வேதம் புராணம்ஜாதிஎன்பவைகளின் பொய் (கற்பனை)க் கூற்றுகளை யுணர்ந்து உண்மை (இயற்கை) வழி கண்டுய்யுமாறு விரும்புகின்றோம். இதன் விலை அணா 8

விலாசம்:—

சமதர்ம பிரசுராலயம்
22, சவுத் பீச், திருவல்லிக்கேணி
சென்னை

குடிஅரசு புத்தகாலயம்.
ஈரோடு

### கதாரதம்.

"ஆசிரியர்" தோழர்தேவேந்திரனவர்களால் இயற்றப்பெற்று சென்னை ஜம்பு நாதன் புத்தகசாலையாரால் வெளியிடப்பட்ட "கதாரதம்" என்னும் ஓர் நவீனநாவல் புத்தகம் நமது பார்வைக்கு கிடைத்தது.

ஆபாச ஆடம்பரப் படுகுழிகளை இளைஞர்க்கு வழிகாட்டிக் கெடுக்கும் பிற நாவல்களைப் போலல்லாது மக்களின் பாமரத்தன்மைக்கும், மூடநம்பிக்கைக்கும், இழி தன்மைக்கும், வறுமைக்கும் காரணமாயுள்ள ஜாதி, மதம், கடவுள், வேதம், புராணம், தீண்டாமை, பெண்ணடிமை, புரோகிதம், மதுபானம், முதலாளி—தொழிலாளி, பணக்காரன்—ஏழை, எஜமான்—அடிமை, அரசன்—குடிகள் என்பனவற்றின் கொடுமைத்தன்மைகளை விளக்கி மக்களின் கண்மூடித்தனத்தை யொழித்துப்பகுத்தறிவு பெற்றுமுன்னேறச்செய்யும் நன்னோக்கத்துடனேயே யாக்கப்பெற்றுள்ளது. தமிழ் மக்கள் இதனை ஆதரிப்பார்களாக.

விலாசம்:—

ஜம்புநாதன் புத்தகசாலை,
14, பள்ளியப்பன் தெரு,
சாவுகார்பேட்டை மதராஸ்.

(4ம பக்கத் தொடர்ச்சி)

கள் எல்லோருடைய வெண்மையான ஆடைகளிலும் பெரிய பெரிய சிலுவைகுறிகள் போட்டார். அக்கரியினால் அடையாள மிட்டதற்காக ஜனங்கள் அதிகப்படியான காணிக்கையும் செலுத்தினர்கள். அடையாள மிடுவதினால் தேயும்கரி மறுபடியும் வளர்ந்து விடும் என்று அவர் கூறினர்.

இறகைத்திருடி கரித்துண்டைப் போட்ட வாலிபர்கள் பிரசங்கத்தைக்கேட்டு விழுந்து விழுந்து சிரித்தனர். பிரசங்கம் முடிந்த வுடன் அவர்கள் இருவரும் உபதேசியாரிடம் சென்று அவரிடம் திருடிய இளியின் இறகையும் திருப்பிக்கொடுத்து "இக்கரித்துண்டுகளை உபயோகப்படுத்தியது போலவே இக்கிளியின் இறகையும் உபயோகப்படுத்தி பணம் சம்பாதியுங்கள்" என்று சொல்லி விட்டுப் போனார்கள். வெங்காய உபதேசியாரும் ஜனங்கள் எல்லோரையும் ஏமாற்றியதை நினைத்துத்தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டே சென்றார்.

## "மனித உற்பவ விளம்பரம்"

"மனித உற்பவம்" என்ற நூல் எழுதி ஒரு வருஷத்திற்கு மேலாயினும், அதனை அச்சிட இவ்வளவு காலம் பிடித்ததற்கு, மிக்க விசனிக்கின்றோம். இதற்குப் பல காரணங்கள் உண்டு. முக்கியமாக, நானே எழுதவும், நானே அச்சுக்கு அனுப்பவும், புரூப்களை திருத்தவும், மற்ற காரியங்களை நானே செய்யவும் வேண்டி இருந்ததால், இவ்வளவு தாமதம்ஆயிற்று, எனக்கும், தேக சௌக்கியம் குறைந்து வருகின்றது. இந்த நூலைப் பற்றி வாசகர்கள் ஒன்று தெரிந்து கொள்ளவேண்டும். அதாவது, இந்த நூல் மிக சுருக்கமாக எழுத வேண்டி நேரிட்டது. இந்த நூலிலுள்ள விஷயங்களை, நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் இன்னுஞ் சில நூல்களின் விஷயங்களை முன்னதாகவே தெரிந்து இருக்கவேண்டும். அவையாவன, உயிர் நூல், பூசர்ப நூல் இவைகளே. இந் நூல்கள், எழுததுப் பிரதிகளில் இருக்கின்றன. அவைகள் பிரசுரிக்கப்படுமென்று கோருகின்றேன். மனித உற்பவத்தை வாசிப்போர், சிரத்தையுடன் வாசிக்க வேண்டும். இந் நூலில் கண்டுள்ள விஷயங்களை, நமது தேச மக்கள், நன்குணர்வார்களாயின், மதங்களிலுள்ள மூடபக்தி ஒழியுமென்பதற்குத் தடையில்லை. மதங்கள், மக்கள் மனதில் வேரூன்றி இருப்பதற்கு முதல் காரணம் என்னவெனில், மனிதனுடைய உண்மை வரலாற்றைத்தெரிந்துகொள்ளாமையாலென அறிதல் வேண்டும். மனிதன், மற்ற பல கோடி உயிர்களைப்போல், முற்கால பிராணிகளிலிருந்து மாறி வந்தவன் என்ற உண்மையைத் தெரிந்துகொண்டால், கடவுள்,ஆன்மா,மோட்சம், நரகம், பேய், பிசாசு முதலியகற்பனை சொற்கள் மக்கள் மனத்தினின்று பறந்தோடிப்போகும் என்பதற்குச் சந்தேகமில்லை. மனிதனைப் போன்ற கோடான கோடி உயிர்களுக்கு, கடவுளும், மோட்ச நரக கற்பனைகளும், வேண்டாமலிருக்க, அவைப்போல் மாறி வந்த இவனுக்கு, இந்த கற்பனை சொற்கள் ஏன் வேண்டும்? (Man is a Developed Ape) அதாவது, மனிதன், அபிவிருத்தி அடைந்த குரங்கென்று உலகம் என்றைக்குத் தெரிந்து கொள்கின்றதோ, அன்றைக்கே, இவ்வுலகைப் பிடித்தாட்டும், மதங்களும், ஜாதி பேதங்களும், மூடப்பழக்க ஒழுக்கங்களும், ஒழிந்துவிடும். இந்த உண்மையை மக்கள் தெரிந்துகொள்ள விடாமல், பலவித கட்டுக் கதைகளையும், தந்திர உபாயங்களையும், குதர்க்கங்களையும் கற்பித்துக்கொண்டு, உண்மை இன்னதென்று தெரிய வொட்டாமல், நமது முன்னோரையும், நம்மையும், நமது சந்ததியாரையும் பகுத்தறிவை உபயோகிக்க முடியாமலே அரசுகளும், அவர்களுக்கு அநுகூலமாயுள்ள, மதஸ்தர்களும் செய்து வருகின்றனர். இனி இந்த மாய்கை மறைந்தோடவும், நமது பரம்பரை உண்மையை எளிதில் தெரிந்துகொள்ளவும் இந்த ஞானத்தால் கற்பனை தெய்வங்களை விரட்டியோட்டவும், இந்த சிறு புத்தகத்தை நமது நாட்டு மக்களுக்கு உபயோகமாகும்படி இயற்றியுள்ளோம். இதில் கூறியுள்ள சாட்சியங்கள், கடந்த 70 வருஷமாக ஆராய்ச்சி செய்து வந்த விஷயங்களிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன—மனித உற்பவ விஷயம், நமக்கு, 1886ம் வருஷம் தெரிய வந்தது. அதுமுதல், பிரசுரமாகிவரும் அநந்த புத்தகங்களின் சாரத்தைப் பிழிந்து, இந்த சிறு புத்தகத்தில் புகுத்தியுள்ளோம், புராணங்களையும், விகடக் கதைகளையும் படிப்பதைப்போல் படித்தெறியாமல், மனதைச் செலுத்தி, சிரத்தையுடன் தெரிந்துகொள்ளுமாறு வாசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அச்சிட்ட காப்பிகள் 500 தான். ரிஜிஸ்டர் செய்துள்ளவைகள் சுமார் 250 இருக்கும், மிகுதியும் விலையான வுடன், "வான நூலை"ப்பிரசுரிக்க எத்தனிக்கப்படும். சிலர் முன் பணம் அனுப்பியுள்ளார். அவர்கள் வேண்டுகோள்படி, மற்ற புத்தகங்களை அனுப்பி இருக்கின்றோம் ஏதாகிலும் மிகுதி நம்மிடமிருந்தால், அதனைத்தெரிவித்தால், அதனை அனுப்பி விடுகின்றோம். ஆனால், இன்று முதல் வி. பி. யில் அனுப்பப்படும் காப்பிகளை வாங்கிக்கொள்ளாமல் திருப்ப வேண்டாம். புத்தகத்தில் அரிய படங்கள் 14 அடங்கியுள்ளன. 7 பாரங்கள் கொண்டது. இதன் விலை அணு எட்டு.

சமதர்ம பிரசுர ஆலயம்
22, சவுத் பீச் திருவல்லிக்கேணி
சென்னை

---


## ஏஜண்டு தேவை.

சென்னையில் நமது "பகுத்தறிவு"வாரப்பத்திரிகை விற்பனை செய்வதற்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்
"பகுத்தறிவு" ஈரோடு.

---

## பலையாளம் சில்க்.

2½-வீதி. 5-கீளம் பட்டு 1-க்கு ரூ. 1-6
ஷை கம்பிக்கரை டஜன் 1-க்கு "14-0
ஷை 4½-கீளம் டஜன் 1-க்கு "10-0
3-வீதி 8-கீளம் வேஷ்டி1-க்கு " 3-8

S. K. R. வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவிதாங்கூர்.

---

## சமதர்மக் கீதங்கள்.

இயற்றியது.
தோழர் ப. ஜீவானந்தம்
விலை பை. 6.

கிடைக்குமிடங்கள்:—
குடிஅரசு பதிப்பகம்
ஈரோடு.
சமதர்மக் காரியாலயம்.
ஜோலார்பேட்டை.

## பெண்ணுரிமைக் கீதங்கள்.

தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் கடலூர்சிறையில் இயற்றியது.
விலை அணு 0—1—0.

கிடைக்குமிடங்கள்:—
குடி அரசு பதிப்பகம்,
ஈரோடு.
R. கிஸன்,
கோவை.

---

## நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை.

(ஒரு நவீன நாடகம்.)
ஆக்கியோன்:
தோழர் சி எ. அய்யாமுத்து அவர்கள்.
இதன் விலை அணு 8.
முன்பணம் அனுப்பவும். வி. பி. இல்லை.
தபாற் செலவு இனம்.
விலாசம்:— மானேஜர்,
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

---

கொடிய கர்ம வியாதிகளை நிவர்த்தித்துக்கொள்ள மன்னார்குடி

## யானைக்கால் குஷ்டம்

ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்யுங்கள். ஏழைக்கு தர்ம வைத்தியம்.
யானைக்கால் குஷ்டத்திற்கு 40 வேளைக்கு தாம்பிர மெழுகு ரூ. 10
பல்வியாதிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ண டெண்டல்பாம் பற்பொடி 2½ அணு.

---

## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

—0—

நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ. பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

### "தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளி வருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் ,, 2—0—0
3 மாதம் ,, 1—4—0
மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேப்ரோட், நாகர்கோவில்.

## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளி நாடு ரூ. 5—0—0

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார்தங்கவயல்

## பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

### பெண் ஏன் அடிமையானுள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணு 5.

### முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் K. M. பாலசுப்பிரமணியம் B.A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 5.

### நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பேர்ட்டிரண்ட்ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணு 3.

### மதம் என்றுல் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 2.

### கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின் தன்மைகளையும் உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணு 5.

### மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணு 3.

### நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாதவனுயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறர். விலை அணு 3.

### பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணும வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 3.

### "குடி அரசு கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், மேல் நாட்டுச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து வந்தபின் குடி அரசில் எழுதிய தலையங்கங்களையும், பல மகாநாடுகளில் பேசிய பேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணு 6.

### பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

இது பாவ மன்னிப்பின் பேரால் நடந்து வந்த அக்கிரமங்களை அனுபவத்தில் கண்டவரான பாதிரி சேனிக்யூ அவர்கள் தம் அனுபவத்தை ஆங்கிலத்தில் எழுதிய புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. இதைப் படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும், பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணு 3.

### பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் தத்துவத்தையும் இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 3

### மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இந் நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது விலை அணு 3.

### "மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

இந்நூல் சென்னை தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் குடி அரசில் தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகளை தொகுத்ததாகும். இது, நோயும் கடவுள் சக்தியும், மந்திரத்தால் நோய் தீருமா? மதங்களால் ஏதேனும் பயன் உண்டா?, மூட நம்பிக்கையின் கொடுமை என்பனபோன்ற பல அரிய விஷயங்களைக்கொண்ட சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணு 6.

இரண்டாம்பாகம்

சுமார் 116 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணு 5.

### நான் நாஸ்திகன் ஏன்?

(பகத்சிங் எழுதியது.)

இப் புத்தகமானது தோழர் பகத்சிங், அவர்கள் தான் எவ்வாறு நாஸ்திகரானர் என்பதுபற்றியும், ஏன் நாஸ்திகரானர் என்பது பற்றியும் லாகூர் சதிவழக்கு விசாரணைக்காலத்தில் சிறையிலிருக்கும்போது எழுதியதாகும். அருமையான கருத்துக்களும் தெளிவான உதாரணங்களும் கொண்டது. விலை அணு 3.

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அநுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)

விலே அணு 8.

## லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கை வீரராகிய V.I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலே அணு 4.

## பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.

விலே அணு 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலே அணு 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.

விலே அணு 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணு 4.

அயோத்தியாகாண்டம் அணு 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலே அணு 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலே அணு 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலே அணு 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலே அணு 4.

## போல்ஷ்விக் முறை.

விலே அணு 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். எ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலே அணு 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலே அரை அணு. வேண்டுவோர் 1½ அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும்.

விலே அணு 2.

## பர்னார்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னார்ட்ஷா அவர்கள் அமெரிக்காவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும்.

விலே அணு 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது.

விலே அணு ½.

## மநுநீதி விளக்கம்.

விலே அணு 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

விலே அணு 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

விலே அணு 2.

## சுயமரியாதைப் பாடல்

விலே அணு 2.

## கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலே அணு 2.

## சுயமரியாதை தாலாட்டு

விலே அணு 2.

## சோதிடப் புரட்டு

விலே அணு 2.

## கத்தோலிக்கர் வீண் கூச்சல்

விலே அணு ½.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணு ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.